மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் பன்முக ஆளுமை



முனைவர் கா.மு. பாபுஜி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் பன்முக ஆளுமை

முனைவர் கா.மு. பாபுஜி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின்
அறக்கட்டளைச் சொற்பொழிவு

(அறக்கட்டளை நிறுவியவர் : சிங்கப்பூர் கோவலங் கண்ணன்)

வரிசை எண் : 14 நாள் :

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Mozhi devneyap pavanarin panmuga alumai
Author	:	Dr. K.M. Bapuji Associate Professor of Tamil Head of the Department Ramakrishna Mission Vivekananda College (Autonomous) Chennai-600 004
General editor	:	Dr. P. Selvakumar Associate professor International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai - 600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai - 600 113 Ph: 22542992
Publication No.	:	736
Language	:	Tamil
Edition	:	First
Year of publication	:	2012
Paper used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of pages	:	x+102
No. of copies	:	1200
Price	:	Rs.50/- (Rupees Fifty Only)
Printed by	:	Lakshmi Agencies 23/11, Perumal Mudali Street, Royapettah Chennai -600 014
Subject	:	Literary criticism

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் கோ. விசயராகவன்
எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

அளவையியலோடு மேலை நாட்டுக் கோட்பாடுகளை யெல்லாம் உட்படுத்திய வாதத்தில் தமிழ்மொழியின் வேரை அடையாளம் காண்பித்தவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர். எண்ணத்திலும், மூச்சுக்காற்றிலும் தமிழுணர்வு வேண்டும் என்ற தேவையை வற்புறுத்தியதன் மூலம் தமிழைத் தழைக்கச் செய்து விரிவடையவும், மேன்மேலும் வளம் பெறவும் செய்ய அடித்தளம் வகுத்தவரும் பாவாணரே. உலக மொழிகளெல்லாம் அரசியல் சார்ந்தும், வணிகம் சார்ந்தும் தம்மைப் பரவலாக்கம் செய்து வருகின்றன. வேற்றொரு மொழியின் உருவாக்கமாகவும் பிற மொழிகளிடமிருந்து சொற்களையும், ஒலியையும் கடனாகப் பெற்று பயன்பாட்டிற்கு வந்த மொழிகளெல்லாம் அடிப்படையில்லாமல் உலகமயமாக்கலில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் பிறப்புரிமை பெற்று பல்வேறு மொழிகளை இவ்வுலகிற்கு அடையாளப் படுத்திய தமிழை; அதன் பரப்பைப் பிறமொழிக் குடும்பத்தோடு நோக்கீடு செய்து அதன் இயல்பையும்; காலத்தால் முற்பட்டது என்பதையும்; உலகிற்குச் செம்மையானதொரு பேச்சு இலக்கணப் பிறப்பை எடுத்துச் சொன்ன பெருமை மொழிஞாயிறுக்கு உண்டு என்றால் அது மிகையாகாது.

இலக்கிய மொழி இலக்கணம், இலக்கண மொழி இலக்கியம், சமய மொழி இலக்கணம், உலக மொழிகளுக்குப் பயணித்த தமிழ்ச் சொற்கள், வளம்பெற்ற பிற உலக மொழிகளுக்குக் கலவு போன சொற்கள், மொழி வேரினச் சான்றுகள், இலக்கணத் திருத்தங்கள், சொற்பிறப்பு வரலாறு, திராவிடம் என்ற இனப் பிறப்பு வரலாறு, தமிழ்ச் சொல் பரப்பு உண்மை, பிறமொழிச் சொற்களைக் களைதல், சொற் பிறப்பு அகராதிகள், உரைகளைத் திறனாய்வு செய்தல் என்றெல்லாம் தனது ஆய்வினை நிகழ்த்தி தமிழ்மொழிக்கு அரணாக விளங்கியவர் மொழிஞாயிறு அவர்கள். அவரின் சிந்தனைகளும் எழுத்துக்களும் மொழி ஆய்வுலகிற்கு வலுசேர்க்கிறது. இனமான தமிழ்மொழியை ஆற்றல் மிக்கதாக அங்கீகரிக்கச் செய்து அறிவுலகிற்குத் தூண்டுதலாக இருந்த மொழிஞாயிரைப்பற்றி நூல்களின் வழி பெற்ற செய்திகள்

பலவாயினும், புதிய நோக்கில் அவரது எழுத்துக்களைப் புரிந்து அவரை உரையாசிரியராகவும், வரலாற்று ஆய்வாளராகவும், மொழியியல் வல்லுநராகவும், திறனாய்வாளராகவும், புதிய கோணங்களில் உரிய விளக்கத் தரவுகளுடன் வெளிவந்திருக்கும் இந்நூல் மிகவும் பெருமைக்குரியது. 'மொழிஞாயிறு தேவநேய பாவாணரின் பன்முக ஆளுமை' என்ற பொருண்மையில் எழுதப்பட்ட இந்நூல் தமிழ்மொழி ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையிலும் பாவாணரின் எழுத்துச் சிந்தனைகளை அறிய முனைவோருக்கு நல்ல நூலாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் பெயரில் நிறுவப்பட்ட அறக்கட்டளையின் வழி வெளிக்கொணர உழைத்த நிறுவன பேராசிரியர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலின் கருத்தைச் செப்பமுற எழுதி, அறக்கட்டளைச் சொற்பொழிவாக்கி நிறுவன வெளியீடாகத் தந்த சென்னை விவேகானந்தா கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் கா.மு. பாபுஜி அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்து தக்கதொரு சிறந்த நூல் வெளிவரத் துணைநின்ற இணைப் பேராசிரியர் முனைவர் பெ. செல்வக்குமார் அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, தொல்லியல், விளையாட்டு (ம) இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி (ம) பண்பாட்டுத் துறை, சட்ட அமைச்சர் என்.ஆர். சிவபதி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இவ்வறக்கட்டளையின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த லட்சுமி ஏஜென்ஸீஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

நன்றியுரை

பாவாணர் தொடர்பாகப் பல்வேறு நூல்களைப் பயிலும் வாய்ப்பு இந்த அறக்கட்டளை மூலம் எனக்குக் கிடைத்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்தும் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு என்னை அழைத்து இப்பணி புரியப் பணித்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்களுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விஜயராகவன் அவர்களுக்கும் என் நன்றி என்றுமுரியது.

பாவாணர் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் பெ.செல்வக்குமார், (இணைப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) அவர்கள்தாம் இந்நூல் உரிய காலத்தில் வெளிவர பெருந்துணை புரிந்தவர். காணும் போதெல்லாம் என்னை நெருக்கி இப்பணி செய்யத் தூண்டிய பெருந்தகையாளர் அவருக்கு என் அன்பான நன்றி உரியது.

இவ்வாறான அரிய ஆய்வு நூலை எழுதத் துணைநின்ற ரோஜா முத்தையா நூலகம், மறைமலையடிகளார் நூலகம், சென்னை விவேகானந்தா கல்லூரி நூலகம் ஆகியவற்றையும் நன்றியோடு குறிப்பிட வேண்டும். இந்நூலாக்கத்திற்கு ஏற்ற சூழலை வழங்கிய நான் பணிபுரியும் விவேகானந்தா கல்லூரி என்றும் நினைவுகூரத்தக்கது. இந்நூல் உருவாக்கத்திற்கு உரிய நூல்களைஅளித்து இது குறித்து அரிய உரையாடலை முன்வைத்து கருத்துரைத்தவரான இளவல் கா.இரவிச்சந்திரன் அவர்களுக்கு என் நன்றியறிதலை உரித்தாக்குகிறேன். இதை நேர்த்தியான முறையில் பிழைதிருத்தம் செய்த முனைவர் தசரதன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கா.மு. பாபுஜி

ஆசிரியர் குறிப்பு



முனைவர் கா.மு. பாபுஜி, திருவள்ளுவர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் அமைந்துள்ள கொடிவலசை என்னும் சிற்றூரில் க.முனுசாமி, கமலம்மாள் என்போருக்கு மகனாக 31.12.1961ஆம் ஆண்டு பிறந்தார். அத்திமாஞ்சேரிப்பேட்டையில் தனது பள்ளிக்கல்வியை முடித்த இவர், சென்னை நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் பட்டபடிப்பை முடித்தார். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் முதுகலை ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் ஆகியவற்றைப் பெற்றார்.

தற்போது, சென்னை இராமகிருஷ்ணாமிஷன் விவேகானந்தா கல்லூரியில் இணைப்பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். சென்னையிலுள்ள பல்வேறு தன்னாட்சிக் கல்லூரிகளின் பாடத்திட்டக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார். இவவரின் மேற்பார்வையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆய்வில் நிறைஞர் பட்டப்பேற்றை முடித்துள்ளனர்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட கருத்தரங்களில் கலந்து கொண்டுள்ளார். ‘சிலப்பதிகாரத்தில் விழாக்கள்’ என்பது இவரின் குறிப்பிடத்தக்க நூலாகும். தமிழ்த் திறனாய்வுப் புலத்தில் தொடர்ச்சியாக படித்தும் இயங்கியும், பலரை இயக்கியும் வருபவர்.

பொருளடக்கம்

		பக்கம்
	முகவுரை	
1.	உரையாசிரியர் தேவநேயப் பாவாணர்	1
2.	வரலாற்று ஆய்வாளர் தேவநேயப் பாவாணர்	38
3.	மொழியியல் வல்லுநர்–பாவாணர்	64
4.	திறனாய்வாளர்–தேவநேயப் பாவாணர்	80
	முடிவுரை	
	துணைநூல்கள்	

முன்னுரை

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தமிழ் ஆய்வு புலத்திற்குள் தக்க அடையாளத்தைப் பெறாதவராகவே அமைகிறார். பாவாணருக்குள் இழையோடிய தமிழ்ப்புலமை பல்வேறு கூறுகளாக வெளிப்பட்டது. பாவாணரைத் தமிழ் இன மேன்மை உயர்த்தி பேசிய ஒருவர் என்ற குறுகிய வட்டத்திற்குள் திறனாய்வாளர் பலர் பேசுகின்றனர், எழுதுகின்றனர். அவர் இயங்கிய ஒட்டுமொத்தமான பெருவெளி காணப்பெறவில்லை. பாவாணர் என்னும் தமிழ் மேதமையிடம் இழையோடிய பன்முக (Multi faced) ஆளுமைகளை ஒருவாறு தொட்டுக் காட்டும் முயற்சியாக இந்நூல் அமைகிறது.

இலக்கணம், மொழிநூல், வரலாறு, மானுடவியல், போன்ற பல்வேறு சிந்தனைப் பரப்புகளில் இயங்கிய பாவாணரை ஒருசேர மதிப்பிட இயலுமா என்பது சிந்தனைக்குரியது. அவரிடம் குடிகொண்ட ஆளுமைத்திறனை, பரந்த பட்டறிவை, ஆழங்காற்பட்ட பல்துறை புலமையை நிறுத்து எடைபோடுவது என்பது ஒரு பல்கலைக் கழகம், அல்லது ஆய்வு வட்டம் செய்ய வேண்டிய தொகுப்புப் பணி. தனி ஒரு மனிதரால் இது இயலாத செயல்பாடு. நீண்ட விவாதத்திற்குரிய முன்வரைவாக அல்லது தொகுப்புப் பணியாக மட்டுமே இந்நூல் முன்வைத்துள்ளது.

பாவாணர் என்ற தனிப்பெரும் சிந்தனையாளரைப் பின்வரும் செயற்பாட்டாளராக அடையாளப்படுத்திப் புரிந்து கொள்ள இயலும். இது முற்றிலும் அவருடைய படைப்புகள் வழியே அவரை இனங்காணும் முயற்சி. மேலும் பாவாணரின் எழுத்துகளுக்கும் வாழ்விற்குமான இடைவெளி மிகக் குறைவு என்பதைத் தமிழுலகம் நன்கறியும்.

ஆகவே, பாவாணரைப் பின்வரும் ஒரு சில தலைப்புகளுள் பொருத்தி புரிந்து கொள்ள இயலும். இது முற்றிலும் புரிதலை நோக்கிய ஒரு முயற்சியே.

அ. பாவாணர் - ஓர் உரையாசிரியர்

ஆ. பாவாணர் - வரலாற்றாய்வாளர்

இ. பாவாணர் - மொழியியலறிஞர்

ஈ. பாவாணர் - திறனாய்வாளர்

மேற்குறித்த இவை தவிர அவரை மானுடவியலாளர், இனவரைவாளர், இலக்கணி என்னும் பல்வேறு தலைப்புகளுக்குள் அடக்க இயலும். ஆயினும் இவற்றை ஒரு சேரத் தொகுத்து உரையாசிரியராகவும், வரலாற்றாய்வாளராகவும், மொழியியலறிஞராகவும், திறனாய்வாளராகவும் வைத்து விளக்க இந்நூல் முயலுகிறது.

உரையாசிரியர் தேவநேயப் பாவாணர்

தேவநேயப் பாவாணர் மொழியியலறிஞர்; வரலாற்று வரைவாளர் வேர்ச்சொல் ஆய்வாளர் என்னும் கோணங்களில் அவரைப் பலர் அறிவர். ஆனால் அவரை மிகச் சிறந்த உரையாசிரியராக அறிந்து கொண்டோர் மிகச் சிலரேயாவர். பாவாணர் திருக்குறளுக்குத் **திருக்குறள் தமிழ் மரபுரை** என்னும் பெயர் தாங்கிய உரையொன்றை வரைந்துள்ளார்.

இவ்வுரை புலவர் குழந்தை உரை வெளியான பிறகு வெளியான உரையாகும். திருக்குறளை எளிமைப்படுத்தி உரை வரைதல் என்னும் பொதுப் போக்கும், பொதுக் காரணமும் அல்லாமல் ஒரு கோட்பாடு சார்ந்து தமது உரையைப் பாவாணர் உருவாக்கியுள்ளார். இந்த உரையில் பாவாணரின் பரந்துபட்ட பட்டறிவும், மொழியாற்றலும், நூல்வாசிப்பும் விளக்கமாகத் தெரிகின்றன. இவற்றைத் தொகுத்துப் பாவாணரின் உரைத்திறன் எவ்வாறெல்லாம் தொழிற்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வு தனது கருதுகோளாகக் கொண்டுள்ளது.

பாவாணர் உரையின் நோக்கம் தொடங்கி உரையின் பல்வேறு சிறப்புக் கூறுகளை ஒவ்வோர் உட்தலைப்புகளின் கீழும் ஒரு பருந்துப் பார்வைவழி இந்நூல் தொகுக்க முயலுகிறது. பாவாணரின் உரைத்திறனை மதிப்பீடு செய்யப் பிற உரையாசிரியர்களின் உரைப்பின்புலத்தோடு ஆயப்புகுவதே சாலச் சிறந்த போக்கு என்பதால் அவ்வழி இந்நூல் செயற்படுகிறது.

திருக்குறளும் உரைகளும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகுதியான உரை வேறுபாடுகளையும், உரை வரைவுகளையும் கொண்ட நூல் திருக்குறள். திருக்குறளுக்கு எழுந்துள்ள உரைகளைப் புரிதல் நோக்கி மரபுரைகள் என்றும் புத்துரைகள் என்றும் பிரிக்கலாம். மரபுரைகள் கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னால் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குள் (இன்றைய வழக்கிலுள்ள உரைகள்) எழுதப்பட்டிருக்கலாம் என்பார் கு.ச.ஆனந்தன் **(திருக்குறளின் உண்மைப்பொருள், ப.23).**

மரபுரைகளை வரைந்தவர்களாகப் பதின்மரை இலக்கிய மேற்கோள்கள் காட்டுகின்றன. குறிப்பாகத் தொண்டை மண்டலச் சதகம் 41ஆம் செய்யுள் திருக்குறளுக்கு உரை வரைந்த பதின்மரின் பட்டியலைத் தொகுத்துக் கூறுகின்றது.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமே லழகர் - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்
நூற்கு எல்லை உரைசெய்தார் இவர்.

மேற்சுட்டிய பாடலிலிருந்து தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பருதியார், பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகியோர் திருக்குறளுக்கு உரை வரைந்துள்ளனர் என அறியலாகிறது. இவர்களுள் மணக்குடவர், காலிங்கர், பரிப்பெருமாள், பருதியார், பரிமேலழகர் ஆகியோரின் உரைகள் இன்று கிடைக்கின்றன.

இவ்வைந்து உரை நூல்களிலும் காலத்தால் முந்தைய உரை என மணக்குடவர் உரையையும், காலத்தால் பிந்தைய உரையாகப் பரிமேலழகர் உரையையும் கருதுவர்.

மரபுரைகளின் பதிப்பு வரலாறு

மணக்குடவர் உரையை முதன்முதலில் வ.உ.சிதம்பரனார் 1917இல் வெளியிட்டார். இவருக்குப் பின்னர் பொன்னுசாமி நாட்டார் (1925 இலும், மலர் நிலையத்தினர் 1938 இலும் இவ்வுரையைப் பதிப்பித்துள்ளனர். மணக்குடவர் உரைப்பதிப்பிற்கு முன்னதாகவே இராமானுஜ கவிராயர் 1840இல் பரிமேலழகர் உரையைப் பதிப்பித்தார். மணக்குடவர் உரை வெளியான பின்னரே பரிமேலழகர் உரையின் குறை நிறைகள் ஆய்வாளர் பலராலும் ஆய்விற்குட்படுத்தப்பட்டன.

பருதியார் உரை 1991இல் வெளியிடப்பெற்ற **திருக்குறள் உரைக் கொத்து** என்னும் தொகுப்பு நூலில் காணக்கிடைக்கிறது. 1948 திருப்பதி கீழ்கலை ஆராய்ச்சிக் கழகமும், 1959 இல் திருப்பதி தேவஸ்தானமும் இவ்வுரையை வெளியிட்டுள்ளது கருதத் தக்கது. இவருடைய உரை பெரும்பான்மையும் வடசொற்கள் கலவாமல் இனிய தமிழில், எதுகை மோனைகளுடன் புனையப் பெற்றுள்ளது.

பரிப்பெருமாளின் உரை 1991 இல் திருப்பனந்தாள் காசிமடம் வெளியிட்ட **திருக்குறள் உரைக் கொத்து** என்னும் நூலினுள்ளும்

திருக்குறள் உரை வேற்றுமை என்ற தொகுப்பிற்குள்ளும் அமைந்துள்ளது. இவருரை பெரும்பான்மையும் மணக்குடவரின் உரையைத் தழுவியதாகவே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இதற்குப் பின்னர் இவ்வுரைகள் அனைத்தும் **திருக்குறள் உரை வேற்றுமை** என்னும் தலைப்பில் இரா.சாரங்கபாணியால், 1989 இலும், 1992 இலும் வெளியிடப் பெற்றன. **திருக்குறள் உரை வளம்** என்னும் பெயரில் ச.தண்டபாணி தேசிகரும் **திருகுறள் உரைக் களஞ்சியம்** என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் வெளியிட்டுள்ளன. கோவை இராமகிருஷ்ணா மிஷன் கி.வா.ஜ.வைப் பதிப்பாசிரியராகக் கொண்டு **திருக்குறள் ஆராய்ச்சியுரை** என்னும் நூலை 1963 இல் வெளியிட்டுள்ளது. இவை யாவும் பண்டைய தமிழ் மரபார்ந்த உரைகளாகும்.

புத்துரைகளின் தோற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த தொழிற்புரட்சியுடன் கூடிய நவீனக் கருவிகளின் வருகையால் புதிய கருத்துகளும், சித்தாந்தங்களும் தோன்றின. இவை காட்டிய கருத்துகளின், சிந்தனை எழுச்சிகளின் அடிப்படையில் பல்வேறு புத்துரைகள் உருவாகின. அவை முன் நிலவிய மரபார்ந்த உரைகளை ஏதேனும் ஒரு காரணத்தை முன்வைத்து மறுத்து எழுந்தமையால் இவை புத்துரைகள் என அழைக்கப் பெற்றன.

இத்தகைய புத்துரைகளுள் ஒன்றாகவே தேவநேயப் பாவாணரின் தமிழ் மரபுரை திகழ்கின்றது. எனவே அவரின் சமகாலத்தில் அல்லது அவருக்கு முந்தைய காலத்துப் புத்துரைகளின் பின்புலம் என்பது பாவாணரின் உரையைத் தெளிவாகவும் வரலாற்றுப் பண்பாட்டு நோக்கிலும் புரிந்து கொள்ளத் துணை செய்யும். ஆகவே புத்துரைகளை எளிமையான பகுப்பு முறை கருதிப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. பகுத்தறிவு சார்ந்த உரைகள்
2. தனித்தமிழ் சார்ந்த உரைகள்
3. பொதுவுடைமை சார்ந்த உரைகள்

இவை தவிர்த்து ஆனால் இவற்றின் உட்கூறுகளை உள்வாங்கி எழுதப்பட்ட பல உதிரி உரைகளும் வெளிவந்திருந்தன. அவைகளுள் குறிப்பிடக்கூடியனவாக திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த

நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட கா.சு.பிள்ளை உரை, மு.வ.உரை, 1954 இல் இன்ப நிலையம் வெளிக் கொணர்ந்த வெ.இராமலிங்கர் வரைந்த **திருக்குறள் புதிய உரை** ஆகியவற்றைக் கூறலாம்.

1. பகுத்தறிவு சார்ந்த உரைகள்

பெரியார் ஈ.வே.ராவின் சிந்தனைகளைத் தழுவி உருவான உரைகள் பகுத்தறிவு உரைகள் எனப்பட்டன. பெரியார் **சுய மரியாதை** இயக்கம் முன்வைத்த பகுத்தறிவு என்னும் கருத்தியலை (idiology) இவ்வுரைகளின் ஊடே காண இயலும். குறிப்பாகக் கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பெண்ணின் பெருமை, ஆரிய ஆளுகை மறுப்பு ஆகியனவற்றை இத்தகு உரைகளில் பரக்கக் காண இயலும்.

இவ்வகையில் முதலில் வந்த உரையாகத் **திருக்குறள் குழந்தையுரை** என்பதைக் கூறலாம். இவ்வுரை 1949 இல் ஈரோட்டில் இருந்து சிவலிங்கப் பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது. 1961 இலும் இவ்வுரையின் நான்காம் பதிப்பு வெளியானது. அன்றைய நாள்களில் இவ்வுரை திராவிட இயக்கத்தினரிடையே பெரிதும் போற்றப் பெற்றது.

இக் கருத்துகளின் பின்புலத்திலிந்து 1991 இல் **நாவலர் உரை** என்னும் தலைப்பில் நாவலர் நெடுஞ்செழியன் உரையெழுதிய திருக்குறள் வெளியானது.

இவ்வுரையில் முகவுரை 33 பக்கங்கள் கொண்ட பெரும் கொள்கை முழக்கமாகக் காட்சி தருகிறது. பாவேந்தர் பாரதிதாசன் நடத்திய குயில் இதழில் **வள்ளுவர் உள்ளம்** என்ற தலைப்பில் திருக்குளின், முதல் 85 குறள்களுக்கு அவர் எழுதிய புத்துரைகள் தொகுக்கப்பட்டு 1992 இல் சென்னை பாரிநிலையத்தின் வாயிலாக வெளியானது. இவ்வுரையே முனைவர் நா.செங்கமலத் தாயார் பதிப்புரையுடன் புதுச்சேரியிலும் வித்தகம் பதிப்பாக 1994 இலும் வெளியானது. 1995 இல் விழுப்புரம் முத்துப் பதிப்பகம் வெளியிட்ட அரிமதி தென்னவன் எழுதிய **திருக்குறள் மனித நேய உரை** கையடக்கப் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது. பகுத்தறிவுக் கொள்கை சார்ந்த உரைகளாக இவையே இன்று அறியக் கிடக்கின்றன.

2. தனித்தமிழ் சார்ந்த உரைகள்

தனித்தமிழ் இயக்கம் கால்கொண்ட பிறகு இவ்வகையான உரை எழுதும் போக்கு உருவானது. பிறமொழிக் கலப்பின்றிக் கருத்தும்,

மொழியும் அமைய வேண்டும் என்பதே இவர்களின் முதன்மை சான்ற குறிக்கோள். அவ்வகையில் இத்தகு உரைகள் அமைந்தன.

தனித்தமிழ்த் தேவையை மறைமலையடிகள், திரு.வி.க. போன்றோர் வலியுறுத்திய போதும் திருக்குறளில் தேவநேயப் பாவாணர் உரையே இத்தகு கருத்துகளைத் தாங்கி வெளியான உரை எனலாம். 1969 இல் காட்டுப்பாடி நேசமணிப் பதிப்பகம் **திருக்குறள் தமிழ் மரபுரை** என்னும் பெயரில் இவ்வுரையைக் கொணர்ந்துள்ளது.

பாவாணருக்குப் பின்னர் அவர் வழியிலேயே 1990 இல் தனித்தமிழ்ப் பார்வை கொண்டு **திருக்குறள் வாழ்வியலுரை** வெளியானது. இவ்வுரையை இரா.இளங்குமரனார் வரைந்துள்ளார். இந்நூலை 1997 இல் திருச்சி திருவள்ளுவர் தாதுச்சாலையும், 1999இல் சென்னை வர்த்தமானன் பதிப்பகமும் வெளியிட்டுள்ளன. இவ்வகையில் கூறத்தக்க மற்றுமொறு உரையாக 1963 இல் இரண்டாம் பதிப்பாக வெளியான சி.இலக்குவனாரின் **திருக்குறள் எளிய பொழிப்புரையும்** கூற இயலும்.

3. பொதுவுடைமை சார்ந்த உரை

பொதுவுடைமை மெய்யியலை உள்வாங்கி அதன் பின்புலத்திலிருந்து இலக்கியத்தை அணுகும் போக்கு தமிழில் எழுபதுகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன் ஒரு கூறாக எளிய மொழிநடை, புதிய பொருட் கோடல் முறையில் எஸ்.ராமகிருஷ்ணனின் உரையை 1991 இல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (NCBH) வெளியிட்டது. இவ்வுரை **டாக்டர் எஸ்.ஆர்.கே. உரை** என அழைக்கப் பெறுகின்றது.

இவ்வாறான விரிந்த வரலாற்றுப் போக்கில் பாவாணர் உரை 1969 இல் வெளியானது. பரம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் தவத்திரு குன்றக் குடி அடிகளார், சி.இலக்குவனார் ஆகியோர் பங்கேற்றனர். இம் மாநாட்டில் **திருக்குறள் மரபுரை** வெளியிடப்பட்டது.

பாவாணரின் திருக்குறள் தமிழ் மரபுரையின் நோக்கம்

பொதுவாகவே ஒரு நூல் உருப்பெறுவதற்கான காரணம் ஒன்று உண்டு. அதனையே அந்நூல் தனது நோக்கமாக முன்னிறுத்தும், அவ்வகையில் பாவாணரின் திருக்குறள் மரபுரையில் நோக்கம் யாது என்பது விடைதேடக்கூடிய வினாவாகிறது. பாவாணர் தனது முன்னுரையில் பன்னிரு உட்தலைப்புகளில் இந்நூலின் நோக்கம்

குறித்தான செய்திகளைப் பதிவு செய்துள்ளார். அப்பன்னிரு தலைப்புகளும் பின்வரும் நிரல்வழி அமைக்கப்பெற்றுள்ளன.

1. தமிழ் நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டமை
2. தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள்
3. தமிழிலக்கியப் பல்வேறு பொருட்பாகுபாடு
4. திருவள்ளுவர் வரலாறு
5. திருவள்ளுவர் காலக் குமுகாய நிலை
6. திருவள்ளுவர் காலச்சமய நிலை
7. திருவள்ளுவர் திருக்குறள் இயற்றிய நோக்கம்
8. திருக்குறட் சிறப்பு
9. திருக்குறள் நூல்வகை
10. பாயிர விளக்கம்
11. திருக்குறள் நூற்பகுப்பு
12. பரிமேலழகரின் நச்சுக் கருத்துகள்

(திருக்குறள் தமிழ் மரபுரை.ப.34)

இவற்றுள் பாவாணரின் உரை கூறும் பாங்கும் நின்று நடுவுநிலைமையைத் தேர்ந்தெடுக்கும் பாங்கும் போற்றற்குரியன.

இதில் பன்னிரண்டாவதாக இடம் பெறும் **பரிமேலழகரின் நச்சுக்கருத்துகள்** என்னும் உட்தலைப்பில் பத்துக் குறட்பாக்களுக்குரிய உரைகளைக் காண்பித்துப் பரிமேலழகரை மறுக்க வேண்டிய காரணத்தைத் திட்பமும் தெளிவுமாக நிறுவுகிறார்.

பரிமேலகழரை மறுக்க வேண்டிய காரணங்களுள் முதன்மையானவையாகப் பாவாணர் முன்னிறுத்தியவை நான்கு: அவை.

1. வடநூல் கருத்துகளையும் கொள்கைகளையும் திருக்குறளுள் புகுத்தி உரைகண்டமை
2. மனுதர்மத்தை ஏற்ற இடங்களில் பொருத்திக் காட்டியுள்ளமை
3. உள்நோக்கத்தோடே சமணசமயத் தெய்வப் பெயர்கொண்ட இடங்களைச் சைவ சமய புராணக் கதைகளோடு இணைத்தமை
4. வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தி உரைகண்டமை

என்பனவாகத் தொகுக்கலாம். இவற்றை மறுப்பதற்குத் தேவநேயப்பாவாணர் மாற்று உரை ஒன்றை எழுதத் துணிந்தார். அந்த உரைக்குத் தேவையான தரவுகளைத் தமக்குமுன் பதிப்பிக்கப் பெற்றுள்ள மணக்குடவர், பரிப்பெருமாள். காலிங்கர். பருதி உரைகளிலிருந்து திரட்டி உரைவரைகிறார். பரிமேலழகருக்கு முன்னரே இயங்கிய ஓர் உரைவரையும் மரபை அல்லத குழுவை தமக்கானதாகத் தேர்ந்து கொண்டமையில்தான் பாவாணரின் அரசியல் நிலைப்பாடும் புலமை நிலைப்பாடும் இணைகின்றன.

பாவாணரின் உரைவரைவிற்குள் வெளிப்பட்டுள்ள அவரின் தமிழ்ப்புலமைச் செயற்பாட்டையும். வேர்சொல் நாடும் திறத்தையும் திருக்குறள் முழுமையும் காண இயலும். இவற்றிலிருந்து மிகச்சிறந்த உரைவரையும் திறன் அவருக்குள் எவ்வாறு தொழிற்பட்டது என்பதையே இவ்வியல் தொகுத்தும் பகுத்தும் காண்கிறது.

தேவநேயப் பாவாணரின் மறுப்புகள், சொற்களுக்குப் பொருள் கூறும் திறன் ஆகிய முதன்மையான முரண்கொள்ளும் இடங்களில் எவ்வாறு பயணித்துள்ளன என்பதை இனிக் காணலாம்.

பரிமேலழகரை மறுக்கும் இடங்கள்

திருக்குறளுக்குப் பரிமேலழகர் தொடங்கிப் புலவர் குழந்தை ஈறாகப் பலர் உரை வரைந்துள்ளனர். தேவநேயப்பாவாணர் இவ்வகையில் திருக்குறளிற்கு உரை கண்டுள்ளார். **திருக்குறள் தமிழ் மரபுரை** என்று தலைப்பிடப்பட்டதாய் அவ்வுரை வெளியாயிற்று. பாவாணர் உரை வரையக் காரணமாய் அமைவதில் முதன்மையானது பரிமேலழகரின் கருத்துகளுக்கு மறுப்புக் கூற வேண்டும் என்பதேயாகும். இதைக் குறளினுள் பலவிடங்களில் காண இயலும்.

பரிமேலழகர் உரை வடமொழிச் சார்பு கொண்டதாகவும், திருக்குறளின் உண்மைப் பொருளுக்கு எதிராகவும் இருப்பதைப் பாவாணர் பல இடங்களில் சுட்டிக் காட்டகிறார். **பரிமேலழகரின் நச்சுக் கருத்துகள்** என்னும் தலைப்பில் பன்னிரு மேற்கோள்களைப் பரிமேலழகர் உரையிலிருந்து பாவாணர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவை அனைத்திற்கும் மேலாகத் தமிழ் மரபிற்கு ஏற்ப உரையொன்றை வரையவேண்டும் என்ற பாவாணரின் உள்ளக்கிடக்கையை முதன்மைக் காரணமாகக் கூறலாம். மொழி

ஆராய்ச்சியாளர், வரலாற்று வரைவாளர், இலக்கணப் புலமையாளர் ஆகியவற்றில் ஆழ்ந்தகன்ற புலமைசான்ற பாவாணர் திருக்குறளுக்கு உரை வரைந்ததன் மூலம் உரையாசிரியர் என்னும் நிலையைப் பெறுகிறார்.

மரபுவழி இனி, பாவாணரின் தமிழ் மரபுரை மிளிரக்கூடிய இடங்களையும் உரைத்திறமையும் நிரல்படுத்திக் காணலாம்.

திருக்குறளில் முதற்குறள் குறித்துப் பல்வேறு கருத்துகள் தமிழாய்வு உலகில் காணப்படுகின்றன. **முதற்குறள் சங்கற்ப நிராகரணம்** என்னும் ஒரு நூல் தமிழில் எழுதப்பட்டுள்ளது. பாவாணர் முதற்குறளுக்கு உரையெழுதத் தொடங்கு முன்னரே வடசொற்கள் குறித்த கருத்துகளைத் தெளிவுபடுத்துகிறார். **கடவுள் வாழ்த்து** என்னும் அதிகாரத் தலைப்பிற்கு மாற்றாக முதற்பகவன் வழுத்து எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கான காரணத்தைப் பின்வரும் மேற்கோள் தெளிவுறுத்துகிறது.

அக்காரணமும் அளவையியல் (Logic) முறை பிறழாமல் காட்டப்படுவது குறிக்கத் தக்கது.

> **இது கடவுள் வணக்கம். கடவுள் என்னும் சொல் இம்முதலதிகாரப் பத்துக் குறள்களுள் ஒன்றிலேனும் வாராமையானும், முதற்குறளில் ஆதிபகவன் என்னும் பெயரே குறிக்கப் பெற்றிருத்தலானும் கடவுள் வாழ்த்து இங்கு முதற்பகவன் வழுத்து எனப் பெற்றது.**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை. தொ.1.ப.37)

பகவன் என்னும் சொல்லைத் தென்தமிழ்ச் சொல்லாகக் காண்கிறார் பாவாணர். இதற்குப் பகுத்தளிப்பவன், படியளிப்பவன் என்று பொருள் காட்டுகிறார். இச்சொல் முதலில் கடவுள் என்பதையே பொதுவாக முற்காலத்தில் சுட்டியதாகவும் பின்னரே பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகியோருக்கும், அருகன், புத்தன் ஆகியோருக்கும் பெயராகியது என்றும் பாவாணர் உரை வரைந்துள்ளார். சமணர்களால் பகவன் என்னும் சொல் கையாளப்பட்டு இருப்பதால் சமணத்தில் **விருச்சுத் தேவரைக்** குறிப்பதாகச் சமண உரைகள் குறிப்பிடுகின்றன. (அ. சக்கரவர்த்தி நாயினார், **திருக்குறள் சமண உரை**). இதனையும் பாவாணர் உரை மறுக்கும் முகமாக அமைந்துள்ளது. **இம்முதற்**

குறட்பாவில் எழுத்தெல்லாம் என்பதற்கு உரைவரைந்த பரிமேலழகர் தமிழிலும், வடமொழியிலும் அகரமே முதல் எழுத்து ஆகவே பன்மையில் எழுத்தெல்லாம் என்றார் என்று உரைகூறுகிறார்.

> **தமிழ் எழுத்திற்கே அன்றி வட எழுத்திற்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம் என்றார்**
>
> (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.10)

இதனை நுட்பமாக உணர்ந்த பாவாணர் பரிமேலழகரை மறுக்கும் வண்ணமாக, எழுத்துகளுக்கெல்லாம் தலைமை சான்றதாகவும், மற்றைய உயிரெழுத்துகளோடு நுண்ணியதாகக் கலந்தும், எல்லா மெய்யெழுத்துகளையும் இயக்கியும் அமைவதால் அதனை **எழுத்தெல்லாம்** என்று குறித்தார் எனப் பொருள் கூறுகிறார்.

ஆதி என்னும் சொல் வடசொல் எனக் கூறி அச்சொல்லுக்குப் பதிலாக ஆங்கு என்னும் உவம உருபு இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்பது பாவாணர் கருத்து. பாவாணரின் நோக்கில் முதல்குறள் பின் வருமாறு எழுதிக் காட்டப்பட்டுள்ளது.

> **அகர முதல வெழுத்தெல்லாம் ஆங்குப்**
> **பகவன் முதற்றே உலகு** (திருக்குறள் மரபுரை,ப.38)

மலர்மிசை ஏகினான்

மலர்மிசை ஏகினான் என்னும் இடத்தில் பாவாணர் உரை பரிமேலழகரிலிருந்து வேறுபடுகிறது. பரிமேலழகர் **மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார்** என்று எழுதுகிறார். மலரின் கண் என்பதற்குப் **பூமேல் நடந்தான்** என்று பொருள் உண்டு; இப்பெயர் அருகன் என்ற சமணத் தெய்வத்தையே குறிக்கும் என்பது பாவாணர் கருத்து. இதற்கு ஏற்ப சிலப்பதிகாரத்தில் காணலாகும் மேற்கோளையும் காட்டுகிறார். **மலர்மிசை நடந்தோன்** (சிலப். 10:204).

இப்பொருள் சமணஉரைகள் கூறும் பொருளும் ஆகும். இதனைப் பரிமேலழகரே குறித்தும் சென்றுள்ளார்.

> **பூமேல் நடந்தோன் என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர்**
>
> (திருக்குறள் பரி.உரை, ப.12)

மலர்மிசை ஏகினான் என்னும் சொல்லிற்குச் சமணத் தெய்வமாகிய அருகன் பெயரையுடையதாகப் பாவாணர் உரை கூறியபோதும், சமணர்தம் சமயம் பொய்யானது என்னும் தம் நிலைபாட்டையும் குறிக்கத் தவறவில்லை.

> **சமணர்தம் பொய்யான சமயத்தை விட்டுவிட்டு மெய்யான கடவுளை வணங்க வேண்டுமென்பது இக்குறளின் உட்குறிப்பு**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.41)

இவ்வாறு உரைகூறும் பாவாணர் இலக்கணப் பகுதிகளில் பெரும்பான்மையும் பரிமேலழகரோடு ஒத்திசைவு கொள்வதும் சுட்டிக்காட்டத் தக்கதாகும். சான்றாக,

அடி சேர்தல் – என்பதற்கு **இடைவிடாது நினைத்தல்** என்று பரிமேலழகர் கூற, இடைவிடாது நினைத்து அதற்கேற்ப ஒழுகுதல் என்கிறார் பாவாணர். ஏகினான் என்னும் சொல் விரைபொருள் கருதி என்று தொல்காப்பியரின் சொல்லியல் நூற்பாவில், வினையியலில் 44 நூற்பாவை மேற்கோளாகக் காட்டும் பரிமேலழகரையே பாவாணரும் தழுவி உரை கூறுகிறார்.

> **அடியாரின் உள்ளத் தாமரை நோக்கி ஏகுவானை ஏகினான் என்று இறந்த கால வாய்பாட்டாற் கூறியது, விரைவு பற்றிய கால வழுவமைதி அடிசேர்தல் இடைவிடாது நினைத்து அதற்கேற்ப ஒழுகுதல்**
>
> (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.41)

இதன்வழி பாவாணர் பரிமேலழகரின் கருத்துகள் மீது (Ideology) பெரும் எதிர்ப்பையும் மொழிமீதான அவரின் புலமையைத் தழுவியுமுள்ளார் என்பதை அறிய இயலுகிறது.

பாவாணர் உரையில் பரிமேலழகரை மறுக்கும் இடங்களில் பலவிடத்து சமணர் உரையே அவருக்குத் துணை நின்றுள்ளது. **பொறிவாயில் ஐந்து அவித்தான்** என்று வரும் சொற்றொடருக்கு உரை எழுதும் போதும், **ஐந்தவித்தான்** என்னும் பெயரும் சமணரை வயப்படுத்துமாறு சமண நெறியினின்று எடுத்தாண்டதே. **ஐவரைவென்றோன்** என்று இளங்கோவடிகள் கூறுதல் காண்க (சிலப்.10:168) என்று எழுதிச் செல்கிறார். இதன் மூலம் சமணம்

தொடர்பான சமயவியலை (Theology) உடன்பாட்டோடு அணுகியுள்ளார் என்பது பொருளன்று.

சில குறட்பாக்களில் வந்துள்ள வடமொழி அணிப்பெயர்களுக்கு இயைந்த தமிழ்ப் பெயரைகளைச் சுட்டும் பாங்கும் காணலாகிறது. குறிப்பாக எட்டாம் குறளாகிய அறவாழி அந்தணன்..... என்னும் குறட்பா உரை முடிவில் பரிமேலழகர் இஃது ஏகதேச உருவகம் என்கிறார். இதனைத் தேவ நேயப் பாவாணர் ஒருமருங்குருவகம் என்கிறார். (திருக்குறள். தமிழ்மரபுரை, ப.43)

அமிழ்தம் தேவர் உணவா?

அமிழ்தம் என்னும் சொல்லிற்குப் பரிமேலழகர் அமிழ்தம் உண்டார் சாவாது நிலை பெறுதலின், உலகத்தை நிலை பெறுத்துகின்ற வானை **அமிழ்தம் என்று உணர்க** என்று எழுதுகிறார். (திருக், பரி.உரை, ப.15)

அமிழ்தம் என்னும் சாகாத் தேவர் உணவு புராணங்களோடு தொடர்புடையது. ஆகவே அதனைப் பாவாணர் மறுத்துரைக்கிறார். அமிழ்தம் என்பதற்குச் சோறு என்றும் பால் என்றும் பொருள் உள்ளமையைக் காட்டுகிறார். இவ்விரு சொற்களின் திரிபாகவே அமிழ்தத்தைப் பாவாணர் பொருள் கண்டுள்ளார்.

அமிழ்தம் என்னும் சொல் சோற்றையும் பாலையுங் குறிக்கும் இருவேறு சொற்களின் திரிபாகும். அவிழ்-வெந்து மலர்ந்த சோற்றுப் பருக்கை, சோறு. அவிழ்-அவிழ்ந்து-அவிழ்தம்=உணவு.... அமுதம் என்னும் தென்சொல் வடமொழியில் அம்ருத என்னும் வடிவு கொள்ளும். அவ்வடிவை அ+ம்ருத என்று விரித்துச் சாவை தவிர்ப்பது என்று பொருளுறுத்தி, அதற்கேற்பத் தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த அமிர்தம் என்று கதையும் கட்டி விட்டனர் வடமொழியாளர்.

இங்ஙனங் காட்டினும், மீண்டும் அது தென்சொல் திரிபேயாதல் காண்க. **(திருக்குறள் தமிழ் மரபுரை, ப.45)**

தமது கூற்றிற்குச் சான்றாக மணிமேகலையில் இடம்பெறும் அறுசுவை நால்வகை யமிழ்தம் (மணி 28:116) என்பதைக் காட்டி முடிவு கூறுகிறார்.

> **அமிழ்தம் குறித்த மற்றொரு திருக்குறள், அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள் சிறுகை யளாவிய கூழ்**

என்பது. இதற்கு உரைவரையும் பொழுதும் தேவர் உணவு என்னும் பரிமேலழகரின் வழக்கை மறுத்துரைக்கிறார். அமிழ்து என்பதற்குப் **பால்சோறு** என்று புலவர் குழந்தை உரை கூறுவார். பாவாணர் உரையோ பின்வருமாறு அமைகிறது.

> **தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த சுரையைத் தேவர் உண்டதனால் சுரர் எனப்பட்டாரென்றும் அச்சுரை சாவைத் தவிர்த்ததனால் அம்ருத எனப் பெயர் பெற்றதென்றும் கதை கட்டிவிட்டனர். அதைக் குருட்டுத்தனமாய் நம்பிய தமிழன், விண்ணுலகப் பொருளெல்லாம் மண்ணுலகப் பொருளினும் மிகச்சிறந்தவை யென்னும் பொதுக்கருத்துப் பற்றித் தலைசிறந்த இன்சுவையுண்டியை அமிழ்து என்றும் அமிழ்தினும் இனியது என்றும் சொல்லத் தலைபட்டான்.**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.76)

அகன்ற இலக்கியப் புலமை கொண்ட பாவாணரின் அமிழ்தம் பற்றிய உரைவரைவு. இலக்கிய மேற்கோளும் சொல் ஆராய்ச்சியுமாக அமைந்துள்ளது.

பூசனை – சொற்பொருள்

சிறப்பொடு பூசனை செல்லாது..... என்னும் குறளுக்குப் பரிமேலழகர் விழாவோடு கூடிய பூசை எனப் பொருள் கூறுகிறார். இவ்விடத்தில் பூசுதல் – கழுவுதல் என்று பொருள் என்பது பாவாணர் உரை. தெய்வப் படிமையை நீரால் துப்புரவாக்குதல் என்று பூசைக்கு விளக்கம் தரப்படுகிறது. பூ கொண்டு செய்யப்படுவது பூசை எனக் கொள்வது பொருந்தாது என்பது பாவாணர் பார்வை (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.49).

இவற்றிற்குப் பின்னர் ஆரியரின் வேள்வியைப் பற்றிய குறிப்பொன்றையும் கூர்மையான நோக்கோடு பாவாணர் பதிவு செய்துள்ளார்.

> **வேத ஆரியருக்கு வேள்வி வேட்டலேயன்றிப் படிமைப் பூசையும் கோவில் வழிபாடும் இல்லை. பூஜ் என்னும் சொல்லும் வேதத்திலில்லை. பாரதம் முதலிய பிறகான வடபனுவல்களிலேயே அது வழங்குகின்றது.**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.49)

தம் கருத்தை அரண்செய்வது போலப் புகழ்வாய்ந்த இந்தியவியல் அறிஞர் ஏ.எல்.பாஷம் தமது **வியப்பு அதுதான் இந்தியா** (Wonder that was India) என்னும் நூலினுள் ஆரியர்கள் பூசைக்குரிய பொருட்களாக எண்ணெய், நெருப்பு ஆகியவற்றை முதன்மையாகப் பயன்படுத்தினர் என்றும் திராவிடர்கள் தங்கள் பூசைக்குரிய பொருள்களில் தண்ணீர், பூ ஆகியன இடம் பெற்றன என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆகவே பூவும், நீரும் திராவிட வழிபாட்டு முறைகளில் முதன்மையான இடம் பெறுவனவாகும். இதனையே பாவாணர் இலக்கிய வழிச் சான்றுகளில் இருந்து உணர்ந்து இயம்பியுள்ளார்.

ஐந்தவித்தான், இந்திரன்

திருக்குறளில் மிக முதன்மையாக மறுக்கப்பட்ட உரை கூறப்பட்ட குறள் வரிகளில் இதுவும் ஒன்று. பரிமேலழகர் உரை ஐம்புலனையும் அடக்காமைக்குத் தேவேந்திரனே சாட்சி எனப்பொருள் கொள்கிறது. தேவரைவிடவும் வலிமையான வீரர்களாக ஐம்புலமையும் அடக்குவோர் விளங்குவர் என்பது மணக்குடவர் கூறும் உரை. இவற்றை ஆராய்ந்த பாவாணர் காளிங்கர். மணக்குடவர் உரையோடு அமைதி காணுகிறார். பரிமேலழகர் உரையை மறுக்கிறார்.

காளிங்கர் உரை பின்வருமாறு அமைகிறது.

> **மற்றிது என் சொல்லியவாறோ எனின், ஈண்டுத் தன்பதம் கருதித் தவம் செய்யும் நீத்தார் மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வ மகளிரைவிடுத்து, மற்று அத்தெய்வம் அழிந்து, தவம் அழியாமை நிலை நிற்கையாலும், தனது பதம் விரும்பாமையாலும் தானே சான்றாய் அமையும்.**
>
> (திருக்குறள் ஆராய்ச்சி உரை, ப.25)

இவ்உரைக்குப் பின்னர், **என்று காளிங்கரும் கூறிய விளக்கம்**

ஒருவாறு பொருந்தும், என்று பாவாணர் எழுதுகிறார். இவ்விடத்தில் தாம் வேறு உரை கூறாமல் தமது கருத்தை மட்டும் இனிவரும் ஆய்வாளருக்கு விட்டுச் செல்கிறார்.

ஆயினும் ஆசிரியர் கருதிய கதை ஒன்றிருத்தல் வேண்டும். அது இன்று அறியப்படவில்லை. இந்திரன் என்பது வேந்தன் என்னும் தென் சொற்கு நேரான வடநாட்டுச்சொல். வேந்தன் மருதநிலத் தமிழ்த் தெய்வம்.

இத்தகைய உரைகளுள் இன்று நின்று நோக்கும்போது கவிராஜ பண்டிதர் உரை பெரும் ஏற்புடையதாகத் தோன்றுகிறது. இவ்வுரையைப் பாவாணர் சுட்டாமல் விட்டமைக்கான காரணம் புலப்படவில்லை. பாவாணர் கவிராஜ பண்டிதர் உரையைப் பார்க்கவில்லையோ என்ற ஐயமும் இவ்விடத்தே மேலெழுகிறது.

கவிராஜ பண்டிதர் உரை பின்வருமாறு அமைகிறது.

> **ஐம்புலன்களையும் ஆசையின் வழியே போகாமல் அடக்கின ஜினனுடைய பெருமைக்குத் தேவருலகத்தில் தேவர்களுக்கு எல்லாம் இராஜாவாய் இருக்கப்பட்ட தேவேந்திரனே கரி (சாட்சி) பின்னே ஒருவரும் சாட்சி அல்லர்.** (திருக்குறள் ஆராய்ச்சியுரை, ப.25)

இவ்வுரை சமணசமயத் தேவேந்திரனாகிய ஜினனைக் குறிப்பிடுகின்றது. தேவநேயப் பாவாணர் இவ்விடத்தில் வலிந்து உரைகூறாமல் செல்லும் ஆய்வுநேர்மை புலமையின் அடையாளமாகத் திகழ்கிறது.

தென்புலத்தார்

இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தினுள் இடம்பெறும் மூன்றாவது குறள்:

> **தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்**
> **கைம்புலத்தா றோம்பல் தலை**

என்பதாக உள்ளது. இதனுள் தென்புலத்தார் என்னும் சொல்லிற்குப் பரிமேலழகர் தொடங்கி மணக்குடவர், காளிங்கர், பருதி ஆகிய அனைவரும் பிதிரர் என்றே பொருள் கூறுகின்றனர். பரிமேலழகர் **அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுள்சாதி** என்கிறார். அவர்கட்கு

இடம் தென்புலம் என்கிறார். சைனமரபில் உரைகண்ட கவிராஜ பண்டிதர் **இறக்குந்தறுவாயில் உள்ள முதியவர்கள்** என்பார்.

இவ்விடத்தில் தேவநேயப்பாவாணர் உரை மற்றைய உரைகளைவிடக் கருத்தாழமும், மானுடவியல் பார்வையும் கொண்டதாய் அமைகிறது.

> **முற்காலத் தமிழகமாகிய குமரிநாடு பல்வேறு கடல் கோள்களால் மூழ்கிப் போனமையால், அது இருந்த தென்றிசை, கூற்றுவன் திசையாகவும் இறந்தோரின் இருப்பிடமாகவும் கொள்ளப்பட்டது. தென்புலத்தாருக்குச் செய்யும் அறவினையானது, அவர் ஆவி ஆறுதலும் மகிழ்வும் அடைதற்பொருட்டு, அவர் இறந்தநாளில் தெய்வத்திற்குப் படைப்பதுபோல் அடையாள முறையில் சிலவுண்டிகளை அவர்க்கும் படைத்து, அவர் பெயரால் துறவியர்க்கும் இரப்போர்க்கும் சிறந்த உணவும் புத்தாடையும் உதவுதல்.** (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.66)

இவ்வாறு அமையும் உரைப்பகுதியில் தென்திசை ஏன் இறந்தோர்களின் திசைக்குரிய அடையாளமாயிற்று என்னும் பண்பாட்டு வினாவிற்கு விடைகூறுவதாகவும் அமைகிறது.

கற்பென்னும் திண்மை

திருக்குறள் உரையாசிரியர் இடையே காணப்பட்ட பெருத்த வேறுபாடு கற்பு என்னும் பொருண்மையை வைத்து உண்டானது.

> **பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்**
> **திண்மை உண்டாகப் பெறின்**

என்னும் குறட்பாவில் கற்பெனும் திண்மை என்பதற்குப் பரிமேலழகர் **அவள் மாட்டுக் கற்பு என்னும் கலங்கா நிலைமை** என்று உரை கூறினார். பரிப்பெருமாள், காலிங்கர், பரிதி ஆகிய அனைவரும் இவ்வுரையையே தழுவினர். கவிராஜ பண்டிதர் **நற்குண நற்செய்கைகளுடனே கூடப் பதிவிரதை என்று சொல்லப்பட்ட திட விரதம் உள்ளவளானால் அவளே பெரிய திடவிரதம்** என்று எழுதுகிறார். **(திருக்குறள் உரைக் களஞ்சியம், ப.43)**

பாவாணர் உரை இவ்விடத்தில் ஆழமும், கருத்துத் தெளிவும் கொண்டதாக அமைகிறது. பிறஉரையாசிரியர் அனைவரும் கற்பு

என்பதைப் பெண்களுக்கானதாக மட்டுமே கருதி உரை எழுதப் பாவாணரோ இருபாலருக்கும் பொதுவானதாகக் கருதி பொருளெழுதி விளக்குகிறார்.

பெண்ணியச் சிந்தனைகள் தோன்றி ஆண்மையப் படைப்புகள் பற்றி வினாக்களையும், ஆய்வுரைகளையும் எழுப்பி வரும் இந்நூற்றாண்டில் வாழ்ந்த பாவாணர் காலச் சூழலுக்குத் தக்க உரை கூறியுள்ளார்.

கற்பு என்பது கற்போல் உறுதியான
இரு பாலிடைக் காதற்பண்பு. கல்–கற்பு

(அயோத்தி, நகர்நீங்கு.16)

என்று கம்பரும் கூறுதல் காண்க.

அது மணப்பருவம் வரை தோன்றாதிருந்து பின்பு ஒருவரையே காதலிப்பது; இருபாலர்க்கும் பொதுவானது. ஆதலின், மனைவியைக் கூறி அணங்கையும் நோக்காத ஆண்கற்பும். கணவனையன்றிக் காவலனையும் நோக்காத பெண் கற்பும் எனக் கற்பு இருதிறப்பட்டதாம். இங்குக் கூறியது பெண் கற்பு என அறிக.

(திருக்குறள் தமிழ் மரபுரை, ப.71)

இவ்வாறு கற்பினை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக வைத்துப்பார்க்கும் பார்வை பாவாணரின் சமத்துவ நோக்கிற்கு ஏற்ற சான்றாகிறது. வள்ளுவரின் சமத்துவ நோக்கைத் தம் உரைவழி பாவாணர் சுட்டிச் சென்றிருக்கிறார். இத்தகு உரைகளை எடுத்துக் காட்டிய தண்டபாணி தேசிகர் வள்ளுவரின் ஆழ்ந்த எண்ணத்தைத் தெரிவிக்கும் கருத்தொன்றைப் பின்வருமாறு காட்டுவார்.

பெண்ணிற்குள்ள மனவுறுதியைக் கற்பு என்ற வள்ளுவர் ஆணின் மனவுறுதியைப் பேராண்மை என்றதும் காண்க!

(திருக்குறள் உரைக்களஞ்சியம், ப.44)

பாவாணரின் உரைவரைதல் திறன் சிறந்து விளங்குவதற்கு மற்றுமொரு காரணம் அளவை நெறிக்கு (Logic) உட்பட்டவற்றை மட்டுமே அவர் ஏற்று உரை கூறியதும், மற்றையவற்றைத் தள்ளுதலுமேயாகும். தெய்வத்தைத் தொழாதவளாய்த் தன் கொழுநனையே தெய்வமாகக் கொண்டு தொழுபவள் பெய்யென மழை

பெய்யும் என்று பலரும் உரை கூறிய காலத்துப் பாரதிதாசனின் உரை அத்தகுச் செல்நெறியிலிருந்து மாறியிருந்தது.

தெய்வந் தொழஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்னும் குறட்பாவில் எடுத்துக்காட்டு உவமையணி இருப்பதை விளக்கிப் பாரதிதாசன் பொருள் கூறுவார். அதாவது, தெய்வத்தைத் தொழாமல் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுபவள் பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பாவாள் என்பதுதான் அவ்வுரை. இதேயுரையைப் புலவர் குழந்தையும் வரைந்துள்ளார்.

இக்குறளுக்கு உரையெழுத முற்பட்ட இவர்களின் புதியநோக்கு அறிவுநெறிக்குப் பிறழா ஒன்றாக அமைகிறது. ஆனால் பிற தமிழ் இலக்கியங்களில் கற்புடைய பத்தினிப்பெண் சொன்னால் மழை பெய்யும் என்னும் நம்பிக்கை மிகுதியாகவே பயின்று வருகிறது. இதனை எவ்வழியில் தீர்ப்பது என்பது முதன்மையான சிக்கலாகும்.

வள்ளுவரை மூடநம்பிக்கையில்லாத திராவிடக் கருத்தியலுக்குத் தக்கவராக வடிவமைக்கும் ஒரு நீண்ட போக்கின் விளைவுதான் புலவர் குழந்தை உரையும் பாவேந்தர் உரையும். ஆயினும் **கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கல்லாடம், கம்பராமாயணம்** போன்ற இலக்கியங்களும் பத்தினிப்பெண் கூறினால் மழை பெய்யும் என்றே பாடியுள்ளன காண்க. **திருக்குறள் உரைக் களஞ்சியம்**, ப.72 இப்படியான நம்பிக்கை இம்மக்கள் குழுவிடம் இருந்துள்ளது எனக் கொள்வதே பொருத்தமானது. இவைகளுக்கு இடையில் பாவாணரின் உரை கூறும் செய்தி என்ன என்பது அடுத்த வினாவாக அமைகிறது.

பாவாணரைப் பொருத்தமட்டில் மரபுரையாசிரியர்கள் கூறிய உரையையே பின்பற்றுகிறார். பெய்யென்று சொன்னவுடன் மழை பெய்யும் என்பதுதான் அவர் கையாண்டுள்ள தொடர். இதற்கான காரணம், இவை பண்டைய நம்பிக்கை என்பதாக அமைகின்றன. ஆயினும் தமது கருத்தியல் நிலைப்பாட்டிற்குக் காரணமாக அமைந்த பகுத்தறிவுக் குழுவினரின் உரைகூறலை இவ்விடத்தில் போற்றவும் செய்கிறார்.

> **புரட்சிப் பாவலர் பாரதிதாசனார், கொழுநற் றொழுதழுவாள் பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பாவாள் என்று பொருள் கூறிப் பொருத்த மாக்குவார்.** (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.72)

பாரதிதாசன் உரையை அவ்வாறே பின்பற்றாமலும், தமக்கான ஒரு நிலைப்பாட்டோடு உரை வரைந்துள்ளமையும் பாவாணரின் தனித்த உரைத்திறனைப் புலப்படுத்துகின்றன. பாவாணர் திருக்குறள் உரை முழுவதிலும் வேர்ச்சொல்லாய்வும், பரிமேலழகரின் உரைமறுப்பு மட்டுமல்லாது ஆய்வின் அடிப்படையிலும் பிற தமிழிலக்கிய மரபின் பின்புலத்திலும் வைத்து நோக்கும் ஆய்வு நேர்மை இழையோடுவதைக் காணஇயலும்.

புலவர் குழந்தை, பாரதிதாசன் உரைகள் கடவுள் மறுப்பு உரைகளாகத் திகழச் சில சொற்களை வலிந்து கொணர்ந்து பொருண்முடிபு காட்டியுள்ளனர். பாவாணர் உரையோ தமிழ் மரபின் வழி எழுந்ததாகலின் மிக இயல்பான தன்மையுடன் மிளிர்கிறது.

பிறமறுப்புகள்

தேவநேயப் பாவாணரின் திருக்குறள் மரபுரையைக் கூர்ந்து நோக்கினால் வேர்ச்சொல் ஆய்வின் வழியே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியையும் தம் ஆய்வின் முடிபுகளை முன்வைத்து விமர்சித்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியின் பதிப்பாசிரியராக எஸ்.வையாபுரிப்பிள்ளை இருந்துள்ளார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

சோகாப்பர் என்ற சொல்லிற்குப் பரிமேலழகர் உரையை மட்டுமல்லாது சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியின் போக்கையும் சாடுவதை இவ்வுரையின் ஊடே காண முடியும்.

> **சோகாப்பர் என்னும் சொல்லை வடசொல் தொடர்பினதாகக் காட்டல் வேண்டி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி, அதற்குச் சோகம்+யா என்று மூலங் குறித்திருப்பது பொருந்தாது... இனி, சோம என்னும் சொல்லையும் வாணன் தலைநகரப் பெயரான சோணிதபுரம் என்பதன் சிதைவாக அவ்வகரமுதலி**

> **காட்டியிருப்பதும் குரும்புத் தனமாம். வாணனுக்கு முந்தின இராவணன் காலத்திலேயே சோவாண் இருந்தமையை நோக்குக.**
>
> (திருக்குறள்தமிழ்மரபுரை, ப.106)

இவ்வாறு சோகாப்பர் என்னும் சொல்லிற்குப் பாவாணர் கூறும் உரையையும் அதன் மறுப்பின் பொருத்தப் பாட்டையும் ச.தண்டபாணி தேசிகர் தம் **திருக்குறள் உரைக் களஞ்சியத்தினுள்** குறித்துள்ளார். தேவநேயப் பாவாணரின் சோகாப்பர் என்ற சொல்லின் வினையடி, பதிப்பு முறைமை, அதனை வரலாற்று வழிநின்று கூறல் என்னும் தளங்களில் பாவாணரின் உரையைத் **திருக்குறள் உரைக்களஞ்சியம்** போற்றி வரவேற்கிறது.

> **இங்ஙனம் வடமொழிப்பெயர்ச் சொல்லைப் பகுதியாகக் கொண்டு வினை முற்றுக்களும் வினை வேறுபாடுகளும் விளைதல் மரபன்மையானும் சோகம் என்றதன் அடியாகப் பிறக்கின் சோகிப்பர் என வருமேயன்றி இங்ஙனம் வாராமையானும் சோகப்பு எனப்பகுதி கொண்டனர். அல்லா-செம்மா-சோகா என்ற பகுதிகள் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கொழிந்தமை கருதியே தேவநேயர் இரு சொல்லாக்கிச் சிறைப்படுவர் என்றார். சோ-மதியல்லது சிறையைக் குறிக்கும் தனித்தமிழ்ப் பெயர்ச்சொல் எங்ஙனமாயினும் சோகா என்ற தமிழடியாக வந்த வினைமுற்று என்றலே சிறத்தல் காண்க.**
>
> (திருக்குறள் உரைக்களஞ்சியம், ப.244)

இத்தகைய சொற்பிரிப்பு முறை தேவநேயர் உரையிற்மட்டுமே காணக்கிடப்பது கூடுதல் சிறப்பாகும். தேவநேயரைப் பொறுத்தமட்டில் பரிமேலழகரை மட்டும் அல்லாது தமது கருத்திற்கும், தமிழ் மரபிற்கும் பொருத்தமில்லாத அனைத்து உரைகளையுமே மறுத்துள்ளார். அப்படியான மறுப்பிற்கு உட்பட்ட உரையாசிரியர்களில் ஒருவர் மணக்குடவர்.

**ஒன்றானும் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகத் தாகி விடும்.**

என்னும் குறட்பாவிற்குப் பரிமேலழகரின் உரையைத் தழுவியே பாவாணர் உரை கூறுகிறார். குறிப்பாகப் பரிமேலழகர் சொற்குற்றம் என்று குறிக்கும் பொய், குறளை, கடுஞ்சொல், பயனிலசொல் இந்நான்கையும் அப்படியே தமது உரையிடத்தும் குறித்துள்ளார். பரிமேலழகரே இப்படி உரைப்பாரும் உளர் என்று மாற்றுக்கருத் தொன்றைக் குறிப்பர். அது

ஒரு சொல்லே யாயினும் கேட்டார்க்கு இனிதாயிருந்து தீ- சொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மை யாகாதாகியே விடும் என்று உரைப்பாரும் உளர்.

(திருக்குறள் ஆராய்ச்சி உரை, ப.91)

என்பதாக அமைந்துள்ளது. இந்த உரையை அப்படியே எழுதி என்னும் மணக்குடவருரை பொருந்துவதன்று எனக் குறித்துள்ளார் பாவாணர். இதன் மூலம் பாவாணரின் குறிக்கோள் தனிப்பட்ட மனிதரைக் குற்றப்படுத்துவது அல்ல; அதற்கு மாறாக அவர்தம் கொள்கையை ம்றுத்தலே ஆகும் என்பதை அறிய முடிகிறது. பாவாணரின் **திருக்குறள் தமிழ் மர்புரையின்** மூலம் திரட்டப்படும் பிற உரையாசிரியர்களின் மறுப்புகளைத் தொகுத்தால் அது தனித்தொரு ஆய்விற்கு உட்படுமாறு அமையும். அந்த அளவிற்குப் பாவாணர் பிற உரைப் போக்குகள், அவற்றின் கொள்கை முடிவுகள், இலக்கணப் பொருட்கோடல் ஆகியவற்றை அறிந்து தம்முரையை வரைந்துள்ளார்.

பாவாணர் பரிமேலழகரின் உரையோடு ஒத்துப் போயினும் சில கருத்துகளைக் கருதுகோள்களாக முன்வைக்கும் இடங்களும் உண்டு. உரை வரைவில் முற்று முடிபான முடிபுகளை வழங்குவது போலவே சில கருது கோள்களை முன்வைப்பது இன்றியமையாத ஒன்றாகிறது. அவ்வகையில்,

**மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.**

என்னும் திருக்குறளுக்குப் பாவாணரின் உரை சில கருதுகோள்களை முன்வைக்கிறது.

இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர் பின்வருமாறு உரை கூறுகிறார்.

> **மனநன்மையை முன்னை நல்வினையால் தாமே உரையாயினும் அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலை யுடைத்து.** (திருக். பரி. ப.188)

இவ்வுரையில் மாறுபடும் பாவாணர் உரை,

> **மனநன்மையை இயற்கையாகவே மிகுதியாக வுடையராயினும், அறிவு நிறைந்தோர்க்கு இன நன்மை அரணாகுந் தன்மையுடையது.**
> (திருக்குறள் தமிழ் மரபுரை, தொகுதி 2, ப.50)

இவ்வுரையின் முடிவில் மனநலம் என்பது முன்னோரிடம் இருந்து பெற்ற ஒன்று. அதுவும் மரபு உரிமையாக இருக்கலாம். ஆகவே அதனையும் இனநலம் எனக் கூறலாம் என்பது பாவாணரின் நிலைப்பாடு. மூல நூலாசிரியராகிய திருவள்ளுவரை விடுத்துப் பரிமேலழகர் விலகிச் செல்லும் இடங்களுள் இதனை ஒன்றாகவும் பாவாணர் குறித்துள்ளார். மூல நூலாசிரியர் எவ்வாறு நினைத்து எழுதியிருக்கலாம் என்றும் இவ்விடத்தில் பாவாணர் குறிக்கும் தகைமை அவரின் கூர்த்த உரைத்திறனை வெளிப்படுத்தும் ஒன்று.

> **நன்கு என்பதற்கு நல்வினையால் என்று பொருள் கொண்டார் பரிமேலழகர். அது பொருந்துமேனும் அதுவே திட்டமான ஆசிரியர் கருத்தென்பதற்குக் குறளில் ஒரு குறிப்புமில்லை. அதுவே அவர் கருத்தாயின், மனநல நல்வினைப் பேறாயினும் என்றோ மனநலமூழான் மருவினும் என்றோ யாத்திருப்பார். எனினும் மரபுரிமைப் பேறாகவோ நல்வினைப் பேறாகவோ திருவருட் பேறாகவோ அவர் கொண்டிருக்கலாமென்று கருத இடமுண்டு.**
> (திருக்குறள்தமிழ் மரபுரை, ப.50)

புதிய சான்றுகளைக் காட்டல்

தேவ நேயப் பாவாணரின் **திருக்குறள் தமிழ் மரபுரை** சிலவிடத்துப் பல புதிய சான்றுகளைக் கொண்டமைந்துள்ளது. இவை பிறருரையில் காணக்கிடக்கா தலைவகளாகும்.

> **வித்தும்மிடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
> **மிச்சில் மிசைவான் புலம்.**

என்னும் குறள் விருந்தோம்பலின் சிறப்பைப் பெருமளவில் போற்றுகிறது. இதற்கு உரை வரைந்து முடிவு கூறிய பின்னர் **இதற்கு இளையான்குடி மாற நாயனார்** வரலாறு ஓர் எடுத்துக் காட்டாம் என்கிறார். (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.87) இதனைப்போன்றே

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

என்னும் குறளிற்கு உரை வரையும் போது சோகாப்பர் என்பதில் சோ-என்பதற்குத் தமிழில் மதில் என்று பொருள் அல்லது சிறை என்று பொருள். ஆகவே **மக்கள் வேறெவற்றைக் காவா விடினும் நாவையாவது காத்துக் கொள்க. அதைக் காவாவிடின் சொற்குற்றப்பட்டுச் சிறைத்தண்டம் அடைவர்** என்று எழுதுகிறார். இத்தகைய பொருளை வேறு எந்த உரையாசிரியர்களும் குறிப்பிடவில்லை.

பெரும்பான்மையும் பிற உரையாசிரியர்களிலிருந்து வேறுபடும் இராமாநுசக் கவிராயர் கூடச் சோபம் என்னும் பண்புப் பெயர் சோகாப்பு எனத்தொழிற் பெயராயிற்று என்று பொருள் கூறுகிறார். இக்குறளுக்குச் சான்றாகப் பாவாணர் காட்டும் வரலாறு, கனகவிசயர் என்ற ஆரிய மன்னரைப் பற்றியதாகும்.

> **அது கனகவிசயர் என்னும் ஆரிய மன்னர் தமிழ் வேந்தரைப் பழித்ததினால், சேரன் செங்குட்டுவனின் சீற்றத்திற்கு ஆளாகிச் சிறைபட்டது போல்வது**
>
> (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.105)

என்று எழுதி ச்சான்று காட்டிய பின்னரும் **சிலப்பதிகாரத்திற்** காணலாகும் **காவா நாவிற் கனகனும் விசயனும்** என்னும் வரியையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

முந்நூற்று எழுபதாவது குறளுக்கு உரை எழுதும் போது, தாயுமானவரின் ஆசைக்கோர் அளவில்லை.... என்னும் பாடலை ஒப்புகாட்டித் தம் கருத்தை உறுதிப்படுத்துகிறார். **(திருக்குறள் தமிழ்மரபுரை, ப.224)**

உரை ஒப்புமை காட்டலும் முடிவு கூறலும்

தேவநேயப் பாவாணர் தம் காலத்திற்கு முன்னால் வரையப் பெற்ற உரைகள் அனைத்தையும் அறிந்து உள்வாங்கிய பின்னரே தமது உரையை வெளிப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு குறளுக்கும் இத்தகையதான முறையை அவர் பின்பற்றியுள்ளமையை நூலைப் படிக்கையில் உணர இயலுகிறது. சில திருக்குறள்களுக்குப் பிற உரையாசிரியர் கவிஞர் கருத்துகளைத் தொகுத்துக் கூறித் தம்முடைய இறுதிமுடிபை நாட்டும் பாங்கையும் காண இயலுகிறது. குறிப்பாக,

குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே........

என்னும் குறட்பாவிற்கு உரையெழுதும் பாவாணர்,

> **குறளிலுள்ள குடம்பை என்னும் சொற்குப் பறவைக் கூடு என்று மணக்குடவர் பரிதி காலிங்கரும் முட்டைக் கூடு என்று பரிமேலழகரும் பொருள் கொண்டனர். இவர் இங்ஙனம் வேறுபடக் கரணியம் இரண்டிற்கும் குடம்பை, கூடு என்பன பொதுப் பெயராயிருப்பது....**
>
> (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.205)

என்று எழுதி இறுதியில் **உடம்பிற்கு முட்டைக் கூட்டை உவமங் கொள்வதே பொருத்தமாகும்** என்கிறார். இவ்வுரை பரிமேலழகர் உரை என்பது இங்குக் கருதக் கூடிய ஒன்றுமாகும். இவ்வுரையின் ஊடே அவர்கால அறிவியல் வகுத்த பாலூட்டிகள் (பாலுண்ணி) (Mammalia) என்ற பகுப்புமுறையுடன் தம் உரையாடலை முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. **திருக்குறளுக்கு** எல்லீசின் உரை மிகுதியான பாடல்களை உதாரணமாகக் காட்டி வரையப்பெற்ற உரை என்பர். இவ்வுரை போன்றே பாவாணர் உரையும் இதுகாறும் **திருக்குறள்** உரையாசிரியர்களால் காட்டப்பெறாத, மேற்கோள் பாடல்களைக் உரையெழுதியுள்ளார். தாயுமானவர் பாடல், **திருமந்திரம், நாலடியார், தொல்காப்பியம்** போன்றவை சான்றாகக் காட்டப்பட்டுள்ளன.

புதிய பொருள் கூறல்

பாவாணரின் உரை தனக்குப் பொருத்தமில்லாத பழைய உரைகளைப் புறம்பே தள்ளிச் சில குறட்பாக்களுக்கும் புதிய உரையாக அமைந்துள்ளது. இத்தகு புதிய உரைகளில் பாவாணரின் சொல்லாராய்ச்சியைப் பரந்த அளவில் காண இயலும்.

உளரென்னு மாத்திரைய ரல்லார் பயவாக்
களரனையர் கல்லா தவர். (406)

என்னும் இக்குறட்பாவிற்குப் பாவாணர் பின்வரும் சொல்லாராய்ச்சியை மேற்கொள்கிறார்.

> **மா என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் தமிழ்க் கீழ்வா யெண்ணுப் பெயர்களுள் ஒன்று. அரைமா, ஒருமா, ஒருமாவரை, இருமா, மும்மா, நான்மா, மாகாணி என்பன அளவால் ஏற்பட்ட எண்ணுப்பெயர்கள்.**
>
> (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.22)

இத்தகைய சொல்லாராய்ச்சி மூலம் பாவாணர் கண்டடையும் முடிவு ஆரியர் வருகைக்கு முற்பட்ட குமரி நாட்டுத் தூய்மைத் தமிழ்ச்சொல் இம்மாத்திரை என்னும் சொல். ஆகவே, பாவாணரின் திருக்குறள் உரை வரைவிற்குப்பின்னால் இன உணர்வும், இன வரலாற்றுப் போக்கும் இழையோடுகின்றன.

நயவுரை காட்டல்

உரைவரைதலில் நயவுரை காட்டல் என்பதும் பதவுரை காட்டல் என்பதும் முதன்மையான உட்கூறுகள் எனலாம். அவ்வகையில் பாவாணரின் உரை நயவுரையையும், பதவுரையையும் தம் பொழிப்புரையில் உட்கொண்டுள்ளது. இக்கூறுள்ளும் பாவாணர் இன வரலாற்றையும், மொழியின் சிறப்பையும் எடுத்துக் காட்டும் விதமாகவே உரை வரைந்துள்ளார். பாவாணரின் நயவுரை காட்டலுக்குச் சான்றாகச் சிலவற்றை இங்குக் காணலாம்.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில். (141)

இக்குறட்பாவிற்கு, உரைவரைந்து முடித்த பின்பு நயவுரையாகக் கீழ்க்காணுமாறு பாவாணர் உரை அமைகிறது.

> **பிறன் மனைவியைக் காதலிப்பவர் இம்மைக்குரியனவும் மாந்தனுக்கு உறுதிபயப் பனவுமான அறம்பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் இன்பம் ஒன்றையே கருதியவர்**

> **என்பதை உணர்தற்கு அறம் பொருள் கண்டார்கள் இல் என்றார்.** (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.112)

இவற்றுள் பிறன்மனை நயப்பவர்களுக்கு அறநூலும், பொருள்நூலும் அறியாமல் போவதற்கான காரணம் பாவாணர் நயவுரை தெளிவுறுத்துகிறது. இத்தகைய உரையை மணக்குடவர் தொடங்கிப் பரிமேலழகர் வரை யாரிடத்தும் காண்டல் அரிது.

> **பொருள் நூலை அறியாததினால் பிறன் மனைவி பிறன் பொருள் என்பதும், அறநூலை அறியாததினால் பிறன் பொருளை நுகர்தல் தீவினை என்பதும் தெரியாது போயின.**
> (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.112)

என்று நயவுரை வரைகிறார்.

நிறைவுடைமை நீங்காமை வேண்டின். (154)

என்னும் குறட்பாவிற்கு **நிறைவுடைமை என்பது நற்குண நிறைவு** என்று கூறுகிறார். **பொறையுடைமை யின்றி நற்குண நிறைவில்லை** என்பது நயவுரையாகிறது.

.....இறந்தார்வாய் இன்னாச் சொல் நோற்கிற் பவர் (159)

என்னும் குறட்பாவில் இடம் பெறும் இறந்தார்வாய் என்னும் சொல்லில் இடம்பெறும் வாய் என்பது ஐந்தாம் வேற்றுமை உருபாக இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

வீதிவாய் கேட்டலுமே விம்மி மெய்மறந்து

என்பது திருவாசகம் காட்டும் சொல். இதனையும் கடந்து விளக்கவுரை கூறவரும் பாவாணர்

> **வாய் என மிகைபடக் கூறியது, கீழோர் வாயினின்று தீய சொற்களே மிகுதியாக வரும் என்பதை உணர்த்தற்கு**

என்று உரை கூறியுள்ளார். ஒவ்வொரு குறளுக்கும் பாவாணர் உரை **பலவிதமான** நயஉரைகளைக் கொண்டமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அழுக்காறு என ஒருபாவி.... (168)

என்பதற்குப் பொறாமை யென்று சொல்லப்படும் ஒப்பற்ற **கரிசன்** (பாவி)

என்றும் விளக்கவுரையாகக் கூறும் போது பொறாமைக் குணத்தை ஒரு கொடியனாகக் குறித்தது ஆட்படையணி (Personification) தீயழி என்பது எரிவாய் நரகத்தின் பெயர் என்கிறார்.

தீயவை தீய பயத்தலாற் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (202)

என்னும் குறளுக்குத் தீயோடு ஒப்புமை நோக்கித் தீமைகளைக் காட்டுகிறார். தீயோடு தீமையை ஒப்புபடுத்திக் காட்டவேண்டிய இடங்களையும் கூர்ந்து நோக்கிப் பட்டியலிட்டு பொருத்தப்பாடு காணும் பாங்கு நினைத்தற்குரிய ஒன்று.

தீயவை தீயினும் அஞ்சப்படுவது ஏன் என்னும் வினாவிற்குப் பதிலாக அவரின் விளக்க உரை அமைகிறது.

> **தீயானது தொட்டவரைச் சுடினும் எரிப்பினும், சமைத்தலும் குளிர்போக்கலும் நோய் நீக்கலும் கொடு விலங்கு விரட்டலுமாகிய நன்மைகளையுஞ் செய்தாலுந், தீவினையானது செய்த காலத்தில் மட்டுமின்றிப் பின்பு வேறொரு காலத்திலும் வேறொரிடத்திலும் வேறோருடம்பிலும் சென்று சுடுதலாலும், எவ்வகை நன்மையும் செய்யாமையாலும், தீயவை தீயினும் அஞ்சப்படும் என்றார்.**
>
> (திருக்குறள் தமிழ்மரபுரை, ப.135)

தீக்கும், தீயவைக்கும் இடையேயான ஒப்புமையைக் காட்டுவதன் வழி ஒன்றின் மேன்மையையும், மற்றொன்றின் கீழ்மையையும் காட்டுகிறார். இதன்வழி வள்ளுவரின் கருத்து தெளிவாகிறது. பொருட்பாலினுள் காலமறிதல் என்னும் அதிகாரத்தினுள்,

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

என்னும் குறட்பாவிற்குக் காலம் ஏற்காத பொழுது குறித்துப் பின்வருமாறு பாவாணரின் நயவுரை அமைகின்றது.

> **காலம் ஏற்காவிடின் வலியாற் பயனில்லை என்பது கருத்து. ஏற்ற காலமாவது,**

வெம்மையுங் குளிரும் மிகாது நச்சுக் காற்று வீசாது தண்ணீரும் உணவும் தாராளமாய்க் கிடைத்து நால்வகைப் படையும் நலமாகச் செல்வதாயிருப்பது.

(திருக்குறள் தமிழ்மரபுரை, தொகுதி-2, ப.63)

இவ்வுரையில் பாவாணரின் உரையமைதி இன்றைய காலச் சூழலைக் கருத்திற் கொண்டதாய் அமைந்துள்ளது. படையின் தேவை, அதிகாரத்தின் தலைப்பு குறளின் பொருளமைவு ஆகியவை மூன்றையும் ஒருங்கே ஒருபுள்ளியில் குவியும்படி பாவாணரின் இந்நயவுரை அமைந்துள்ளது. இவ்வுரையின் போக்குகள் பாவாணரை நவீன நச்சினார்க்கினியராக முன்னிறுத்த வல்லன.

சொற்பொருள் கூறல்

ஒவ்வொரு சொல்லிற்கும் பொருள் கூறிப் பொருளை வரையறுத்தல் என்பது உரைகூறுதலில் இடம்பெறும் ஒன்று. அவ்வகையில் சொற்பொருளை எவ்வாறு பாவாணர் உரை காட்டுகிறது என்பதும் அதன்வழி வெளியாகும் பாவாணரின் உரைத்திறனையும் இவ்வாய்வு விவரிக்கப் புகுகின்றது. பெரும்பான்மையும் குறளின் வரையறையைப் பாவாணர் கையாளுகிறார். இத்தகைய முறைமை பரிமேலழகர் உரையிலும் காணக் கூடிய ஒன்றாகும்.

சான்றாக, **செய்நன்றியறிதல்** என்பதற்குப் பரிமேலழகர் அஃதாவது, தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாமை என்கிறார். பாவாணர் இதற்கு அதாவது இன்முகத்தோடும் இன்சொல்லோடும் விருந்தோம்பி வேளாண்மை செய்வதர்க்கும் வேறுவகையில் உதவினோருக்கும் நன்றியறிவு உடையராயிருத்தல். (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.94) என்கிறார். இவையொத்த பாவாணரின் குறிப்பிடத்தக்க சில பொருள் வரையறைகளைக் காணலாம்.

அருளுடைமை - தொடர்பு கருதாது அறுவகைப்பட்ட எல்லா வுயிர்களிடத்தும் ஒப்புக் கொள்ளும் இரக்கம். இல்லத்திற்கு அன்புடைமைபோல் துறவறத்திற்கு அருளுடைமை அடிப்படை அறமாம். (திருக்குறள் தமிழ்மரபுரை,தொ.1, ப.158)

கள்ளாமை - பிறர்பொருளை மறைவாகக் கவராமை. **இது** கவர்தலும் மறைவிற் செய்தலுமாகிய இருமடிக்குற்றம். ஒரு தீவினையை

ஆசையோடு கருதுதலும் அதைச் செய்தலோடு ஒக்கும். கள்ளாமை என்பது களவு செய்யாமையும் களவு செய்யக் கருதாமையும் என இருதிறப்படும். (திருக்குறள் தமிழ்மரபுரை, தொ.1,ப.177)

கொடுங்கோன்மை - அதாவது அரசனாற் கையாளப்படும் நேர்மையில்லா ஆட்சி முறைமை. நேர்மையில்லா ஆட்சி வளைந்த கோல் போலிருத்தலால் கொடுங்கோல் எனப்பட்டது. கொடுங்கோலின் தன்மை கொடுங்கோன்மை.

சிற்றினஞ் சேராமை அதாவது, சிறியோர் கூட்டத்தோடு கூடாமை. சிறியோர் சேர்க்கையில் அறிவும் ஒழுக்கமும் திரிந்து இம்மையும் மறுமையுங் கெடுவதால் பெரியோர் துணை இல்லாது போகும். (திருக்குறள் தமிழ்மரபுரை,தொ.2, ப.46)

இவ்வாறு திருக்குறள் தலைப்பு ஒவ்வொன்றிற்கும் வரையறையை வழங்கிச் செல்லும் நெறியைத் திருக்குறள் முழுவதிலும் காணமுடிகிறது. இவ்விடத்தில் சில அதிகாரங்களின் வைப்பு முறைமை பற்றியும் காரணங்களைக் கூறி விளக்குகிறார். இவை தவிர, சில சொற்களுக்கான துல்லிதமான வரையறைகளையும் இவ்வுரை நெடுகிலும் காண இயலும். சான்றாக ஒன்றிரண்டைக் கூறலாம்.

> **தெரிந்த இனம் - என்பது வினைகளையெல்லாஞ் செய்யும் திறமறிந்த இனம்.** (மேலது, ப.52)
>
> **உலகியல் என்பது ஒப்புரவொழுகல்.** (மேலது, ப.108)
>
> **ஊக்கமுடைமை - அசைவின்மை, இடுக்கண். மெய்வருத்தம் முதலியவற்றான் தளராமை.** (மேலது, ப.128)
>
> **மடியாண்மை - மடியை ஆளுந்தன்மை.**
>
> **மங்கலம் - மங்கலமென்பது நெடுநன்மை,** (திருக்குறள் தமிழ் மரபுரை, தொ.1,ப.74)

இவை போன்ற சொல்பொருள் வரையறைகளையும் பாவாணர் உரை உட்கொண்டமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு வரைதல்

ஒவ்வொரு சொல்லின் மொழியியல் இயங்குதளம் கருதி அச்சொற்கு உரிய இலக்கணக் குறிப்பு வரைதல் என்பது தொன்று

தொட்டு உரையாசிரியர் இடையே நடந்து வரும் வழமை எனலாம். இதனைப் பின்பற்றிப் பாவாணரும் ஒவ்வொரு குறட்பாவிற்குக் கீழும் தவறாமல் இலக்கணக் குறிப்பைக் காட்டியுள்ளார்.

பாவணரின் இலக்கணப் புலமையையும், விரிந்த இலக்கண வாசிப்பையும் மொழியியலோடு புரிந்து கொண்டுள்ள மொழிப் பயன்பாட்டையும் பாவாணரின் இலக்கணக் குறிப்புகள் சிறந்த நிலையில் உணர்த்துகின்றன. இதிலும் பிறவுரையாசிரியர்களோடு மாறுபடும் இடங்களும் காணக்கிடக்கின்றன.

சான்றாக ஓரிரு இடங்களைச் சுட்ட இவ்வாய்வு அவாவுகின்றது.

விருந்து என்னும் சொல் ஆகுபெயர். குறிப்பாக விருந்து- புதுமை, அது ஆகுபெயராக விருந்தினரைக் குறித்தது.

என்பது புலவர் குழந்தையின் உரை. இவ்விடத்தில் பாவாணர் விருந்து என்பதைப் பண்பாகு பெயராகக் காண்கிறார். தெளிவான இலக்கணப் பொருத்தமுடைய சொல்லுக்குப் பிற உரையாசிரியர்களைத் தழுவியும் உரைசெல்கிறது. **கொல்** என்பதை அசைநிலை எனப் பரிமேலழகர் கூறியதை ஈண்டும் பின்பற்றுகிறார்.

இன் சொலின் இனிதீன்றல் காண்பான் எவன் கொலோ.... (99)

என்பது குறளில் இடம்பெறும் சொல்லில் இடம்பெறும் ஓகாரம் இரக்கப் பொருளது எனப் பொருள் வரைகிறார்.

பரிமேலழகர் இலக்கணக் குறிப்பு வரையாத சொற்களுக்கும், குறட்பாக்களுக்கும் கூடப் பாவாணர் உரை ஏற்ற இலக்கணக் குறிப்புகளைத் தருகிறது. குறளுக்குப் பொருள் கொள்ளும் போது பிழை நேராத வண்ணம் இத்தகைய இலக்கணக் குறிப்புகள் பயன்படுகின்றன.

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். (111)

என்னும் இக்குறளில் நன்றே என்பதில் இடம் பெறும் ஏகாரம் பிரிநிலையில் வந்துள்ள தென்றும், பகுதியான் என்பது பகுதிதோறும் என்றும் பொருள்படுதலால் ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் நின்றது என்றும் பாவாணர் உரை இலக்கணத்தைக் காட்டுகிறது. இச்சொற்கட்கு

மணக்குடவர் முதல் பரிமேலழகர் வரை இத்தகு உரை கூறவில்லை என்பது குறிக்கத்தக்கது.

பரிமேலகழகரை முழுமையாகப் புரிந்து கொண்டு அவரிலிருந்து வேறுபடும் மணக்குடவர், பரிதி, காலிங்கர் ஆகியோரின் உரைகளை ஆய்ந்து அவ்வழிகளில் தம்மை நிறுத்திக் கொள்ளும் பான்மை பாவாணர் உரைகளில் பரக்கக் காண இயலும்.

சிலவிடத்து, பரிமேலழகரை எளிமைப்படுத்தித் தற்காலப் போக்கிற்கு வழங்க வேண்டிய தேவையையும் பாவாணர் செய்துள்ளார்.

....எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து (112)

இதில் காணலாகும் எச்சத்திற்கு என்பதில் தொக்கியுள்ள உம்மை விகாரத்தால் தொக்க எச்ச உம்மை எனப் பரிமேலழகர் கூற (திருக்.பரி.உ.ப.52). பாவாணரோ **எச்சவும்மை தொக்கது** என மிக எளிமையாக இலக்கணம் சுட்டுகிறார்.

..... மலையினும் மாணப் பெரிது (124)

என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புக் கருதியது என்பது பாவாணர் குறிப்பு. இதிலுள்ள மலை ஆகுபெயர் என்பது பரிமேலழகர் உரை (ப.124). இதில் மலை ஆகுபெயர் என்னும் குறிப்பு இன்றைய காலத் திருக்குறள் வாசகனுக்கு நேரடியாக வேண்டப்படாத ஒன்று. உம்மை சிறப்புப் பொருளில் வந்துள்ளது என்பது அறியத்தக்க ஒன்று என்பதாகப் பாவாணரின் நிலைப்பாடு உள்ளது.

இனி, பரிமேலழகரின் இலக்கணக் குறிப்பை மறுக்கும் இடங்களுள் ஒன்று: **யாகாவராயினும்** என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் கூறிய இலக்கணக் குறிப்பில் அமைந்துள்ளது. **யா என்பது அஃறிணைப் பன்மை வினாப் பெயர். அஃது ஈண்டு எஞ்ஞான்று உணர நின்றது. முற்று உம்மை விகாரத்தால் தொக்கது** எனக் குறிப்பு காட்டுகிறார் பரிமேலழகர். (பரிமேலழகர் உரை, ப.58). பாவாணர் யா-என்பதற்கு எனவும் என்று பொருள். இதற்கு யாவும் என்று பொருள் கொண்டு **முற்றுமை விகாரத்தால் தொக்கது** என்றார் பரிமேலழகர். காவாராயினும் என்றும் வைத்துக் கொள்வு அல்லது ஒத்துக் கொள்வுக் கிளவியத்திற்கு (Adverb Clause) அப்பொருள் பொருந்தாமை காண்க. **(திருக்குறள் தமிழ் மரபுரை, தொ.1,ப.105)**

என்று எழுதியுள்ளார். தமது மறுப்பிற்குச் சான்றாக ஆங்கில இலக்கணப் பொருத்தப் பாட்டையும் இங்குக் கொணர்ந்து காண்பிக்கிறார்.

பாவாணர் உரை காட்டும் சில இலக்கணக் குறிப்புகள்

மன்ற	-	தேற்றப் பொருள் (இடைச் சொல் (143))
நலத்திற்கு	-	அத்துச் சாரியை தொக்கு நின்றது (149)
தோள்தோய்தல்	-	இடக்கரடக்கல் (149)
வழுக்கியும்	-	உம்மை எதிர்மறைப் பொருட்டு (165)
அதுவே	-	பிரிநிலை ஏகாரம் தொக்கது (165)

இவை அனைத்தும் பரிமேலழகரால் இலக்கணக் குறிப்புக் காட்டப் படாத சொற்களாகும்.

பாவாணரின் உரை சிலவிடத்து பரிமேலழகரை மறுத்த போதும் அவரின் நுண்ணிய, ஏற்புள்ள சிந்தனைகளை விவரிக்கும் இயல்பு கொண்டதாகவும் அமைகின்றது. இதற்குச் சான்றாக,

> **புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்**
> **அறம்கூறும் ஆக்கம் தரும்.** (183)

என்பது குறள். இதிலுள்ள தரும் என்னும் சொல்லிற்கு மிகச் சுருக்கமாகப் பரிமேலழகர் தரும் என்பது இடவழுவமைதி எனப் பொருள் காண்கிறார். இதனை ஒரு தொடக்க நிலையில் படிக்கும் வாசகனால் புரிந்து கொள்ள இயலாது. தரும் என்பது எவ்வகையில் இடவழுவமைதியாகும் என்னும் வினா எழும். ஆகவே, இதற்குப் பாவாணர் தரும் என்பது தொல்காப்பிய நூற்பாவின்படி எவ்வாறு இடவழுவமைதியானது எனக் காரணம் காட்டுகிறார். தரும் என்னும் சொல்

> **தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்**
> **தன்மை முன்னிலை ஆயீரிடத்த.** (512)
>
> **என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி தன்மைனு முன்னிலையில் வராது படர்க்கையில் வந்ததினால், இடவழுவமைதியாம்.**
>
> (திருக்குறள் மரபுரை, ப.128)

என்று விரிவாகப் பொருளெழுதி நிலைநாட்டுகிறார். தொல்காப்பியத்தின்படி தரும், வரும். என்னும் சொற்கள் தன்மை, முன்னிலை ஒருமை பன்மை

இலைகளில் மட்டுமே வரும். ஆனால் ஈண்டுப் படர்க்கையில் பயன் படுத்தப்பட்டுள்ளதால் இது இடவழுவமைதி என்கிறார்.

இவ்வாறு பாவாணரின் இலக்கணப்புலமை **திருக்குறள் உரை** முழுவதும் தொடர்ந்து கையாளப் பெற்றுள்ளது. பாவாணரின் **திருக்குறள் உரையின்** இலக்கணக் குறிப்பு என்பது பெரும் ஆய்விற்குரிய பெரும்பரப்பாக அமைந்துள்ளது. இதன் வழி பாவாணரின் இலக்கணப் புலமையின் செழுமை இனிதே விளங்கும்.

வரலாற்றை இணைத்து உரைகூறுதல்

திருக்குறளுடன் அரசர்களின் வரலாற்றை இணைத்து உரைகூறுதல் என்னும் பாங்கு பாவாணர் உரையில் உண்டு. சான்றாக ஆள்வினையுடைமை என்னும் அதிகாரத்துள்

> **குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்**
> **மடியாண்மை மாற்றக் கெடும்.**

என்னும் குறட்பாவிற்குக் குடி ஆண்மையுள் வந்த குற்றம் – என்பதற்குப் பொருள் கூறுகிறார். **நெடுங்காலமாகத் தொடர்ந்துவரும் குடியுள்ளும் அதன் தலைவரின் ஆண்மையுள்ளும் நேர்ந்த குற்றங்களால் விளைந்த கேடுகள். (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.128)**

இதற்குத் தமிழக வரலாற்றில் சான்று காட்டப் புகுந்த பாவாணர் விசயாலயச் சோழனின் எழுச்சியைச் சுட்டிக் காட்டும் பாங்கு குறிப்பிடத்தக்க ஒன்று. இத்தகைய உரை முறையை மற்றைய உரையாசிரியர்களிடம் காண்பது அரிது.

> **இதற்குக் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்க்கு அடங்கியிருந்த சோழர் குடியில் தோன்றிய விசயாலயன், கி.பி.850 போல் தஞ்சையைக் கைப்பற்றி மீண்டும் தன் குடியுயர்வை நிலை நிறுத்தியமை, நல்லெடுத்துக் காட்டாம். குடிமைக் குற்றம் ஒற்றுமையின்மையும் உட்பகையும் சேர பாண்டியரோடு சேராமையும்.**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை, ப.128)

சோழப்பேரரசின் எழுச்சிக்கு முதன்மையாக அமைந்த விசயாலயனோடு இணைத்து இக்குறளுக்கு உரை வரைந்துள்ள

காரணத்தால் பாவாணர் உரை தெளிவும் ஆழ்ந்த சான்று காட்டலோடும் கூடியதாக அமைந்துள்ளது.

இந்திய சீன எல்லையில் பனிப்போர் (Coldwar) மூண்ட காலத்தில் எழுதப்பெற்ற திருக்குறள் பாவாணர் உரை இதனையும் தம் உரைப் போக்கில் பதிவு செய்துமுள்ளது.

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்

பொறுத்தாற்றும் பண்பே தலை.

இதற்கு உரையெழுதிய பாவாணர் தம்மை வருத்தி யொழுகும் இயல்புடையாரிடத்தும், பழைய நட்புக் கருதிக் கண்ணோட்ட முடையராய் அவர் குற்றத்தைப் பொறுத்தொழுகும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பு.

இப்பொருட்கு, இந்தியா சீனாவின் வரம்பு கடந்த நடத்தையைப் பொறுத்துக் கொண்டு போவதை எடுத்துக் காட்டாகக் கொள்க.

ஒறுத்து ஆற்றும் பண்புளார் கண்ணும் – இப் பொருட்டு, இந்தியா பாகித்தான் (பாகிஸ்தான்) தாக்குதலைப் பொறுத்துக் கொண்டமைவதை எடுத்துக் காட்டாகக் கொள்க. **(திருக்குறள் தமிழ் மரபுரை, தொகுதி–2, ப.112)**

இந்தியா சீனா போரின் தொடக்கங்களும், பாகித்தான் இந்தியா உறவும் திருக்குறளோடு ஒப்பிட்டுக் காட்டப் பெற்றுள்ளன. இதன்வழி, பாவாணர் திறம்படத் தற்காலத்து உலக அரசியல் போக்குகளை உள்வாங்கி இலக்கிய உரைக்குள் பதிவு செய்திருப்பதை அறியலாகிறது.

தம் காலத்தில் அறியப் பெற்ற உலக வரலாற்றுச் செய்திகள் இரண்டையும் இவ்வுரை குறிப்பிடுகிறது. பரிமேலழகரின் நால்வருணக் கோட்பாட்டிற்கு எதிராக எழுதவரும் பாவாணர் உருஷ்யாவின் பொதுவுடைமைக் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற ஸ்டாலினையும் (Stalin) அறிவியல் அறிஞர் எடிசனையும் குறிப்பிடுகிறார். இவ்விரு காட்டுகளின் மூலம் நால்வருணக் கொள்கையை மறுத்துரைக்கிறார்.

ஸ்டாலினைப் (Stalin) பறம்பர் (Shoe Makers) என்றும் எடிசனைச் செய்தித்தாள் விற்போராகவும் இவ்வுரை அடையாளம் காட்டுகிறது. ஸ்டாலின் இவ்வுரை எழுதப்பெற்ற காலத்தில் உருஷ்யாவின் தலைவராகப் பதவியிலிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

> **பரிமேலழகர் உரைத்தது போல் ஆரிய முறைப்பட்ட பிறவிக்குலப் பிரிவினையைத் தழுவுதல் கூடாது. எடிசன் செய்தித்தாள் விற்போராகவும், தாலின் (Stalin) பறம்பராகவும் இருந்து அறிவாலும் ஆட்சியாலும் மேன்மை பெற்றமை காண்க. ஆரிய முறைப்படி பறம்பன் ஆள்வோனாக முடியாது.**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை, தொகு.2, ப.24)

தம் காலத்திய எடுகோள்களின்வழி கூறவரும் கருத்து நால்வருணப் பாகுபாட்டை எதிர்த்தும், மறுத்தும் பேசுவதாக அமைகிறது. இதன்வழியே தம் அரசியல் சிந்தனையாகிய பெரியாரியத் தமிழ் மரபுப் பார்வையை இவ்வுரையில் பொருத்திக் காண்கிறார். இது பாவாணர் உரையின் பல்வேறு சிறப்புக் கூறுகளிலே முதன்மையான ஒன்று.

அறிவியல் வழிப்பட்டதான உரை

அறிவியல் என்பது காலந்தோறும் வெவ்வேறு வடிவங்களையும், கருது கோள்களையும் வைத்து இயங்கி வருவது. திறனாய்வாளன் தன் காலத்திற்குரிய அளவையையும் (Logic) அறிவியல் போக்கையும் தன் திறனாய்வில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தன் காலத்திற்குரிய உரையாளனாகவோ, திறனாய்வாளனாகவோ அவன் உருப்பெறுகிறான்.

அவ்வகையில் பாவாணர் உரை சிற்சில இடங்களுள் அறிவியல் கருத்துகளைத் தம் சமகாலக் கருத்துகளை உள்வாங்கி ஏற்ற இடங்களில் பொருத்தியும் காட்டியுள்ளது.

நெடும்புனலுள் முதலை யானையையும் வெற்றி கொள்ளும். (495) என்று உரை எழுதும் பாவாணர் முதலை குறித்ததான தம் அறிவியற் கருத்தைப் பதிவு செய்கிறார். விலங்கியலின்படி முதலை நீரிலும் நிலத்திலும் வாழும் உயிராகும். ஆகவே இதனால் அறிவியல் கலைச்சொல்லாகிய ஈரிட வாழி என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார். உயிரிகளின் படிமுறை வளர்ச்சியில்

1. நீர்வாழ்விகள் (Fish)
2. இருவாழ்விகள் (Amphibians)
3. பறப்பன (Aves)
4. முதுகு நாண் உள்ளவை (Vertebrate)

என்பன அந்நிலைகள். இவற்றுள் இரண்டாம் நிலையினவாகிய இருவாழ்விகளைப் பாவாணர் உரை குறிப்பிடுகிறது. அதனுள் ஒன்றாக முதலையை இனங்காணும் உரைப் போக்கு அறிவியல் கூறு கொண்டதாய் அமைகிறது.

> **முதலை ஈரிட வாழி (Amphibian) எனப்படினும் அதற்கு நிலத்தில் எளிதாய் இயங்கும் வலிமையுள்ள கால்களின்மையால், அதனினும் வலிகுன்றிய நிலவாழிகள் அதனை நிலத்தின் கண் எளிதாய் வென்று விடும்.**
>
> (திருக்குறள் தமிழ் மரபுரை, தொகு.2, ப.68)

இவ்வாறு ஈரிடவாழியாக முதலையை அறிவியற் கலைச்சொல்லோடு சுட்டும் உலக அறிவுப் போக்கின் முதிர்ச்சியைப் பிறவுரைகள் பெரும்பான்மையும் சுட்டவில்லை. பாவாணர் உரை அதனைச் செய்கிறது.

பாவாணரின் அறிவியல் பார்வை மிளிரும் இடங்கள் திருக்குறள் இன்பத்துப் பாலிலும் தொடர்கின்றன. 1950களில் மானுடவியல் சிந்தனையோடு இலக்கியத்தைப் புரிந்து கொள்ளல் என்னும் பார்வை மேற்குலகில் உருப்பெறத் தொடங்கிவிட்டது. இதனை உள்வாங்கி மானுடவியலைக் கோட்பாட்டில் பல கட்டுரைகளில் பாவாணர் பயன்படுத்தியுள்ளார்.

திருக்குறள் உரையில் களவியல் பற்றிய கருத்துகளை வரையறை செய்ய முற்படும் போது தமிழர்களின் திருமண முறை ஒருதாரத் திருமண முறை என்ற முடிவை வந்தடைகிறார். இதனை மானிடவியல் கலைச்சொல்லால் குறிப்பிடுவது ஈண்டுக் கருதத் தக்கது.

மானிடவியல்படி உலகளவில் உள்ள திருமணங்களை மூன்று வகைப்பட்டதாகப் பகுப்பர்.

1. ஒருதுணை மணம் (Monogamy)
2. பலதுணை மணம் (Polygamy)
3. பலகணவர் மணம் (Polyandry)

இவற்றுள் தமிழர் திருமண முறையை ஒருதார மணம் (Monogamy) என்று பாவாணரின் உரை கூறுகிறது.

ஒரு மனை மணமே (Monogamy) தமிழர் பண்பாடாதலானும் களவுக் கூட்டம் எத்துணையின்பம் சிறப்பினும் பின்னர்க் கற்பாக மாறவேண்டியிருந்தது. (திருக்குறள் தமிழ் மரபுரை, தொகுதி.4, ப.42)

மானிடவியல் சிந்தனைகளை 1800களிலேயே மார்கன் முதலான மானிட வியலாளர்கள் முன்னெடுத்துள்ளனர் அவற்றை உள்வாங்கிப் பாவாணர் உரை இன்றைய அறிவின் போக்கிற்கும் சூழலுக்கும் ஏற்ப அமைந்துள்ளது. மானுடவியல் சிந்தனைகளை இவரின் மற்றைய நூல்களில் கோட்பாட்டளவில் காணலாம். அவற்றின் ஒரு கூறு இவ்வகை உரைகூறலில் அமைந்துள்ளது.

வரலாற்று ஆய்வாளர் தேவநேயப் பாவாணர்

தேவநேயப் பாவாணர் என்னும் தமிழறிஞர் பல்துறை சான்றவர். பாவாணருக்குள் எல்லை மீறிச் சுழித்துக் கொண்டோடிய தமிழ் இனப்பற்றும், தமிழ் மொழிப்பற்றும் யாவரும் அறிந்தவை. இவற்றின் காரணமாகவே பாவாணர் சில ஆழமான ஆய்வு முடிவுகளில் அறிவுசார் முடிவுகளை மேற்கொள்ளாது உணர்வுத் தளத்திலிருந்து முடிவுகளை எடுத்துள்ளார். எனினும் அவற்றுள் ஒரு தருக்க நெறி இழையோடுகிறது.

பாவாணரின் இத்தகைய தமிழினவுணர்வு அவர் காலத்துச் சூழலோடு அணுகப்பட வேண்டிய ஒன்று. அவர் காலத்து பெரும் கருத்தியல் போக்காகச் செயல்பட்ட தமிழ்த் தேசியச் சிந்தனையின் தாக்கத்தைப் பாவாணருக்குள் அடையாளம் காண இயலும்.

பாவாணரை வெறும் உணர்வுத்தளம் சார்ந்து சிந்தித்த ஆய்வாளர் என நவீனக் கருத்துடையவர்கள் நிராகரிக்கும் போக்கு ஒருபுறம் நடந்து வந்துள்ளது. இத்தகையோர் வையாபுரிப் பிள்ளையின் வழியில் நின்று கருத்துகளை வெளிப்படுத்தியவர்கள். இவர்கள் பாவாணரை அறவே ஆய்வுப்புலத்திலிருந்து மறைக்க முற்பட்டார்கள் எனலாம்.

மற்றொரு தரப்பினர் பாவாணரை எவ்விதக் கேள்விகட்கும் உட்படுத்தாமல் எல்லாவிதமான விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டவராகப் புரிந்து கொண்டனர். ஆனால் பாவாணரைப் பற்றிய இவ்வாய்வு இவ்விரு தரப்பினர்க்கும் இடையே நிற்கிறது. பாவாணரைத் தமிழறிஞராக மட்டுமே சுருக்கிப்பார்த்து உரையாடுவது அவரைக் குறுகிய வட்டத்திற்குள் வைத்துப் புரிந்து கொள்வதாகும். பாவாணருக்குள் நீண்ட ஆழமான வரலாற்று விமரிசனப்படிப்பும், அது சார்ந்த விவாத மரபு ஒன்றும் குடிகொண்டிருந்தன. அவை அவரின் எழுத்துக்கள் முழுமையும் விரவியுள்ளதைக் காண முடிகிறது. மானுடவியல் சிந்தனைகள், தொல்லியல் கருத்துக்கள், புராணவியல் செய்திகள் ஆகியவற்றை இடமறிந்து சூழலோடு பொருத்திக்காட்டும் பாங்கு ஆய்வின் உன்னதத்தை வெளிப்படுத்தும் தருணங்களில் ஒன்று எனலாம்.

பாவாணரைப் பற்றிய இந்த ஆய்வின் மூலம் பாவாணர் ஒரு சிறந்த வரலாற்று ஆய்வாளர் என்ற நிலைப்பாட்டை வந்து அடைய முடிகிறது. இது பாவாணரின் தனித்த ஆளுமையாகும்.

இவ்வாய்வின் ஊடே பாவாணர் உடன்பட்டும் முரண்பட்டும் நின்ற இந்திய அயலக வரலாற்று ஆசிரியர்கள் மீதான விமர்சனமும் தனித்தனியே காட்டப்பட்டுள்ளது. பாவாணரின் ஆய்வுகளை அனைத்திந்திய வரலாற்று ஆய்வு மட்டத்தில் வைத்துப் பேசுதல் இவ்வாய்வின் மற்றொரு கருதுகோள். பொதுவாகவே தமிழ் இந்தியச் சூழலில் வரலாறு எழுதுதல் குறித்த விமர்சனப் பார்வையொன்று இல்லை. ஆங்கிலத்தில் வரலாற்று எழுதியல் Histrography என்ற தலைப்பில் இத்துறை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

ரொமிலா தாப்பர் (Romila Thappar) என்றும் இந்திய ஆய்வாளர் வரலாற்று எழுதியலைப் பொருத்தி இந்திய வரலாற்றை ஆய்ந்துள்ளார். இந்நூல் தமிழில் **வரலாறும் வக்கிரங்களும்** என்னும் தலைப்பில் பேரா.நா.வானமாமலையால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ரொமிலா தாப்பரின் முற்கால இந்தியா (Early India) என்னும் நூலும் இவ்வகையில் கருதத்தக்க நூல் எனலாம்.

தமிழில் இத்தகையதான கருதுகோள்கள் அதாவது வரலாற்றெழுதியல் தொடர்பான கருத்தாக்கங்கள் முன்னெடுக்கப் படும் போது நினைவு கூர்ந்து தேடி வாசிக்கப்படுபவராக தேவநேயப் பாவாணர் அமைவார் என்பது உறுதி. ஆகவே அவ்வாய்வுகளின் மூலம் பாவாணரின் வரலாற்றுப் புலமை நன்கு வெளிப்படுகிறது. இது இவரின் பன்முக ஆளுமைகளில் ஒன்றெனலாம்.

பாவாணருக்குள் வெளிப்பட்ட வரலாற்றாய்வுக் கூறுகளைப் பல்வேறு உட்தலைப்புகளின் வழியே வரலாற்றாய்வுப் பின்புலத்திலிருந்து இந்நூல் விரிவான தளம் நோக்கிய உரையாடலை முன் வைக்கிறது.

தமிழக வரலாற்றெழுதியல்

தமிழ் நூல்களின் பதிப்பு வரலாற்றிற்கும் தமிழர்களின் வரலாற்று வரைவியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அதாவது தமிழ் இலக்கியப் பனுவல்கள் வழியே தமிழரின் வரலாற்றை மீளுருவாக்கம் செய்யும் முயற்சியாகத் தொடக்ககால வரலாற்றாய்வுகள் அமைந்தன. 1835 பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியர்களுக்குப் பதிப்புரிமைச் சட்டம்

ஒன்றை நிறைவேற்றிய ஆண்டு. இவ்வாண்டு முதற்கொண்டு தமிழ்ப்பதிப்புகளும், இலக்கிய வரலாற்று முயற்சிகளும் எழுதுதல் தொடங்கின. இராபர்ட் கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (Comparative Grammar of the Dravidian Language). 1856ஆம் ஆண்டு எழுதப்பெற்று வெளியானது திருநெல்வேலி மாவட்டத்தில் பேராயராகப் பணியாற்றிய கால்டுவெல்லின் இந்நூலிலிருந்து தமிழ் இந்திய வரலாற்று வரைவு தொடங்குகிறது. சைமன் காசிச்செட்டியும் தமிழ் புளுடார்க் (The Tamil Plutarch) என்னும் தமிழ்ப் புலவர்களைப் பற்றிய வரலாற்றுச் குறிப்புகளைக் கொண்ட இந்நூல் 1859இல் வெளியானது. ஜான் மர்டாக் (John Murdoch) எழுதிய தமிழ் அச்சுநூல்களின் பட்டியல் என்ற நூலும் இவ்வகையில் அச்சில் வெளியான நூல் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் நூலாகும். 1895இல் வி.கனகசபைப் பிள்ளை எழுதிய 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்ற ஆங்கில நூல் தமிழர் தொடர்பான முதல் இலக்கிய வழி உருப்பெற்ற வரலாற்று நூலாகும்.

ஒரு நாட்டின் வரலாற்றை எழுதுவதற்குப் பல்வேறு தரவுகள் உண்டு. குறிப்பாகக் கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகள், அயல்நாட்டினரின் பயணக்குறிப்புகள், நாட்டார் பாடல்கள் (Folk lore). இலக்கியத் தரவுகள் எனப் பல. வரலாற்று எழுதியியலில் கருத்திற் கொள்ளப்பெறும் சான்றுகளாக இவற்றைக் கூறலாம். தமிழ்ச்சூழலில் 19ஆம் நூற்றாண்டில் வரையப் பெற்ற வரலாற்றாய்வுகள் பெரும்பான்மையும் இலக்கியத்தையே முழுமையான தரவாகக் கொண்டிருந்தன. இவ்வாறு எழுதப்பெற்றவை இலக்கியத்தின் வழி வரலாறாகக் கருதத்தக்கன.

20ஆம் நூற்றாண்டின் வரலாற்று எழுதுகை சில மாற்றங்களைக் கண்டது. கல்வெட்டியல், தொல்லியல், மானுடவியல் போன்றதான துறைகளின் ஒருங்கிணைவுடன் வரலாற்றை எழுதுதல் உருவானது. செந்தமிழ் இலக்கிய இதழ் தொடங்கப்பெற்றதும் அதில் கல்வெட்டுகள் தொடர்பான கட்டுரைகள் பல இடம்பெற்றன. இரா.இராகவையங்கார் செந்தமிழில் ஆசிரியராக இருந்த போதும் மு.இராகவையங்கார் ஆசிரியராக இருந்த போதும் பல்வேறு கல்வெட்டு, வரலாறு தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றன. இவ்வகையில் மு.இராகவையங்காரின் **வேளிர்வரலாறு** (1913) என்னும் நூலும் இரா.இராகவையங்காரின் **வஞ்சிமாநகரம்** (1917) என்னும் நூலும்

குறிப்பிடக் கூடியன. மு.இராகவையங்காரின் கல்வெட்டியல் தொடர்பான கட்டுரைகள் 1937ஆம் ஆண்டு **சாசனத் தமிழ்க் கவிச் சரிதம்** என்னும் நூலாக வெளியாயின.

இத்தகைய வரலாற்று நூல் வரிசைகளில் குறிப்பிடத்தக்க நூல்களாக மு.சீனிவாச ஐயங்காரின் **தமிழ் ஆய்வு** (1914), கே.எஸ் சீனிவாசப்பிள்ளையின் **தமிழர் வரலாறு** (1922) ஆகியவற்றைக் கூறலாம். இவை தேவநேய பாவாணர் வரலாற்றுத் துறையில் நூல் யாத்தலுக்கு முன்பு வரையில் வெளிவந்த வரலாற்று நூல்களாகும். இவற்றை உள்வாங்கிக் கொண்டே பாவாணரின் வரலாற்று ஆய்வுகள் தொடங்கின.

தேவநேயப் பாவாணரின் வரலாற்றுப் பார்வை

பாவாணரின் வரலாற்றுப் பார்வையும் பங்களிப்பும் தனித்தமிழ் இயக்கத்தினருக்குப் பெரும் கொடையாயின. பாவாணர் அறிவார்ந்த நிலையிலிருந்து வரலாற்றைப் புரிந்து அணுகி ஆராய்ந்துள்ளார். இதனை விளக்குவதற்குப் பாவாணார் வரலாற்று ஆதாரங்களாகக் காட்டியுள்ளவற்றின் பட்டியலே போதுமான சான்றாக அமையும். அவை பின்வருவனவாக அமைகின்றன.

1. தொல்பொருளியல்
2. இலக்கியம்
3. செவிமரபுச் செய்திகள்
4. பழக்க வழக்கங்கள்
5. மொழிநூற் சான்றுகள்
6. நில நூல் சான்றுகள்
7. கடல் நூல் சான்றுகள்

இத்தகைய சான்றுகளைச் சார்ந்தே பாவாணரின் எழுத்துக்கள் அமைந்தன. ஆகவேதான் பாவாணர் என்ற ஒரு தமிழறிஞர் வரலாற்றுப் புலமையோடு எண்ணிப்பார்க்கத் தக்கவராக விளங்குகிறார்.

வரலாற்று மூலங்கள் என்னும் தலைப்பில் பாவாணர் சில கருத்துகளைச் சுட்டியுள்ளார். வரலாற்றை மீளுருவாக்கம் செய்வதற்கு இன்றியமையாத வரலாற்று மூலங்களைப் பாவாணர் பின்வருமாறு

காட்டுகிறார். இவற்றில் காணலாகும் பாவாணரின் வரலாறு தொடர்பான தெளிவு பொருந்திய சிந்தனைகளை இங்கே தொகுக்கலாம்.

இலக்கியம் என்னும் தலைப்பில் வரலாற்று மூலபங்களாக பயன்படக் கூடியவற்றின் இயல்புகளைப் பாவாணர் காட்டுவதாவது.

> **வெட்டெழுத்து, திருமுகம், மந்திர ஓலைச்சுவடி நாட்குறிப்பு, வழிப்போக்கர் வண்ணனை, வரலாற்றுக் குறிப்புகள், வரலாற்றுப் பனுவல்கள் அல்லது பொத்தகங்கள்.** (தமிழக வரலாறு தொ.1, ப.18)

வெட்டெழுத்துக் குறித்தும் பட்டைப் பொறிப்பு, களிமட்குழிப்பு, கல்வெட்டு, செப்புப் பட்டயம், இவை குறித்த புலமையோடு பாவாணர் வரலாற்றை அணுகியுள்ளார். வரலாற்று மூலங்கள் மீதான தொடர் ஐயம் கொள்பவனும், அதில் ஒரு தேர்ச்சியை நாடக்கூடியவனுமே சிறந்த வரலாற்று ஆய்வாளனாகத் திகழ முடியும். அவ்வகையில் பாவாணரின் இத்தகைய மூலங்கள் பற்றிய தெளிவு அமைகிறது.

பாவாணரின் வரலாற்றுப் பகுப்பு

பாவாணரின் வரலாற்றுப் பார்வையைப் பின்புலமாகவும், உந்து சக்தியாகவும் கொண்டது தனித்தமிழ் இயக்கம். இதன் பார்வையே (Perception) பாவாணரின் வரலாற்றுப் பார்வையாகவும் மாறியது. இதற்கேற்ப பாவாணர் சில மேனாட்டு வரலாற்று ஆய்வாளர்களையும், மானுடவியல் சிந்தனைகளையும் எடுத்துப்பயன்படுத்தியுள்ளார். பாவாணரின் இத்தகைய பார்வை உணர்வுத்தளம் சார்ந்த ஒன்று மட்டுமேயன்று. அதற்குள் இழையோடிய அறிவார்ந்த அளவையையும் ஆய்வு முறைமையும் (Research Method) மறுக்க இயலாதவை; ஆழமானவை.

தமிழர் சரித்திரச் சுருக்கம் என்னும் தலைப்பில் பாவாணர் தமிழகச் சரித்திரத்தைத் தம் பார்வையின் வழியே பகுத்துரைக்கிறார். அப்பகுப்பினைக் கீழ்வருமாறு காட்டலாம்.

1. கழகக் காலத்திற்கு முற்காலம்
2. கழகக் காலம்
3. இடைக்காலம் (கி.பி 1300-1500)
4. தற்காலம் (கி.பி 1600 முதல்)

முரண்படுகின்றனர்.

முதன் முதலில் சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றி விரிவான ஆய்வு மேற்கொண்டவர் சர். ஜான் மார்ஷல். இவரின் ஆய்வு முடிவுகளுக்குப் பின்னர் சிந்து சமவெளியின் எல்லையைப் பற்றி எஸ்.ஆர். ராவ் என்பவர் நிகழ்த்திய ஆய்வுகள் சிந்து வெளி நாகரிகம் குஜராத் கடற்கரைவரையிலும் பரவியிருந்ததை அறிய முடிகிறது.

ஆரியர்களின் இந்திய வருகைக்கு முன்பாக வடமேற்கு இந்தியாவிலும் வட இந்தியாவிலும் திரவிட இன மக்களே வாழ்ந்து வந்தனர் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவர்களுள் முதன்மையானவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பர்ரோ என்பவரும் ஆவார். இவரைப் போன்றே சிந்து வெளி மொழியானது பண்டைய தமிழ் வடிவத்தோடு பெரிதும் ஒத்துள்ளது எனக்கண்டறிந்து வெளியிட்டவர் ஈராஸ் பாதிரியார். இதனைக் குறித்துக் கே.கே. பிள்ளை தம் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்.

> **ஹீராஸ் பாதிரியார் தம் கொள்கைக்குச் சார்பாகப் பல சான்றுகளைக் காட்டியுள்ளார். இவர் இவ்விரு மொழிக்கும் இடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவருடைய கொள்கையைச் சிலர் பொருத்தமற்றது என ஒதுக்கினர். ஆனால் இக்காலத்து விஞ்ஞான முறையில் நடைபெற்று வரும் ஆய்வுகள் பாதிரியாரின் கொள்கையை மெய்பித்து வருகின்றன.** (தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் ப.42,43)

இவ்வாறு சான்று காட்டும் கே.கே. பிள்ளை தம்முடைய கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் ஆய்வாளர் ஐராவதம் மகாதேவனின் எடுகோள்களையும் காட்டுகிறார். இவற்றை மேற்சுட்டிய தம் நூலில் ஆறு புள்ளிகளாகத் தொகுத்துரைக்கிறார்.

பாவாணரின் அன்றைய கருதுகோள்களுக்கு இன்றைய ஆய்வாளர் பலரும் உறுதிபயக்கும் கருத்துக்களைக் கூறி வருகின்றனர் என்பதற்கு மேற்சுட்டியவை சான்றுகளாக விளங்குகின்றன. பாவாணர் திராவிடர்கள்தாம் சிந்து சமவெளி மக்கள் எனப் பலவிடத்தும் தெளிவு படுத்துகிறார்.

பாவாணர் தம்முடைய வரலாற்றுத் தரவிற்காகப் பயன்படுத்தியதில் முதன்மையானது கே.ஏ நீலகண்ட சாஸ்திரியின் நூல்களும் அடங்கும். தமிழரசர் மரபுகள் என்னும் தலைப்பில் பாவாணர் கட்டுரை **(தமிழர் திருமணம் பக்.74)** ஒன்று பாண்டியர்களின் சுருக்க வரலாற்றைத் தொகுத்துக் கூறுகிறது. இக்கட்டுரையின் கீழ்ச் சுட்டப்பெற்றுள்ள அடிக்குறிப்பு பின்வருமாறு அமைகிறது.

> **இங்குக் கூறப்படும் மரபுகள் உயர்திரு நீலகண்ட சாஸ்திரியார் அவர்களின் 'Pandian Kingdom' என்ற நூலைத் தழுவியவை.** (தமிழர் திருமணம் ப.74)

இவ்வாறு வரலாற்று நூல்களின் பின்புலத்தோடு பாவாணர் சிற்சில வரலாற்று முடிபுகளை முன்வைத்துள்ளார். அவற்றை இன்றைய அறிவுலகப் போக்கோடு பொருத்திப்பார்க்கும்போது சில இடர்ப்பாடுகள் காணப்படினும் அவையனைத்தையும் தொகுத்துப் பார்க்கையில் பாவாணரின் வரலாற்றாய்வு தெளிவாக விளங்குகிறது. இனிப் பாவாணர் முன்வைத்த தமிழக வரலாற்றில் மிக முதன்மையான சில புள்ளிகளை இங்குக் காணலாம்.

1. சிந்து சமவெளி நாகரிகம் – தமிழர் தொடர்பு
2. குமரி நாடு தொடர்பானவை

1. சிந்து சமவெளி நாகரிகமும் பாவாணரும்

சிந்து சமவெளி நாகரிகம் தொடர்பான ஆய்வுகளைப் பாவாணர் தமிழ் திராவிட மரபோடு இணைத்துக் காண்கிறார். பாவாணரின் சமகால ஆய்வாளராக இயங்கிய ஐராவதம் மகாதேவன் சிந்து சமவெளி நாகரிகத்தை ஆரியத்தோடு இணைத்து அன்றைய நாள்களில் பேசியவர். தற்போதைய ஐராவதம் மகாதேவனின் ஆய்வு முடிவுகள் திராவிடம் தொடர்பாக வெளியாவதை இன்றைய இதழ்கள்வழி காண இயலுகிறது. அன்றைய காலக்கட்ட மகாதேவனின் கருதுகோள்களைப் பாவாணர் எதிர்த்து எழுதியும் பேசியும் வந்துள்ளார்.

அரப்பா. மொகஞ்சதாரோ பற்றிய அகழ்வாராய்ச்சிகளின் மீதான தொல் பொருள் துறையினரின் கருத்துகளை உள்வாங்கிப் பாவாணர் தம் நூல்களில் அவற்றைப் பரந்த அளவில் பயன்படுத்தியுள்ளார். சிந்து சமவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற பொருள்களைக் கொண்டு அவை குறித்த காலக் குறிப்புகளில் ஒவ்வொரு ஆய்வாளர்களும்

ஆதியில் நாவலந்தேசம் முழுவதும் திராவிடரே பரவியிருந்தனர். மொகஞ்சதாரோ ஹரப்பா என்ற நகரங்களில் வாழ்ந்த மக்கள் ஆரிய ரெரையும் அறியாத திராவிடர்களே. (தமிழர் திருமணம் ப.76)

பாவாணர் கூறும் சொற்களில் இழையோடும் இருபெரும் கருத்துகளும் இன்று ஆய்வுமுடிபுகளாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சிறப்பு நிலையில் இங்கு விவரிப்பின் பின்வருமாறு எழுதலாம்.

1. மொகஞ்சதாரோ மக்கள் நகரங்களில் வாழ்ந்தார்கள்
2. மொகஞ்சதாரோவைச் சார்ந்தோர் ஆரியர் அல்லர்

இவ்விரு கருத்துகளையுமே இன்றைய ஆய்வாளர்கள் பலரும் ஒப்புக் கொள்கின்றனர். ஆரியர்களுடைய அதர்வண வேதங்களின் குறிப்புகளைக் காணும் போது அரப்பா மொகஞ்சதாரோ நாகரிகங்கள் அதனுடன் தொடர்புடையனவாகக் கருத இயலாது என்றும் அரப்பா நாகரிகம் நகர நாகரிகம் என்றும் கே.கே. பிள்ளை எழுதியிருக்கிறார். **(தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் ப.47)**

அரப்பா நாகரிகம் ஆரிய நாகரிகத்தோடு தொடர்பற்றது என்பதற்கான மற்றொரு காரணம் சிந்துவெளி அரப்பா நாகரிகம் சார்ந்தவர்கள் இலிங்க வழிபாட்டை உடையவர்களாக இருந்துள்ளனர். ஆனால் ஆரியர்கள் இலிங்க வழிபாட்டை எள்ளி நகையாடியவர்கள். ஆகவே ஹரப்பா நாகரிகம் திராவிட இனத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்று ரொமிலா தாப்பர் கருதுகிறார்.

இதனையே பாவாணர் கொள்கை முடிபாகக் கொண்டார். பாவாணர் அந்தணரைக் கொள்கையளவில் கடிந்து கொண்டாரேனும் தம்முடைய ஆய்வு முடிபிற்கேற்ப வரையப் பெற்ற வரலாற்று நூல்களை அத்தகையோர் இயற்றியிருப்பின் அதனைச் சார்ந்து எழுதினார். சீனிவாச ஐயங்கார் நூல்களையும் இராமச்சந்திர தீட்சிதரின் நூல்களையும் இவ்வகையில் பாராட்டியுள்ளது கருதத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறைத் தலைவராயிருந்த சீனிவாச ஐயங்காரும் இராமச்சந்திர தீட்சிதரும் தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்களென்று

நாட்டி முறையே தமிழக வரலாறும் தென்னாட்டு வரலாறும் சிறந்த முறையில் எழுதியுள்ளனர். (தமிழர் வரலாறு, ப. 14)

இதுதான் பாவாணரின் கொள்கை வழிபட்ட நிலைப்பாடு.

உலக வரலாற்றுப் போக்கு

உலக வரலாற்று ஆசிரியர்கள் உலகத்தின் பொதுமையான தோற்றச் செயல்பாட்டைப் பழங்காலம், புதிய கற்காலம், செம்புக் காலம், இரும்புக் காலம் எனப் பிரித்து அணுகுவர். இத்தகைய பிரிப்பு முறையைப் பாவாணரின் தமிழர் வரலாறும் ஏற்றுக் கொண்டு நடைபயில்கிறது. இக்காரணத்தினாலேயே பாவாணரின் வரலாற்று ஆய்வு அறிவியல்பாற் பட்ட ஆய்வாகவும் தோற்றம் தருகிறது.

பாவாணரின் உலக வரலாற்றுக் காலப் பகுப்போடு உடன்பட்டு தமிழர் வரலாற்றுக் காலக்கட்டங்களைப் பின்வரும் காலக் கட்டங்களாகப் பிரித்துள்ளார்.

1. கற்காலம் (Stone Age) (தோரா. கி.மு. 50000)
2. புதுக் கற்காலம் (New Stone Age) (கி.மு. 100000 - 50000)
3. பொற்க் காலம் (Gold Age) (கி.மு. 50000-30000)
4. செம்புக் காலம் (Copper Age) கி.மு. 30000-15000)
5. உறைக்காலம் (Bronze Age) கி.மு. 15000- 10000)
6. இரும்புக்காலம் (Iron Age) கி.மு. 10000

மேற்சுட்டிய ஒவ்வொரு காலப் பகுதிக்கும் ஏற்ப இலக்கிய மேற்கோள்கள், அயல் நாட்டார் காட்டியுள்ள கோட்பாட்டுத் தரவுகள் இவற்றைக் கொண்டு பாவாணரின் வரலாற்றெழுதியல் அமைந்துள்ளது.

குமரிக் காண்டம்

குமரிக்கண்டம் தொடர்பான கருத்தாடல் பாவாணரின் கொள்கைகளில் மிக முதன்மையானது. திராவிட இனத்தின் தொடக்க கால நிலப்பரப்பாகப் பாவாணர் குறிப்பிடுவது லெமூரியா கண்டம். இதனை நாவலந்தீவு என்னும் சொல்லால் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன என்பது அவரின் கருத்தாகும். குமரிக்கண்டத்தின் நான்கு நிலைகளையும் பாவாணரின் நூல் பட்டியலிட்டு விளக்குகிறது.

1. ஆப்பிரிக்காவோடும், ஆத்திரேலியாவோடும் கூடிய பழம் பாண்டிய நாடு.

2. ஆப்பிரிக்கா நீங்கிய பழம் பாண்டிய நாடு

3. ஆத்திரேலியா நீங்கிய பழம் பாண்டிய நாடு

4. சிறிது சிறிதாய்க் குறைந்து வந்த பாண்டிய நாடு

லெமூரியா கண்டம் என்னும் கருதுகோளைப் பாவாணர் வந்து அடைவதற்குப் பல்வேறு ஆய்வாளர்களின் ஆய்வுகள் துணைநின்றுள்ளன. குறிப்பாகக் கால்டுவெல்லின் திருநெல்வேலி பற்றிய வரைவுகளிலிருந்து பழம் இந்திய மரங்கள் பற்றிய குறிப்பைத் திரட்டுகிறார். இம்மரங்கள் ஆப்பிரிக்கக் காடுகளுடன் தொடர்புடையன என்னும் கால்டுவெல்லின் அடிக்குறிப்பிலிருந்து லெமூரியா கண்டம் தொடர்பான செய்திக்குப் பாவாணர் வருகிறார்.

> **இந்தியர்களுக்குப் பெயரே தெரியாத சில பழங்காலத்து மாபெரிய பப்பரபுளி அல்லது யானைப்புளி, மேனாட்டுச் சீமைப்புளி என்னும் ஆப்பிரிக்க மரங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கருகில் பழைய கொற்கை இருந்திருக்கக்கூடிய இடத்தில் இன்றும் காணப் படுகின்றன.** (தமிழர் வரலாறு தொ.1 ப. 4)

பாவாணரைப் பொறுத்தமட்டில் கிடைக்கும் ஒவ்வொரு செய்தியை தம்முடைய லெமூரியா கண்டத்திற்குரிய கோட்பாட்டு நிலைப்படுத்துவதிலேயே ஈடுபட்டுள்ளார். அதற்கு இது ஒரு காட்டாக அமைகிறது. பாவாணரின் பார்வையில் ஒவ்வொரு காலக்கட்டதிற்குமான வரையறைகளை இனிக் காணலாம்.

கற்காலம்

கற்கால மாந்தர் கல்லால் பல்வேறு கருவிகளைச் செய்து கொண்ட காலம் கற்காலமாகும். இது பழங்கற்காலம், புதுக் கற்காலம் என்னும் இருவகைப்படும். இக்காலப் பகுதிக்குரிய மொழியாகப் பாவாணர் சில வகையான ஒலிக்குறிப்புகள் அடங்கிய மொழியைக் காட்டுகிறார். இவை மொழியியல் அ஀றிஞர்கள் ஏற்றுக் கொண்ட கருதுகோள்களாகும். இவ்வகைப் பட்ட மொழிகளை ஒலிக்கூறுகள் எனக் கூறுவதுண்டு. பாவாணர் இதனை இயற்கை மொழி (Natural Language) அல்லது

முழைதல் மொழி (Inarticular Speech) என்றழைக்கிறார். இத்தகைய மொழியியல் கூறுகளாகப் பின்வருவன அமைகின்றன.

1. உணர்வொலிகள் (Emotional Sounds)
2. விளியொலிகள் (Vocative Sounds)
3. ஒப்பொலிகள் (Imitative Sounds)
4. குறிப்பொலிகள் (Symbolic Sounds)
5. வாய்ச்செய்கை ஒலிகள் (Gesticulatory Sounds)
6. குழவி வளர்ப்பொலிகள் (Nursery Sounds)
7. சுட்டொலிகள் (Deictic Sounds)

இவையே கற்கால மாந்தர்கள் வெளிப்படுத்திய மொழியியல் கூறுகளாகும்.

புதுக் கற்காலம்

குமரி மாந்தர் பழங்கற்காலக் கருவிகளைத் திண்கணக் கருங்கல்லால் வழவழப்பாகவும், மிகக் கூரியனவாகவும் செய்து கொண்ட காலக் கட்டம் புதுக் கற்காலமாகும். இதனை ஆங்கிலத் தொல்லியல் துறை மெகாலித்திக் (Megalithic) என்று குறிப்பிடுகின்றது. இக்காலக்கட்டத்தின் மொழியியல் வளர்ச்சி நிலைகளாகப் பின்வரும் கூறுகள் காணப்பட்டதைப் பாவாணர் காட்டுகிறார்.

1. அசைநிலை (Isolating)
2. புணர்நிலை (Compounding Stage)
3. கொளுவுநிலை (Agglutinative Stage)
4. பகுசொன்னிலை (Inflexional Stage) என்பன.

பொற்காலம்

பொற்காலம் என்பது பிற நாட்டினர் எழுதியுள்ள மாந்தர் நாகரிக வளர்ச்சியில் காட்டப் படுவதில்லை. ஆனால் தமிழகத்தில் அப்படியான காலக்கட்டம் ஒன்று இருந்துள்ளது என்பதைப் பாவாணர் காட்டுகிறார். இப்படியொரு காலக்கட்டத்தைத் தாம் காட்ட வேண்டியதன் வரலாற்றின் கடப்பாட்டையும் பின்வருமாறு எழுதுகிறார்.

> பொற்காலம் என வொன்று தமிழகம் தவிர வேறு எந்த நாட்டிற்கும் இருந்ததில்லை. பிற நாடுகளெல்லாம் பொற்காலம் என்பது அணியியல் பொருளில், ஒழுக்கத்தில், செல்வத்திலும், கல்வியிலும் தலைசிறந்த காலத்தை மட்டுமே குறிக்கும். செஞ்சொற் பொருளில் பொற்கருவிகளை வழங்கிய காலமொன்றைக் குறிக்காது. தமிழ்நாட்டிலுள்ள பல்வகைச் தனிச்சிறப்புகளுள் பொற்காலமும் ஒன்றாகும். (தமிழர் வரலாறு, தொ.1 ப.33)

இத்தகைய இப்பொற்காலம் குறித்த கருத்து மேலை வரலாற்று நூல்களுள் குறிக்கப் பெறுவதில்லை என்பது கருதத்தக்கது. தமிழகத்தில் பொன்னைப் பற்றிய வழக்காறுகள் மிகுதியாக இலக்கியங்களில் காணப்படுவதும், பொன் பற்றி வெளி நாட்டார் குறிப்புகளையும் மட்டும் வைத்துக் கொண்டு இத்தகையதான ஒரு முடிவுக்குப் பாவாணர் வருகிறார். இதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைப் பாவாணரின் நூல் குறிப்பிடுகின்றது.

1. தில்லையம்பலம் பொன்னம்பலமாய் இருத்தல் வேண்டும்.
2. மிக அதிகமாகப் பொன் கிடைக்கும் இடங்களுள் தென் ஆப்பிரிக்காவும் ஒன்று.
3. ஆத்திரேலியாவில் 1850இல் பொன் கண்டுபிடிக்கப்பட்டதும் மிக அதிகமான பொன் எடுக்கப்பட்டதும்.
4. கி.மு.பதினோராம் நூற்றாண்டில் யூதேயாவை ஆண்ட சாலமோன் அரசன் ஒப்பீர் என்னும் இந்தியத் துறை முகத்திலிருந்து வருவிக்கப் பட்ட பொன்.
5. சேக்சுபியர் தம்முடைய பன்னிரண்டாம் இரவு என்னும் நாடகத்தில் பொன்னை இந்திய மாழை (Metal of India) என்கிறார்.

இவையனைத்தையும் முதன்மைக் காரணங்களாகக் கருதித் திராவிடர்கள் வரலாறு எழுதுகையில் பொற்காலம் (Gold Age) என்ற ஒன்று இருந்திருக்கலாம் என்னும் நிலைக்குப் பாவாணர் வருகிறார்.

இக்கருதுகோள் இன்றைய வரலாறு பற்றிய அறிவுத்துறை வளர்ச்சிப்போக்கில் மேலாய்விற்குரிய ஒன்றாக உள்ளது.

பொற்காலத்தின் மொழியியல் வளர்ச்சிக் கூறுகளாகப் பாவாணர் மூன்றினைக் காட்டுகிறார்.

1. பகுசொன்னிலை (Inflexional Stage)
2. கடந்து தொகுநிலை (Synthetic Stage)
3. பல்தொகுநிலை (Polysynthetic Stage)

இக்காலக்கட்டத்தின் சமூக வளர்ச்சி நிலைகளாக ஊரின் தோற்றம், கோவில் வழிபாடு, அதனைச் செய்யும் பூசகன், காவல் செய்து வழக்குகளைத் தீர்க்கும் தலைவன், பண்டமாற்ற ஒரு கடைக்காரன் ஆகியோரின் தோற்றத்தைக் குறிப்பிடுகிறார். சமூகவியலின் படி இக்காலக்கட்டம் அரசு தோற்றத்தின் (State Formation) காலக்கட்டமாகச் சமூக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

செம்புக் காலம்

பொன் கிடைப்பு வர வரக் குன்றியதாலும், அணிகலன் களுக்கும், உண்கலன்களுக்கும், குடிகலன்களுக்கும் பொன்னைப் பெரிதும் பயன்படுத்தியதாலும் நாளடைவில் பல கருவிகளையும் கலங்களையும் செய்வதற்குச் செம்மை கண்டறிந்தனர் என்பது பாவாணர் கருத்து. இக்காலக்கட்டத்தின் மொழிவளர்ச்சியாக எண் வேற்றுமைகளும், முக்காலமும், பல்வகை எச்சமுற்றுகளும், முழு நிறைவான சொற்றொடர் அமைப்பும், செம்புக் காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். எழுத்து வகையில் ஒலியெழுத்து தோன்றியிருக்க வேண்டும்.

இக்காலக்கட்டத்தில் பா வகையில் ஆசிரியப் பாவும், கலிப்பாவும், எண் நிலையில் பதினாயிரம் வரையிலும், சமயத்துறையில் மறுமை உணர்வும், விண்ணுலகக் கொள்கையும் தோன்றியிருக்கக் கூடும் என்பது பாவாணரின் கருதுகோள்.

உறைகாலம்

உறை என்பது வெண்கலம் எனப் பொருள் படும். எட்டுப் பங்கு செம்பும், ஒரு பங்கு தகரமும் கலந்த கலவையே வெண்கலம். இக்காலத்து மொழியில் வளர்ச்சியாக யகர, ஒகரக் குறிகளும் ல,ற,ழ,ன ஆகிய மெய்யெழுத்துகளும் தோன்றின என்பது பாவாணரின் பார்வை.

இரும்புக் காலம்

இரும்புக் காலம் உலகில் நாகரிகத்தையும், தொழில் பரவலாக்கத்தையும் அறிவுப் பரவலாக்கத்தையும் ஒருங்கே கொண்டுவந்த காலமாகும். மேனாட்டு வரலாற்றை எழுதுவோர் தொழிற்புரட்சியிலிருந்து அதனைத் தொடங்குவர். இங்கிருந்தே நவீனக் காலம் தொடங்குகிறது. தொழிற்புரட்சிக்கு அடிப்படையானது இரும்பு கண்டுபிடிப்பும், நிலக்கரி கண்டுபிடிப்புமேயாகும். இக்காலத்தில் தலைக்கழகம் தோற்றம் பெற்றதாகப் பாவாணர் கருதுகிறார்.

கற்காலம் தொடங்கி இரும்புக் காலம் வரையில் கூறப்பட்ட கருத்துகள் அனைத்தும் மேற்குலக வரலாற்று மானுடவியல் சிந்தனைகளைத் தழுவித் தமிழியல் புலத்தில் பொருத்தி எழுதப்பட்டவையாகும். இவற்றைப் பாவாணர் முன்வைக்கும் போது முழுவதும் ஐரோப்பியச் சிந்தனைகளை மட்டுமே உள்வாங்கி எழுதியுள்ளவராக இல்லாமல் தனித்த, நமக்கான பண்பாட்டுச் செயல்பாடு நோக்கி இப்புதிய கருத்துகளைத் தொகுத்துத் தந்துள்ளார்.

இவை ஆழ்ந்த வாசிப்பிற்கும் விமர்சனத்திற்கும் உரியவை என்ற போதிலும் பாவாணரின் இத்தகைய முதல் முயற்சி தமிழில் குறிப்பிடப்படக் கூடியவொன்றாக அமைந்துள்ளது.

தமிழர் வரலாறு முப்பிரிவு

தமிழர் வரலாற்றைப் பாவாணர் முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து அணுகி ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு தொகு நூல்களை அவர் வரைந்துள்ளார்.

1. தனிநிலைக் காண்டம்
2. கலவுநிலைக் காண்டம்
3. தெளிநிலைக் காண்டம்

இவற்றுள் தனிநிலைக் காண்டம் என்பது ஆரியரின் வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ் காலச் செய்திகளைக் கூறும் பகுதி. ஆரியர் வந்த பின்னர் ஆரியரின் சிந்தனைகளும், சொற்களும் தமிழில் கலந்த பின்னர் எழுதப் பட்டது கலவு நிலைக் காண்டம். மூன்றாவதாக அமைவது ஆரியக் கலப்பு நீங்கித் தமிழர்கள் தெளிவு பெற்றதைக் கூறும் தெளிநிலைக்காண்டம்.

இவற்றில் காணலாகும் தனிநிலைக் காண்டம் என்னும் பகுதி லெமூரியா கண்டத்தைப் பற்றியும், முதல் மனிதனின் தோற்றம் பற்றியும் கூறுகிறது. இப்பூமியின் நான்கு கண்டங்களை வி.ஆர்இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய வரலாற்று முன்னைத் தென்னிந்தியா என்னும் நூலிலிருந்து பாவாணர் எடுத்துப் பேசுகிறார். அவை காண்டவனம், அங்காரம், பாலதிகம், அமசோனியம் என்பன. இதனைப் பாவாணரின் கூற்றுகளின் வழியே காண்போம்.

> **ஞால நிலப் பாகம் இங்குள்ளவாறு ஐந்து கண்டங்களாகவும் ஆயிரக்கணக்கான தீவுகளாகவும் தொன்றுதொட்டு இருந்ததில்லை. ஒருகாலத்தில் அது காண்டவனம், அங்காரம், பாலதிக்கம், அமசோனியம் என்ற நாற்பெரும் நிலங்களாகவும் ஒருசில தீவுகளாகவும் பிரிந்திருந்தது.** (தமிழர் வரலாறு 1. ப.1)

பாவாணர் காட்டும் இத்தகைய உலகப் புவியியல் சார்ந்த முடிபுகளுக்கு இன்றைய அறிவியல் அறிஞர்களும் உடன்படுகின்றனர்.

சுமேரியர் – தமிழர் உறவு

சுமேரியர் என்னும் இனப்பிரிவினர் தமிழர்களின் மூதாதையர் என்னும் கூற்றைப் பாவாணரின் நூல்களில் பலவற்றினுள்ளும் பரக்கக் காண இயலும். இத்தகைய கூற்றின் நிலைப்பாட்டை வந்தடையக் காரணமாக அவருக்கு அமைந்த நூல் தமிழரின் தோற்றமும் பரவலும் (Oigin and Spread of the Tamils) என்ற இராமச்சந்திர தீட்சிதரின் நூலாகும்.

இந்நூலின் துணைக்கொண்டே இக்கருத்தைத் தம் ஆய்வுப் பயணத்தின் ஊடாகப் பொதுமைப் படுத்திப் பேசுகிறார் பாவாணர்.

> **உலகில் முதல் முதலில் எழுதப் பட்ட மொழி சுமேரியம் என்றும், அது கி.மு 3010இல் எழுத்து மொழியாய் வழங்கியதற்குச் சான்றுகள் உள்ளதென்றும் பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில் கூறப்பட்டுள்ளது. தமிழகத்தினின்று சென்ற ஒரு கூட்டத்தாரே சுமேரியரின் முன்னோர் என்னும் உண்மையை பேரா. இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய**

> **தமிழரின் தோற்றமும் பரவலும் என்னும் நூலில் கண்டு தெளிக.** (தமிழர் வரலாறு ப.20)

பாவாணர் நேரடியான வரலாற்று ஆய்வாளர் அல்லர். அவர் தமிழியல் புலம்சார்ந்து வரலாற்றைக் கட்டமைக்க விரும்பியவர். இதற்கு வரலாற்றுத் துணைசார் பேராசிரியர் ஆய்வாளர் கருத்துகளைச் சான்றுகளாகக் கொண்டு தம் தனித்தமிழ் இயக்கச் சிந்தனைசார்போடு வரலாற்றைப் பார்த்தவர். இதனாலேயே சுமேரிய, பாபிலோனிய நாகரிகம் குறித்த இப்புரிதலுக்கு அவர் வந்துள்ளார்.

பாவாணரின் வரலாற்று ஆய்வு முறைமை

பாவாணரின் வரலாற்று ஆய்வு எத்தகைய விவரிப்பு அல்லது கோட்பாட்டு முறையைக் கொண்டிருந்தது என்பது ஒரு முதன்மையான வினா. ஓர் ஆய்வாளன் தன்னுடைய எழுத்தின் தருக்கநெறி குறித்து அறிந்திருப்பவனாய் இருக்க வேண்டும் என்பர். அவ்வகையில் பாவாணர் தம்முடைய வரலாற்று முடிவுகளைத் தெரிவிக்கும் தமிழர் வரலாறு என்னும் நூல் எத்தகைய போக்குடையது என்பதைத் தெளிவாகவே உணர்ந்து தெளிவு படுத்தியுள்ளார்.

> **தொடக்க காலம் தொட்டு இன்றுகாறும் தமிழர் மக்கள் வரலாற்றையே இந்நூல் கூறுவதால் கிளத்தியல் முறை யல்லாது வண்ணனை முறையிலேயே இருக்குமென்றும் நாகரிக காலத்திற்கு முந்தைய கற்காலச் செய்திகள் சில உத்திக்கும் இயற்கைக்கும் ஒத்த உய்த்துணர்வாகவே இருத்தல் கூடுமென்றும் அறிதல் வேண்டும்.** (தமிழர் வரலாறு தொ.1 ப22)

இக்கூற்றில் பாவாணர் ஆய்வின் உச்சநிலையில் நின்று அது உய்த்துணர்வாகவே இருக்குமென்று கூறியிருப்பது சிந்திக்கத் தக்கது. இதனை இன்றைய அறிவியல் கோட்பாடு ஆய்வியல் கோட்பாடு கருதுகோள் (Hypothesis) என்று வரையறுக்கிறது. ஒரு ஆய்வு நூலினுள் கருதுகோள் இன்றியமையாத ஒன்றாகும். மேலும் தன் விவரிப்பு முறையையும் பாவாணர் இதில் தெளிவு படுத்துகிறார்.

இந்தியவியல் அறிஞர்கள் (Indologists)

இந்தியவியல் அறிஞர்கள் என்றழைக்கப்படுவோர் காலனிய காலத்தும் பின் காலனிய காலத்தும் இந்தியாவில் தங்கி ஈடுபட்ட

ஐரோப்பிய அல்லது இந்தியாவைத் தவிர்த்த மற்ற நாட்டறிஞர்களைக் குறிப்பதாகும். பாவாணரின் முதன்மையான வரலாற்று ஆய்வு முடிவுகளாக முன் வைத்த குமரிக்கண்டம் எனப்படும் லெமூரியா கண்டம் உலக மாந்தரின் தோற்றுவாய் என்ற கருத்தாக்கத்தை அடைய அவருக்கு இந்தியவியல் அறிஞர்களுடைய ஆய்வுகளே முதன்மைத் தரவுகளாக அமைகின்றன.

இத்தகைய வரலாற்று முடிவுகளைப் பாவாணருக்கு வழங்குவதில் பெரும்செல்வாக்குச் செலுத்திய இந்தியவியல் வரலாற்று ஆசிரியர்களைக் காண்டல் இவ்வாய்வுப் போக்கின் பல்வேறு இழைகளுள் ஒன்றாகிறது.

1. வின்சென்று சிமிது (Vincent Smith)

இவரைப் பாவாணர் இந்திய வரலாற்றுத் தந்தை என்று குறிப்பிடுகிறார். இவரின் முதன்மையான வரலாற்று நூல் **இந்திய முந்திய வரலாறு (Early History of India)** என்பதாகும்.

2. பேரா. எக்கேல் (Haeckel)

இவர் துடவர், கோத்தர் என்ற இரண்டு இன மக்களையும் தமிழர்களின் மூதாதையர்களாகக் கொள்வார். நீலமலையைத் தமிழரின் தொடக்க காலப் பிறந்தகமாகக் கருதும் போக்கைப் பாவாணர் மறுத்துள்ளார்.

3. புருசு பூட்டு (Bruce Foote)

இவர் ஆதிச்ச நல்லூர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு, தமக்குக் கிடைத்த பொருட்களைக் கொண்டு ஆய்ந்து முடிபுகளை வெளியிட்டவர். இவர் மீது பாவாணர் முன்வைக்கும் விமரிசனம் **இவர் கூறுவது போல் ஆதிச்ச நல்லூர் அகழ்வாராய்ச்சி தமிழரின் தொன்மை அன்று. மலைவாழ் குலத்தாரெல்லாம் முந்தியில் மாந்தரல்லர்** என்பதாக அமைகிறது. (**தமிழர் வரலாறு** தொ.1,ப.19)

4. கால்டுவெல்

கால்டுவெல் திருநெல்வேலி மாவட்டத்தைக் குறித்த நூல் எழுதியுள்ள திராவிட ஆய்வாளர். இவருடைய **திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்** குறித்துப் பாவாணர் பலவிடத்தும் புகழ்ந்து பேசியும் எழுதியும் வந்துள்ளார்.

கால்டுவெல் தமிழைப் பற்றி எழுதியுள்ள கருத்துகளையும், முடிபுகளையும் தொகுத்துக் **கால்டுவெல் கண்ட மொழிநூன் முடிபுகள்** என்னும் தலைப்பில் பாவாணர் கொடுத்துள்ளார். இவை, திராவிடத்தாய் என்னும் நூலினுள் இடம் பெற்றுள்ளன. **(திராவிடத்தாய்,** ப.28)

கால்டுவெலின் ஆய்வின் மீதும் பாவாணர் சில விமரிசனங்களை முன்வைத்து உள்ளார். அதனைப் பாவாணர் மொழியினாலேயே காண்போம்.

> **கால்டுவெல் கண்காணியர் மேற்கூறியவாறு திராவிட மொழிகளைச் சிறப்பாகத் தமிழை ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டாரெனினும், தொல்காப்பியத்தையும் கழக நூல்களையும் கல்லாமையாலும், குமரிநாட்டு வரலாற்றை அறியாமையாலும் தமிழின் திராவிடத் தாய்மைகளைக் காணாததுடன், திராவிட நாகரித்தை ஆரிய நாகரிகமாகப் பிறழக் கொண்டு சில தனித்தமிழ்ச் சொற்களையும் வட சொற்களாகக் கூறிவிட்டார்.** (திராவிடத்தாய், ப.29)

இவ்வாறு கால்டுவெல்லின் மீது பாவாணரின் விமரிசனம் அமைந்த போதும் கால்டுவெல்லின் முதன்மையான பணியைப் போற்றவே செய்துள்ளார். ஆகவே, பாவாணர் இந்தியவியல் அறிஞர்களின் கருத்துகளைப் படித்தும் ஏற்ற இடங்களில் தமக்கான ஒன்றாக உள்வாங்கிக் காட்டியுள்ளார். தம்முடைய கொள்கை உடன்படாத பகுதிகளை மிக வன்மையாகவே சாடியுமுள்ளார். எனவேதான் பாவாணர் என்ற வரலாற்று ஆய்வு நேர்மை கொண்ட ஒரு மனிதரை நாம் இன்று சந்திக்க இயலுகிறது.

பாவாணரின் கொள்கை நெறிக்குப் புறம்பே இருக்கும் ஆய்வுகள் இந்திய, தமிழக ஆய்வுகளாக இருப்பினும் அவற்றைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

S.K. சட்டர்ஜி என்ற வங்கநாட்டு ஆய்வாளரைப் பாவாணர் கடுமையாக மறுத்து எழுதியுள்ளார். இவரின் ஆய்வு முடிவு தமிழர்கள் வங்க தேசத்தினின்று வந்தவர்கள் என்பதாகச் சொல்கிறது. இதனாலேயே இத்தகைய வரலாற்றை எழுதியுள்ள பேராசிரியரைப் பாவாணர் மறுத்து எழுதியுள்ளார். இதைப் போன்றே, சென்னைப்

பல்கலைக் கழக வடமொழித்துறைத் தலைவருமான V.இராகவனாரையும் மறுத்துப் பாவாணர் எழுதியுள்ளார். V.இராகவனாரின் நந்த மோரியர்காலம் (Age of Nanda, and Maruryas) என்னும் கட்டுரைத் தொகுப்பு 1952இல் வெளியானது. அதில் தமிழர்கள் என்ற இனத்தினர் ஆசியாவின் தென் பகுதியிலுள்ள **தெர்மிலை** என்ற இடத்தைச் சார்ந்தவர்கள் என்றும் சின்ன ஆசியாவின் (Asia Minor) பகுதியில் வாழந்து வந்த இலிசியா (Lycia) திரிமிலி (Trmmili) என்னும் இருவகுப்பின் இணைவனர் என்றும் கருதியுள்ளார். இவர்களைக் குறித்து ஆசிய மொழியில் **த்ரமிட், த்ரமிள** என்று குறிக்கப்பட்டிருப்பதையும் அவரின் மொழியும் இலக்கியமும் என்னும் கட்டுரை காட்டியது. இதனை மறுத்துப் பாவாணர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> **வங்க நாட்டுப் பிராமணரும் வடமொழி வெறியருமான S.K.சட்டர்சியும், தென்னாட்டுப் பிராமிணரும் சென்னைப் பல்கலைக் கழக வடமொழித்துறைத் தலைவருமான இராகவனாரும் ..... உளறிக் கொட்டியிருக்கின்றனர்.**
>
> (தமிழ் வரலாறு, ப.17)

இவ்வாறு தாம் மறுத்து எழுதியதை ஆய்வின் வழியே **வண்ணை மொழிநூலின் வழுவியல்** என்னும் நூலில் நிறுவியும் உள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

இவ்வுலகத்தின் பழம்பெரும் நிலப்பகுதியாக இருந்த ஒன்று தென் இந்தியப் பெருங்கடலுள் மூழ்கிய குமரிகண்டமேயாகும். இதனை வலியுறுத்தி எழுதிய யோவான் இங்கிலாந்து (John England) என்னும் ஆராய்ச்சியாளர் கூற்றை வழி மொழிந்தது தம் கொள்கைக்கு அரணாகவும் பாவாணர் சேர்த்துள்ளார்.

கலைச்சொல் (Technical Terms) கையாளுகை

ஒரு துறையில் ஆழங்காற்பட்ட புலமை உடையவர்கள் அத்துறை பற்றி ஆராயமுற்படும் போது பல்வேறு கலைச் சொற்களைக் கையாளுவர் என்பது ஆய்வு உலகத்தின் பொது முடிவு. அந்த வகையில் பாவாணரின் வரலாற்று, மானுடவியல், தொல்பொருளியல் சார்ந்த கலைச் சொல்லாக்கம், அதன் கையாளுகை ஆகியனவற்றைத் தொகுத்து இக்கட்டுரை உரையாடுகிறது.

பாவாணரின் விரிந்த வளமான வாசிப்புப் பயிற்சியை அவரின் ஒவ்வொரு கலைச்சொற் பயன்பாட்டிலும் ஓர் ஆய்வாளன் காண முடியும். அந்த வகையில் பாவாணர் திறன் வெளிப்படு புள்ளிகளை இங்கே ஆய்வின் போக்கின் ஊடே தொகுத்துக் கொள்ளலாம்.

பாவாணருக்கு ஏற்பட்ட ஆய்வுச்சிக்களில் ஒன்று பிறதுறை கலைச் சொற்களைக் கையாள வேண்டும்; அதே நேரத்தில் அவற்றை நல்ல தமிழில் மொழியாக்கமும் செய்தாக வேண்டும் என்ற மிகவும் சிக்கலான நிலைப்பாடு. இதனைப் பாவாணர் மிக எளிதாகவே கடந்து சென்றுள்ளார் என்பதே அவரின் புலமை உறுதி குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதாகிறது.

சான்றாகச் சில கலைச் சொல்லாக்கங்கள்

1. நிமிர்ந்த குரக்கு மாந்தன் (Pithecanthropos Erectus)
2. திணைப் படம் (Map)
3. அமைதிமாவாரி (Pacific Ocean)
4. தீவக்குறை (Penisula)
5. உன்னிப்பு வேலை (Guess Work)
6. மாந்தனூல் (Anthropology)
7. ஞால நூல் (Geography)
8. நிலநூல் (Geology)
9. உள நூல் (Psychology)
10. நீள் மண்டை (Dolochocephalic)
11. குறு மண்டை (Brachycephalic)
12. இடை மண்டை (Mesaticephatic)
13. குலவரைவியல் (Fethnography)
14. பொதுமணம் (Promisucuity)
15. சீனமாந்தன் (Sinanthropus Pekinensis)
16. பன்மனை மணம் (Polygamy)
17. இழைத்தல் மொழி (Articulate Speech)

18. கருத்தெழுத்து (Ideography)

19. படவெழுத்து (Pictography)

20. அசையெழுத்து (Syllabaries)

இங்குக் காட்டப்பெற்றுள்ள கலைச் சொல்லாக்கத்தின் வழியே தேவநேயப் பாவாணரின் மொழியாளுகையும் அக்குறிப்பிட்ட துறைசார்ந்த புலமையும் ஒருங்கே அறியலாகின்றன. பொதுவாகவே, கலைச் சொல்லாக்கத்திற்குள் ஒலிபெயர்ப்பு தவிப்பதையும் (Translitration) மொழியாக்கம் (Transcreation) மிகுந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர். பாவாணருக்குள் அவை செம்மையாகவே நடைபெற்றுள்ளன.

பாவாணரின் மானுடவியல் பார்வை

மானுடவியல், மாந்தனூல் என்னும் பெயர்கள் பல இடங்களில் பாவாணரால் பயன் படுத்தப்பட்டுள்ளன. மானிடவியல் கருத்துகளை ஏற்ற இடங்களில் அவர் கையாண்டுள்ள பாங்கு ஐம்பது வருடம் கழித்து இன்றைய சூழலிலும் மிகப் பொருத்தப்பாடு உடையதும் புதுமையானதுமாகத் திகழ்கிறது.

பாவாணரின் மானிடவியல் கருத்துகள் வெளிப்படும் இடங்களைத் தேர்வு செய்வதன்வழி பாவாணருக்குள் இயங்கிய பல்துறை வாசிப்புப்பற்றி உரையாட முடியும்.

மானுடவியல் சிந்தனைக் கூறுகள் கிரேக்கத் தத்துவ ஞானியாகிய அரிஸ்டாட்டிலிடம் இருந்தே தொடங்கினதாக மானுடவியல் சார்ந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. இருப்பினும் அறிவொளிக்காலம் என்று குறிப்பிடப் பெறும் (Period of Enlightenment) கி.பி.17ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரையில் உள்ள காலமே அறிவொளிக்காலம். இக்காலக்கட்டமே மானுடவியல் சிந்தனைகள் பெருமளவில் வளர்ச்சியடையத் துணைபுரிந்தது.

மானுடவியல் என்ற பெரும் அறிவுத்துறையின் ஒரு பகுதியாகிய பண்பாடு மானுடவியல் சார்ந்த ஆய்வுகளை 1800களில் உள்வாங்கியதாக ஏங்கல்சின் **குடும்பம் அரசு தனிச்சொத்து** என்னும் நூல் அமைந்தது. இதில் இவர் மார்கனின் கருத்துகளை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார்.

பண்பாட்டு மானுடவியலின் துணைக் கொண்டு மனித இனத்தின் உடல் அளவுகள் (Morpotrology) குறித்தான குறிப்புகளைப் பாவாணர் பல இடங்களிள் பேசியுள்ளார். குறிப்பாக மானுடவியல் காரணிகள் இன வரலாற்று வரைவிற்குத் தெளிவாகத் துணைபுரிவதில்லை என்பது பாவாணரின் முடிந்த முடிபான கருத்து.

> **நிலம், தட்பவெப்பநிலை, பழக்க வழக்கம், தொழில், உணவு முதலியவற்றால் மக்கள் உடலமைப்பும் நிறமும் வேறுபடுவதானாலும், ஒரேயினத்தில் மட்டுமின்றி ஒரே குடும்பத்திலும் நீள்மண்டை, குறுமண்டை, இடை மண்டை, என்னும் மூவகை மண்டையர் பிறப்பதனாலும் இங்ஙனமே ஏனை யுறுப்புகளும் நிறமும் இயற்கையாலும் செயற்கையாலும் வேறுபடுவதனாலும், மாந்தன் மெய்யாவியலும், குலவரைவியலும் ஒரு மக்களின் வரலாற்றிற்குப் பிறசான்றுகள் போல் அத்துணைத் தேற்றமாகப் பயன்படுவதில்லை.**
>
> (தமிழர் வரலாறு, ப.18)

இவ்வாறு பாவாணர் கருதினாலும் மானுடவியல் கருத்துகளைப் பல இடங்களில் உள்வாங்கி எழுதியுள்ளமை காணமுடிகிறது. பீக்கின் மாந்தன் என்னும் சீன மாந்தன், சொல்லப்படும் குமரி மாந்தனும் நெருப்பைப் பயன் படுத்தியுள்ளனர் என்று பாவாணர் பிறிதொரு இடத்தில் எழுதியுள்ளார். (தமிழர் வரலாறு, ப.26)

பாவாணரின் மானிடவியல் சார்ந்த வாசிப்பு அவரது ஆய்வுகளில் கூடுதலான உறுதியையும், கூடுதலான உண்மைத் தன்மையையும் சேர்த்துள்ளன எனலாம்.

ஏதேனும் - குமரியும்

தேவநேயப் பாவாணர்க்குக் கிறித்துவ வேதாகம அறிவும் வரலாற்றாய்வில் பயன்பட்டுள்ளது. தமிழில் வேதாகமம் என்று அழைக்கப்பெறும் பைபிள் ஓர் இனவரலாற்று நூல் என்று கூறலாம். குறிப்பாக யூத இனத்தைக் குறித்தும், இஸ்ரவேல் நாட்டினைக் குறித்துமான பதிவுகள் பலவற்றை உள்ளடக்கிய நூல் தமிழ் வேதாகமம். யூதர் வரலாற்றோடு திராவிடர் வரலாற்றைப் பலவிடங்களில் ஒப்பிட்டு எழுதியுள்ளதைக் காண இயலும். கிறிஸ்துவத்தைத் தம்முடைய

வாழ்முறையாகத் தழுவின பாவாணர் தாம் எடுத்துக் கொண்ட ஆய்வு நுவல் பொருள்களிலும் அதனைப் பொருத்தி எழுதியுள்ளார். இத்தகையதான ஆய்வின் மூலம் பாவாணரின் ஆய்வுப் பரப்பு விரிந்துள்ளதைக் காணலாம்.

குமரிநிலத்தைப் பற்றிக் கூறப்புகுந்த பாவாணர் ஏதேன் தோட்டம் பற்றிய ஒப்பீட்டைக் கொண்டு வருகின்றார்.

> **ஏதேன் (Eden) தோட்டம் என்பது பல்வகைக் கனிமரங்கள் நிறைந்த வள நாட்டையே குறிக்கும். ஏதேன் என்பது இன்பம் என்று பொருள் படும், எபிரேயச் சொல். பாலும் தேனும் ஓடும் கானான் தேசமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டாலும், மேலையாசியாவிற்கு அது சிறந்ததேயன்றி ஞாலத்திற் சிறந்த நாடாகது.** (தமிழர் வரலாறு, தொகு-1, ப.7)

இவ்வாறு ஏதேனைப் புகழ்ந்தும் கானானைக் குறித்த தம் கருத்தையும் பதிவு செய்துள்ள பாவாணர் கானானும், ஏதேன் தோட்டமும் இருந்ததாகச் சொல்லப்படும் மெசெபதோமியா கடலடியில் இருந்ததாகச் சொல்லப்படும் ஏதேன் குமரி நாட்டை விடவும் வளஞ் சிறந்ததாக இருக்க இயலாது என அவர் உரத்துக் கூறும் பகுதி பாவாணரின் இனஉணர்வை எடுத்துக் காட்டும் பகுதியாக விளங்குகிறது.

> **ஏதேன் தோட்டம் இருந்த இடம் நிலப்பகுதியாகவே இருந்ததென்று கொள்ளினும், அது குமரி நாட்டினும் வளஞ் சிறந்ததாகக் கொள்ள முடியாது. அதை வளப்படுத்திய நாலாறுகளுள் ஒன்றான ஐபிராத்து (Euphretes) பஃறுளி போல் பேரியாறன்று. அங்குள்ள மலைகளும் ஒன்றும் குமரிபோல் பன்மலையடுக்கமன்று. இடையிடைய வறண்ட வெம்மணற் பாலைகளும் பல உள.**
>
> (தமிழர் வரலாறு, தொகு-1, ப.9)

இவற்றுள் காணலாகும் பஃறுளி ஆறு பற்றிய கருத்தும் அது போன்றதான ஆற்றின் போக்கு ஏதேனில் இல்லாதிருப்பதும் தெளிவாகப் பாவாணரால் காட்டப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள பஃறுளியாறென்றும், அதன் கயவாயில் கடலரிப்பால் கரைநிலங் கரைந்து போனதையே

இளங்கோவடிகளும் பிறரும் தென்பெரு நிலத்தைக் கடல்கொண்டதாகக் கூறிவிட்டனர் என்றும் கடிந்தும் கொள்கிறார்.

பாவாணரால் விமர்சிக்கப் பெற்ற வரலாற்றாய்வாளர்கள்

பாவாணரின் வரலாற்றுப் பார்வை இனவியல் தொடர்பானது. அதாவது தமிழன் அல்லது திராவிடன் என்ற இனத்தின் மேன்மையை, தொன்மையை மட்டும் உரத்துக் கூறப்புகுவதாகும். இதனால் இக்கருத்திற்கு மாறுபட்டுச் சிந்தித்துள்ள அல்லது எழுதியுள்ள மற்றையவர்களைப் பாவாணர் திறம்பட விமர்சித்துள்ளார். அத்தகையவர்களுள் இந்திய வரலாறு தொடர்பான உரையாடற்களில் பங்கேற்றவர்களைக் குறித்து இனிக் காணலாம்.

பாவாணரின் விமர்சனங்களுக்கு உள்ளானவர்களாகத் தனிநாயகம், கமில் சுவலபில், ஐராவதம் மகாதேவன் ஆகியோரைக் காணமுடிகிறது.

> **உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு உள்ளதே. அதைப் பற்றி ஒன்று உங்கட்குத் தெரிய வேண்டும். இது தனி நாயகம் என்ற வையாபுரியின் வேலை; இவ்வளவும்... மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிடருடையதா ஆரியருடையதா என்று ஆராயும் பொறுப்பு யாரிடத்தில் ஒப்படைக்கப் பட்டது தெரியுமா? இந்த ஐராவதம் மகாதேவனிடத்தில் அதாவது பிராமி எழுத்திலிருந்து தமிழ் எழுத்து தோன்றியதென்று சொன்னாரே அவரிடத்தில்.**
> (பாவாணர் உரைகள், ப.67)

இவர்களைப் போன்றே நீலகண்ட சாஸ்திரியாரின் தென்னிந்திய வரலாறு (History of South India) என்னும் நூல் குறித்த தம்முடைய விமரிசனத்தையும் ஆழமாகப் பாவாணர் பதிவு செய்துள்ளார். An Advance Histrory of India என்ற நீலகண்ட சாத்திரியாரும், வி.என். சீனிவாசாச்சாரியாரும் சேர்ந்து எழுதிய மற்றொரு நூலின் மீதும் பாவாணரின் விமரிசனம் தொடர்ந்தது' சாஸ்திரியாரின் வரலாற்று நூலில் தமிழ் இனம் குறித்த கேள்விகளுக்கு அவர் பதில் எழுதியுள்ளார். பாவாணர் அதனைக் கீழ்க்காணுமாறு மறுத்தெழுதியுள்ளார்.

History of South India அந்த நூலில் தமிழர் ஆறு இனம் சேர்ந்த ஒரு கலவை இனம் என்று சொல்லியிருக்கிறார். நீக்ரோ இனம், ஆத்திரேலிய இனம், அர்மீனிய இனம், மங்கோலிய இனம், நடுக்கடற் பகுதியில் வாழ்ந்த ஒரு மக்களினம் முதலிய ஆறு கலவையினம் என்று சொல்லியிருக்கின்றார். (பாவாணர் உரைகள், ப.67)

தொகுப்புரை

பாவாணர் என்ற தமிழ் ஆளுமையிடம் குடி கொண்டிருந்த பரந்த வரலாற்றுப் பார்வையையும், அன்னாரின் ஆழங்காற் பட்ட வரலாற்றுப் புலமையையும், பிறர் கூறிய வரலாற்று நிகழ்வுகளைத் தம் பட்டறிவு கொண்டு சோதித்துப்பின் ஏற்கும் நிலையும் இவ்வியலின் வழி வெளிபடுத்தப்பட்டுள்ளது.

சிந்து சமவெளி நாகரிகம் தொடர்பான திராவிட இனவரலாற்றை இன்றைய நாளில் பல ஆய்வாளர்களும் முன்மொழிகின்றனர். இதனை 1960களிலே பாவாணர் வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக வரலாற்று வரைவுக்கான ஒரு போக்கோடு தமிழக வரலாற்றைக் குறிப்பாகத் தமிழக இன வரலாற்றை அடையாளப் படுத்தியுள்ள அரும் சிந்தனைத் தொடர்ச்சியை இன்று பலரும் பின் பற்றுகின்றனர். இத்தகு சிந்தனைகளுக்குப் பாவாணரே மூலவித்தாக அமைகிறார்.

உலகப் பழம் இனங்களாகிய யூதர்கள், சுமேரியர்கள், பாபிலோனியர்கள் ஆகியோரின் வரலாற்றோடு தமிழன – திராவிட இன வரலாற்றை ஒப்பு நோக்கி வரலாற்றாய்வை முன்னெடுத்துள்ளார்.

பாவாணரின் சிந்தனைகளில் பெரும் எதிர்ப்பிற்கு உள்ளாகிய குமரிக் கண்டம், தொல்காப்பியக்காலம் ஆகிய ஆய்வின் போக்கில் சிலவிடத்து தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. குமரிக்கண்டம், மாந்தன் பிறந்தகம் என்ற கருத்தைப் பாவாணர் பார்வையில் இந்நூல் விவரித்துள்ளது.

மொழியியல் வல்லுநர் - பாவாணர்

தேவநேயப் பாவாணர் தமிழ், தமிழர் என்று தம் வாழ்நாள் முழுமையும் சிந்தித்து வாழ்ந்தவர். இவருடைய தமிழ் உணர்வு, உணர்வுத்தளம் சார்ந்து மட்டுமே அமையாது, அறிவுசார்ந்த தொழிற்பாடுகளிலும் ஓங்கி ஒலித்தது. பல்வேறு மொழிகளை நன்கு கற்று அறிந்து புலமை கொண்ட பாவாணர் தமிழோடு சேர்த்துத் திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்துள்ள பாங்கு இன்றைய ஆய்வுப் போக்குகளிடையேயும் குறிப்பிடத்தக்க ஆய்வுச் செயல்பாடாக அமைந்துள்ளது.

பாவாணருக்குள் காணப் பெற்ற மொழியியல் சார்ந்த கூறுகளை வெவ்வேறு தளங்களில் பொருத்தி இக்கட்டுரை ஆராய முனைகிறது. அதே வேளையில், பாவாணரின் 1950களில் வெளியான இம்மொழியியல் சிந்தனைகளின் உலகலாவிய, தமிழ்புலச் சிந்தனைப் போக்கும் பின்புலமாகத் தொட்டுக் காட்டப் பெற்றுள்ளது.

பாவாணரின் மொழிப்புலமையைத் தனியொருவர் எடைபோடுவது இயலாத காரியம். அது ஒரு பல்கலைக் கழகம் அல்லது ஆராய்ச்சிக் குழு செய்யத்தக்க பணி, என்ற போதிலும் பாவாணரின் மொழியல் சிந்தனைப் போக்குகள், ஒப்பீடுகள் ஆகியனவற்றை ஒரு பருந்துப் பார்வையின் வழி (On brids eye view) இக்கட்டுரை உரையாட முனைந்துள்ளது எனலாம். இனி, பாவாணருக்கு முந்தைய மொழியியல் ஆய்வுகளையும், அவற்றின் தோற்றத்திற்கான உலகப் போக்கையும் ஒருவாறு வரையறுக்கலாம். இலக்கியம் என்னும் மானுடச் சிந்தனைத் தொகுதி ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு வடிவத்தை மேற்கொண்டு வந்துள்ளதை உலக இலக்கிய வரலாறு தெளிவுபடுத்துகின்றது. இலக்கியப் பிரதிகள் பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் வரையிலும் அரசவைகளில் மட்டும் தெரிந்த கேள்விப்பட்ட ஒன்றாக விளங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டின் அறிவியல் - தொழிற்நுட்பக் கருவிகள் அவை சார்ந்த சிந்தனைப் போக்குகள் இலக்கியக் கல்விக்குப் பெரும் நெருக்கடியாக அமைந்தன.

அறிவியல் என்பது ஒரு சிந்தனை முறைமை கருவிகளின் துணையோடு காரணகாரிய விதிகட்கு உட்பட்டு அளவை (Logic) முறைமையின் படிவரும் தீர்வுகளை நம்புவது. இத்தகைய சிந்தனை முறையை அதன் வளர்ச்சியை உலக வரலாற்றாய்வாளர்கள் தொகுத்து எழுதியுள்ளனர்.

தத்துவ சிந்தனையாளர் பெர்னாட் ரசல் (Bertrand Russell) மனித சிந்தனையின் அகலமும் எல்லைகளும் (Human Knowledge, It's Scope and Limits) என்னும் நூல் இவ்வகையினைச் சார்ந்ததாகும். இவ்வாறான அறிவியல் சிந்தனைகளின் தொகுப்பை இலக்கியம் சந்தித்தபோது அது எடுத்து கொண்ட அல்லது உள்வாங்கிக் கொண்ட வடிவங்களாக இலக்கியத் திறனாய்வு, மொழியியல் ஆகியவற்றைக் கூறலாம் என்பர். அவ்வகையில் உண்டான மொழியியல் உலக அளவில் பேசப்பட்டப் பேசப்படும் மொழியியல் - இலக்கியவியல் தொடர்பான துறையாகும்.

மொழியியல் என்னும் மொழிகள் குறித்த வரலாறு சார்ந்த கல்வியை ஐரோப்பிய உலகம் உருவாக்கியதாகும். இதன்மூலம் காலனிய நாடுகளின் பழங்குடிகளின் மொழிகளை ஆராய்வது ஒன்றே அவர்களின் தலையான பணியானது. ஒவ்வொரு மொழியும் அதனதன் புறத்தோற்றத்தில் (Morphology) வெவ்வேறு அமைவுகளுடன் காணப்படுகிறது. ஆனால் மொழியின் உள்கட்டமைவும், இயங்கு தளமும் ஒரு சில பொதுவிதிகளாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளன என்பது தான் மொழியியல்.

இம்மொழியின் பொது இயல்பை அறிவதன் மூலம் காலனிய நாடுகளைச் சார்ந்த மொழிகளை ஒருசேர அறிந்து கொள்ள இயலும் என்று ஐரோப்பிய அறிவு நம்பியது. இதன் வெளிப்பாடே மொழிநூல் (Philology) என்னும் மொழிகளை ஒப்பீட்டு ஆராய்ந்து கற்கும், படிப்பு முறை உருவாக்கம்.

கால்டுவெல் இதன் முன்னோடியாக அமைகிறார். இவருடைய **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்னும் நூல் இவ்வகையில் வெளியான - இந்தியவியல் சாரந்த முதனூல் எனலாம். கால்டுவெல் இந்திய-திராவிட மொழிகளில் காலூன்றி ஆய்ந்த போது மார்க்ஸ் முல்லர் இந்தோ ஆரிய மொழிகளின் ஆராய்ச்சிகளில் காலூன்றியிருந்தார்.

மொழிகளைப் பயிலும் இத்துறையின் வரவு தமிழிலக்கியப் புலத்தை அறிவு சார்ந்த - தருக்கத்திற்கு உட்பட்ட ஒன்றாக மாற்றியது எனலாம்.

எல்லீஸ் என்னும் இந்தியாவில் பணியாற்றிய ஆய்வியல் அறிஞர் 1810இல் திராவிட மொழிகள் யாவும் தனித்த அடையாளம் உடையன. இவை மற்றைய மொழிக் குடும்பத்தோடு அடையாளம் காண முடியாதவை எனக் காட்டினார். இதனைத் தொடர்ந்து ஸ்டெவென்ஸ்சன் 1852இல் தென்னிந்திய மொழிகள் தொடர்பான தமது கருத்தை வெளியிட்டார். இக்கருத்து எல்லீசின் கருத்துகளை அரண் செய்யும் விதத்தில் அமைந்திருந்தது. இவற்றின் பின்புலத்திலேயே தான் கால்டுவெல்லின் **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்னும் நூல் 1815, 1913, 1956 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு பதிப்புகளாக வெளியானது.

1906இல் இருந்து திராவிட மொழிகள் குறித்த ஆய்வுகள் தொடங்குகின்றன. குறிப்பாக முண்டாவும் திராவிட மொழிகளும் பற்றிய ஆய்வு நான்கு தொகுதிகளாக வெளியாயிற்று. இந்திய மொழிகளின் கணக்கெடுப்பும் இந்த ஆண்டிலேயே தொடங்கப் பெற்றது. (Lingustic Survery of India)

L.V. இராமசாமி ஐயர், கே.வி.சுப்பையா, முதலிய இந்தியாவைச் சார்ந்த ஆய்வாளர்களும் வின்சன் (Vinson) மிய்லே (Meile) பர்ரோ (Burrow) முதலிய இந்தியவியல் (Indologist) அறிஞர்களும் திராவிட மொழியியலை வளர்த்தெடுத்தவர்கள் என்று வரலாறு காட்டுகிறது. எல்.வி. இராமசாமி ஐயர் 1925-1950க்கும் இடையே நூற்றுக்கும் மேற்பட்ட திராவிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1946இல் பாரிசைச் சார்ந்த யூல்ஸ் பிளாக் (Jules Bloch) என்பவர் பிரென்சில் மிகச் சிறிய நூலொன்றை எழுதி வெளியிட்டார். **திராவிட மொழிகளின் அமைப்பு** என்னும் பெயர் கொண்டதாக அந்நூல் அமைந்திருக்கிறது. இதே காலக் கட்டத்தில் தான் எமினோவும் பர்ரோவும் எழுதத் தொடங்கினர் என்பது இவ்விடத்தில் குறிப்பிடக் கூடிய கருத்தாகும்.

எமினோ பர்ரோவைத் தொடர்ந்து கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ். சுப்பிரமணியம், எம்.எஸ்.ஆன்ரோனோவ், கமில் சுவலபில் ஆகியோர் திராவிட மொழியியலை வரலாற்று முறையில் அணுகி விமர்சனமாக வளர்த்தெடுத்தனர். இதன் விளைவாகவே, T. பர்ரோவின் திராவிட மொழிகளின் ஒலியன் என்னும் நூலொன்று ஆக்ஸ் போர்ட் பல்கலைக் கழகத்தின் வாயிலாக வெளியானது. இவரைத் தொடர்ந்து மொழியின் பொருண்மை, சொல்லாராய்ச்சி ஆகிய நூல்களை எமினோவும் எழுதினார்.

திராவிட மொழியியல் குறித்த முதன்மையான கட்டுரைகளாகவும், ஆய்வுகளாகவும் கமில்சுவலபிலால் பின்வருவன காட்டப் பெற்றுள்ளன. (**கோலமை பற்றி எமினோவும், பர்ஜி பற்றி பர்ரோவும் பட்டாச்சார்யும், பென்கோ பற்றி பர்ரோவும் பட்டாச்சார்ரியும், ஒல்லாரி (Ollari) பற்றி பட்டாச்சார்ரியும், கோண்டா அல்லது கூபி பற்றி கிருஷ்ணமூர்த்தியும், கோயா பற்றி டெய்லரும் (Taler) இருளா குறித்து கமில்சுவலபிலும், அலு குறும்பா பற்றி காப்பும் (Kapp) தெலுங்கு வினையடி பற்றி கிருஷ்ணமூர்த்தியும் ஆராய்ந்துள்ளார் .**

1950கள் தொடங்கி மொழியியல், மொழிநூல் சார்ந்த ஆய்வுகளின் போக்கை நின்று அவதானிக்க வேண்டியதாகிறது. இத்தகைய வருடங்களிலேயே பாவாணரின் மொழியியல் சார்ந்த கருத்துகளை உள்ளடக்கிய நூல்கள் வெளியாயின. பாவாணரின் கருத்து நிலையை உள்வாங்க வேண்டும் என்றால் அவரின் சமகாலக் கருத்தியல் போக்கைக் கூர்ந்து விளக்குதல் மிகத் தேவையான ஒன்றாகிறது. அந்த வகையில் 1960கள் தொடங்கிக் தொழிற்பட்ட மொழியியல் தொர்பான ஆய்வுகளை ஈண்டுக் காணலாம்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் மூலம் வெளியான திராவிட வேர்ச்சொல் அகராதி (1961), எமினோவின் இந்தியாவும் இலக்கண வரலாறும் (1965), ந.குமாரசாமி ராஜாவின் Nasal voiceless Plogieces in Dravidian (1969) என்ற நூலும் பி.எஸ்.சுப்பிரமணியனின் திராவிட வினை பொருண்மை (1971) என்னும் நூலும் குறிப்பிடத் தக்க பங்களிப்புகள்.

எஸ்.வி.சண்முகத்தின் திராவிடப் பெயர்ச்சொல் (1971), கமில்சுவலபிலின் திராவிட ஒலியன் ஒப்பீடு ஆகியனவும் குறிப்பிடக் கூடியன. தமிழக – இந்தியச் சூழலில் மொழியியல் பற்றி விவாதித்த நிறுவனம் சார்ந்த களங்களாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருவனந்துபுரத்தில் செயற்பட்ட கேரளப் பல்கலைக் கழகத்தின் **திராவிட மொழியியற் கழகம்** (Dravidian Linguistics Association) மைசூரிலிலுள்ள **இந்திய மொழிகளின் நடுவன் நிறுவனம்** (Central Institute of Indian Languges at Mysore) ஆகியனவற்றைக் கூறலாம்.

இத்தகைய மொழியியல் ஆய்வுகள் ஐரோப்பாவில் அடுத்த தளம் நோக்கி வடிவம் கொண்டு நகர்ந்தது போலத் தமிழக – இந்தியத் சூழலில் நடை பெறவில்லை. குறிப்பாகப் பல்கலைக் கழக மொழியியல் ...

மொழியியலைத் தாண்டி அதன் தத்துவார்த்த நிலைப்பாடாகவோ வடிவம் கொண்ட குறிகளின் அர்த்தச் செயல் பாடாகவோ (Semiotics) அல்லது அமைப்பியலாகவோ (Structuralism) உருப்பெறவில்லை.

ஆனால், இவை சாண்டர்ஸ் பியர்சிடமும், சசூரிடமும், ரோமன் ஜாக்கப்சனிபிடமும் நடைபெற்றன. இவ்வகையில் பாளையங் கோட்டையைச் சார்ந்த தூய சவேரியர் கல்லூரிப் பேராசிரியர்கள் வேறுபட்டு நின்றனர். அதிலும் தே. லூர்து, தமிழவன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். தமிழவனின் ஸ்டரக்சுரலிசம் என்னும் நூல் தமிழ்ப் புலத்தில் மொழியியலை முன்வைத்து அமைப்பியல் கோட்பாட்டைப் பேசிய முதனூல் எனலாம். கவிதையும் மொழிதல் கோட்பாடும், குறியியலும் தமிழும், படைப்பும் படைப்பாளியும் ஆகிய இந்நூல்கள் மொழியியலிருந்து அமைப்பியலைப் பற்றி எழுதப் பெற்ற படைப்புகள்.

பாவாணரின் திராவிட மொழிக் குடும்பம் - கருத்தும், மறுப்பும்

பாவாணரின் திராவிட மொழிக் குடும்பம் என்ற கருத்தியல் உலகச் சிந்தனைப் போக்கின் ஒரு சிறு விளைவு எனலாம். வடமொழியை இங்குவந்து தங்கி ஆய்ந்த அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் (William Jones) சமஸ்கிருதம் ஐரோப்பிய மொழிகளோடே தொடர்புடைய மொழியமைவுகளைக் கொண்டுள்ளதென விளக்கிக் காட்டினார். அவருக்குப் பின்னரே, 1816இல் பேரா.பாப் (Bopo) ராஸ்க் (Rask), கிரிம் (Grimm) போன்ற மொழியியல் அறிஞர்கள் இத்துறையில் பணியாற்றினர்.

இந்தோ ஐரோப்பிய மொழி, இந்தோ-இரானியன், அர்மீனியன், பால்தோ - ஸ்லாவிக், அல்பேனியன், ஹலனிக், இத்தாலி, கெல்டிக், ஜெர்மானி ஆகிய எட்டுப் பிரிவுகளாகப் பிரிந்து வழங்கியது. இவற்றை இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்றாக்கினர். இம்மொழிகளில் ஒலித் தொடர்பு, ஒலி மாற்றம் ஆகியவற்றைப் பேரகிம் விளக்கினார்.

இதன் தொடர்ச்சியான ஆய்வுகளாகவே தென்னிந்தியாவில் பேசப்பட்டுவரும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்ட 25 மொழிகளைத் திராவிட மொழிகள் என்னும் ஆய்வுப் போக்கும், ஆய்வு முடிவுகளும் வெளியாயின. இத்தகைய ஆய்வுகள் 1816இல் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த பேரா.பிரான்சிஸ் எல்லீசில் இருந்தே தொடங்குகின்றன. பின்னர் இதனைக் கேம்பல் (A.D Campell) தெலுங்கு மொழி இலக்கணம் (A grammer of the Telugu Language) என்னும்

நூலுக்கு எழுதிய முன்னுரையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒரு தனிக் குடும்பத்தைச் சார்ந்தன என்று கூறி, அவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பினைக் காட்டியுள்ளார். 1850இல் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வெளியானது.

கால்டுவெல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐந்து மொழிகளையும் பண்பட்ட மொழிகளாகவும், தோடா, கோடா, கோண்டு, கூ என்ற நான்கையும் பண்படாத மொழிகளாகவும் கருதினார். இதேபோல் பிராகுயி, மால்டோ போன்ற மொழிகளைச் சுட்டிச் சென்றார். ஆனால் இவை பற்றிச் சிறப்பான ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. பின்னர், கால்டுவெல்லின் 1875 ஆம் ஆண்டு வெளியான பதிப்பில் திருந்திய மொழிகளாகத் தாம் குறிப்பிட்டவற்றோடு ராஜ் மகால், ஓராவோன் ஆகிய இரண்டையும் இணைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல்லின் ஆய்வுகளோடு பாவாணர் பலவிடத்தும் ஒத்திசைவாகப் பேசியும் எழுதியும் வந்துள்ளார். **கால்டுவெல் தமிழைச் சிறப்பித்துக் கூறுவன** என்னும் தலைப்பில் (திராவிடத்தாய், ப.24) கால்டுவெல்லின் நீண்ட மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். **கால்டுவெல் கண்ட மொழி நூல் முடிவுகள்** என்னும் பகுதியையும் பாவாணர் தொகுத்துக் கால்டுவெல்லின் முடிவுகளைப் பேசியுள்ளார்.

கால்டுவெல் திராவிட மொழிகளின் கருத்துருவாக்கத்தின் முன்னோடி என்ற போதிலும் கால்டுவெல்லின் முடிவுகள் மீது பாவாணரின் விமரிசனமும் குறிக்கத் தக்கதாகிறது.

> **கால்டுவெல் கண்காணியார் மேற்கூறிய திராவிட மொழிகளைச் சிறப்பாகத் தமிழை, ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டாரேனும், தொல்காப்பியத்தையும், கழக நூல்களையும் கல்லாமையாலும் குமரி நாட்டு வரலாற்றை அறியாமையாலும், தமிழின் திராவிடத் தாய்மையைக் காணாததுடன், திராவிட நாகரிகத்தை ஆரிய நாகரிகமாகப் பிறழ்க் கொண்டு சில தனித் தமிழ்ச் சொற்களையும் வட சொற்களாகக் கூறிவிட்டனர்.**
> (திராவிடத்தாய், ப.29)

இவ்வகையான விமரிசனத்தைக் கால்டுவெல் ஆய்வுகள் மீது பாவாணர் வைத்த போதினும் அவரைத் திராவிடக் கருத்தியலின் முன்னோடியாக வைத்துள்ளதை அறிய முடிகிறது. மொழியியல் ஆய்வுகள்

கால்டுவெல்லுக்குப் பிறகே பெரும் நிலையை எய்தியன. 1866இல் வியன்னாலில் கூடிய மொழியாராய்ச்சி மாநாட்டில் ராபர்ட் N. கஸ்ட் (Robert N. Cust) என்பவரின் தலைமையில் ஒரு மொழியாராய்ச்சிக் குழுவினை இந்தியாவிற்கு அனுப்ப பெற்றது. இப்பணி 1894ஆம் ஆண்டிற்குப் பின்னரே தொடங்கியது. இதன் மூலம் திராவிட மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்று பிரித்து ஆராயும் போக்கு உருவானது.

தேவநேயப் பாவாணர் 1949 தொடங்கி, சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், உயர்தரக் கட்டுரை இலக்கணம் (1950), முதற்தாய் அல்லது தமிழாக்க விளக்கம் (1953) ஆகிய நூல்களை எழுதிவந்தார். இந்நூல்களின் முதன்மையான போக்கு மொழிநூல் சார்ந்த ஒன்று. இவை குறித்துப் பாவாணர் பின் வருமாறு கருதியுள்ளார்.

> **நூற்றுக்குத் தொண்ணூறு தற்குறிகளும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான மூடக் களஞ்சியங்களும் பகுத்தறிவில்லாத உருவேற்றிகளும் குடிகொண்ட இந்நாட்டில் மொழிநூலைப் பற்றித் தவறான கருத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.**
> (திராவிடத்தாய், ப.XVii)

இவையே மொழிநூல் துறையில் பாவாணர் தொடர்ந்து இயங்கியதற்கான காரணம். மொழிநூல் துறையில் பாவாணரின் தனித்த அடையாளங்களாகச் சில வற்றைத் தொகுத்துக் கீழே தரலாம்.

> **(அ) பெரும்பான்மையான சொற்கள் சுட்டினின்றே பிறந்தன. ஆகாரச் சுட்டு, ஈகாரச் சுட்டு, ஊகாரச் சுட்டு. இவற்றைக் காரணமாக வைத்தே ஊகாரச் சுட்டடி, ஆகாரச் சுட்டடி, ஈகாரச் சுட்டடி என்று வேர்ச்சொற் கட்டுரைகளில் தலைப்புகளை அமைத்துள்ளார்.**

> **(ஆ) குறில் எழுத்துகளே நெடிலாகப் பின்னாள்களில் பரிணமித்தன என்பது பலரின் கருத்து. ஆனால், பாவாணர் குறில் எழுத்துகளில் இருந்தே நெடில் எழுத்துகள் உருப்பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.** (திராவிடத்தாய்)

(இ) தமிழே பிற திராவிட மொழிகளாகத் திரிந்துள்ளது.

இவையனைத்தையும் பிற மொழியியல் ஆய்வு முடிபுகளிலிருந்து பாவாணர் தனித்து நிற்கும் இடங்களாகக் குறிக்கலாம்.

திராவிட மொழியும் தமிழும்

திராவிட மொழிகளும், தமிழும் இன்றைய நடை முறையில் வெவ்வேறாக இருந்து பயன்படுவதைப் பலர் அறிவர். இதற்கான காரணம் வரலாற்று அறிவோடு விளங்கிக் கொள்ள வேண்டிய ஒன்றாகிறது. இன்றைய தமிழிலிருந்து திராவிட மொழிகள் வேறுபட்டுத் தோன்றுவதற்கான காரணங்களாகப் பாவாணர் பன்னிரண்டு காரணங்களைக் காட்டியுள்ளார். அவை இங்குக் காட்டப் பெறுகின்றன.

1. தமிழ் அல்லது மக்கட் பெருக்கம்
2. எழுத்தொலித் திரிபு
3. சொல் திரிபு
4. பொருள் திரிபு
5. இயற்கைத் தெரிப்பு
6. வழக்கற்ற சொல் வழங்கல்
7. குடியேற்றப் பாதுகாப்பு (Colonial Preservation)
8. புத்தாக்கச் சொல்
9. தாயொடு (தமிழொடு) தொடர்பின்மை
10. வடசொற் கலப்பு
11. வடமொழி எழுத்தையும் இலக்கணத்தையும் மேற்கொள்ளல்
12. தமிழின் பண்படுத்தம் (Cultivation)

திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள மொழித் தொடர்பான உறவுகளை முன்வைத்துத் திராவிடத்தாய் என்னும் நூலில் மூன்று கட்டுரைகளைப் பாவாணர் எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் பாவாணரின் ஒப்பியல் மொழித் திறத்தை நன்கு விளக்குவனவாக அமைந்துள்ளன.

மலையாளமும் தமிழும்

மலையாள மொழியின் தமிழ் உறவுகளை அடையாளம் காண்பதற்கு முன்பாகச் சேர நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்குமான வரலாற்றுப் பதிவுகளைப் பாவாணர் பரவலாகப் பேசுகிறார். இங்கு வாழும் மக்கள் குறித்த கருத்தாகப் பின் வருவனவற்றைக் கூறலாம்.

> **மலையாள நாட்டில் பார்ப்பன ரொழிந்த மற்ற குலத்தாரெல்லாம் தமிழர் அல்லது திராவிடரே. குயவர், பணிக்கர், பாணர், ஆயர், ஈழவர், கடவுடர், முதலிய பல குலத்தினர் தமிழ் நாட்டிலும் உள்ளனர். இவர் குடிப்பெய ரெல்லாம் தனித் தமிழே.**
> (திராவிடத்தாய், ப.32)

மலையாளம் திரிந்ததற்கான காரணங்களாக ஆறினைக் குறிப்பிட்ட பாவாணர் மலையாளம் மூலத் திராவிட மொழியிலிருந்து திரிந்துள்ள இடங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். (**திராவிடத்தாய்**, ப.37) இவற்றுள் சிலவற்றை இங்கே காட்டல் தகும்.

(அ) முற்றுவினைகள் பால்காட்டும் ஈறிழத்தல்.

(ஆ) மெலித்தல் திரிவு சான்று : (எழுத்து-எழுந்து)

(இ) நிகழ்கால வினை முற்றின் கின்றது என்றும் இடைநிலை உன்னு எனத் திரிந்தது.

(ஈ) றகர ஏகார வேறுபாடின்மை உறவு – உரவு

(உ) ஆய் என்னும் வினையெச்ச வீறு ஆயிட்டு என வழங்கல். சிவப்பாய் – சிவப்பிட்டு

மொழியியல் தொடர்பான திரிபுகள் மட்டுமில்லாது ஒவ்வொரு சொற்களும் தமிழிலும் மலையாளத்திலும் ஒலி முறைசார்ந்தும், பொருள் சார்ந்தும் கொண்டுள்ள தொடர்புகளையும் பாவாணர் காட்டுகிறார். சான்றாக,

ஈச்ச (ஈ)

கழுக (கழுகு)

காக்க (காக்கை)

போன்ற சொற்களைக் கூறலாம்.

கன்னடமும் தமிழும்

மலையாள மொழிக்கு அடுத்த நிலையில் தமிழோடு நெருங்கிய சொல், தொடரமைப்புக் கொண்ட மொழி கன்னடமாகும். இதன் சொல் கரு நாடகம் என்னும் முதற்பதத்தினின்று உருப்பெற்றதென்பது பாவாணர் கருதுகோளாகும். (**திராவிடத்தாய்**, ப.55) கருநாடகம் என்பதற்குக் கரிய நாடு என்று பொருள் என்பதைக் கால்டுவெல்லும் எழுதியிருப்பதையும், கன்னட நாட்டில் பெரும் பகுதி கரிசல் நாடாக இருப்பதையும் பாவாணர் அரணாகக் காட்டுகிறார்.

கன்னட மொழியின் வரலாற்றையும் நாட்டு வரலாற்றையும் காட்டும் பாவாணர் கன்னடம் திராவிட மொழியிலிருந்து அதிலும் தமிழிலிருந்து வேறுபட்டுத் தோன்றுவதற்கான காரணமாக ஐந்து கருத்துகளைக் குறிப்பிடுகிறார். கன்னடம் திரிந்து காணப்படும் இடங்களாக 18 பகுதிகள் பாவாணரால் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்பெறுகின்றன.

(1) ஒலித்திரிபு – பள்ளி – ஹள்ளி; பாடு – ஹாடு

(2) உயிரீற்றுப் பேறு – எதிர் – எதிரு; இருந்தேன் – இருத்தென

(3) புணர்ச்சியின்மை – நினக்கு – நினகே

(4) ற, ழ அருகினமை

(5) பெயரீற்றுப் பால் விகுதிக் கேடு – குருட (குருடன்), (மக–மகன்)

இவற்றைப் போன்ற மூவிடப்பெயர், வினாப் பெயர், முறைப் பெயர், திசைச் சொற்கள், மக்கட் பெயர் ஆகிய இவையாவற்றுள்ளும் தமிழுக்கும் கன்னட மொழிக்கும் இடையேயான பொதுமைகள் தொகுத்துக் காட்டப் பெற்றுள்ளன. வினையடிகள், முக்கிய வினைகள், இடைச்சொல். இவற்றிடையே காணலாகும் ஒற்றுமைகளும் பேசப்படுகின்றன.

தெலுங்கும் தமிழும்

தெலுங்கிற்கு வடுகு, ஆந்திரம் என்னும் பெயர்கள் உள. வடுகு என்பது தமிழராலும், ஆந்திரம் என்பது ஆயராலும் இடப்பெற்ற பெயர்கள் என்பது பாவாணரின் கருத்து. (**திராவிடத்தாய்**, ப.81)

தெலுங்கர்களின் வரலாறும், மொழியமைவும் பாவாணரால் காட்டப் பெற்றுள்ளன. தெலுங்குச் சொல் வரிசைகள் என்னும் தலைப்பில் மூவிடப்

பெயர்கள். வினாப் பெயர்கள், முறைப் பெயர்கள் இவைபோன்று இருபத்தொரு தலைப்புகளில் அமைந்துள்ள பெயர்களின் தமிழ் ஒப்புமைகள் பாவாணரால் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சில வினாப் பெயர்கள்:

எவன் – எவடு

எவர் – எவரு

எவை – ஏவி

ஆ – ஆவு; எருது – எத்து; எருமை – எனகு, பாம்பு – பாமு; பேன் – பேனு; பல்லி – பல்லி; புழு – புருகு.

தெலுங்கிற்கும் தமிழ் மொழியியல்பிற்குமான தொடர்புகளை விரிவாக ஆராய்ந்து பாவாணர் எழுதியுள்ளார். தெலுங்குச் சொற்கள் எவ்வளவாகத் திரிந்த போதிலும் பல வாக்கியங்கள் தமிழ்ச் சொற்களாலேயே அமைந்துள்ளன.

தமிழ் : அவருக்கு இருவர் பிள்ளைகள்

தெலுங்கு : வாரிக்கு இத்தரு பில்லகாயலு.

(திராவிடத்தாய், ப.102)

இவை போன்ற காட்டுகள் தமிழும் தெலுங்கும் ஒரே மூலமொழியமைப்பைப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றன.

துளுவும் தமிழும்

திராவிட மொழிகளுள் துளுவும் ஒன்று. கன்னடத்திலிருந்து சிறிதளவே வேறுபட்டும், மலையாளத்திலிருந்து பெருமளவும் வேறுபட்டு நிற்கும் மொழி துளு மொழி. துளு மொழி பேசப்படும் பகுதிகளாக, மேல்கரை நாட்டில் கன்னடத்திற்குத் தெற்கில், சந்திரகிரி, கல்யாணபுரி, ஆனுகட்டு இடையில் துளுபேசப்படுவதாகப் பாவாணர் குறிக்கிறார்.

துளுவில் காணலாகும் பெயர்ச்சொல், மூவிடப் பெயர்கள். வினாப் பெயர். மக்கட்பெயர், முறைப்பெயர் ஆகியன தமிழோடு பொருந்த முறக் காணப்பெறும் தன்மை விவரித்துக் கூறப்பட்டுள்ளது. வேற்றுமையேற்ற பெயர்களாக,

யானு – அம்ம

யென்று – அம்மனு

யெமை - அம்மட

யெங்கு - அம்மகு

என்பவை காணப்படுகின்றன என்பது பாவாணரின் மொழி ஒப்புமையோடு இலக்கணப் புலமையும் தெற்றென வெளியாகும் பகுதியாகும்.

துளுமொழி தமிழில் இருந்து திரியக் காரணங்கள் பல உண்டு என்பார் பாவாணர். அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

1. தட்ப வெப்பநிலை
2. இலக்கண நூலின்மை
3. தமிழரோடு தொடர்பின்மை
4. வடசொற்கலப்பு
5. ஒலிமுறைச் சோம்பல்

துளு மொழியின் திரிந்தவகைகளும், இடைச்சொற்களும், வினைச்சொற்களும், தொழிற்பெயர்களும் பாவாணரால் துல்லிதமாக ஒப்பிடப்பெற்று ஆராயப்பெற்றுள்ளன. குறிப்பாக, தொழிற்பெயரின் இயல்போடு தமிழையும் துளுவையும் ஒப்பிடும் இடம் கருதத் தக்க ஒன்றாகவும் விளங்குகிறது எனலாம்.

1. முதனிலைத் தொழிற்பெயர்

   எ.கா.: சுருள்

2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

   எ.கா.: கேடு

3. முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர்

   எ.கா.: ஆட்ட (ஆட்டம்) ஓட்ட (ஒட்டம்)

4. விகுதிபெற்ற தொழிற்பெயர்

   கொலை (கொலை)

இவற்றைக் காட்டும் பாவாணர் தமிழில் உள்ள சொற்களை அளவு கோலாகக் கொண்டே துளுமொழியை அணுகுகிறார் என்பதை உணர முடிகிறது. பாவாணர் மொழிநூல் ஆய்வுகளை முன்னெடுத்த காலக்கட்டம் ஐம்பதுகளின் இறுதி பின் காலனிய ஆய்வுகள் (Post Colonical Studies)

உருவாக்கித் தந்த அறிவுக் கூர்மையுடன் பாவாணரின் தனித்த தமிழ் அடையாளச் சிந்தனையும் ஒருங்கு சேர இத்தகைய மொழியியல் பார்வைகளை முன்னெடுத்துள்ளார். இருப்பினும் பாவாணரின் சமகால மொழியியல்புலத் தமிழறிஞர்களோடு பாவாணர் முரண்படும் இடங்கள் பல உண்டு. தமிழ் மொழியியல் ஆய்வுப் பரப்பில் இன்று அவை தொகுத்து ஆராயப் பெற வேண்டியதாக மாறியுள்ளன.

மொழியியலார்களின் வருகைக்கும் முன்னரே இலக்கியத்தைப் புறப்பொருளாகத் (Object) தள்ளிவைத்து ஆராயும் ஆய்வு முறைகள் உருப்பெற்றன எனலாம். அவ்வகையில் திராவிட மொழிகளின் அமைவு முறைகளை ஆராய்ந்த ஆய்வாளர்கள் இவையனைத்தும் பொதுவான ஒரே மொழியில் இருந்து பின்னர்க் கிளைத்துச் சென்றிருக்க வேண்டும் என்பர்.

அப்படியான மூல மொழியினைத் தொல்திராவிட மொழி என்று குறிப்பிடுகின்றனர். இவ்வகையான பார்வையை வி.ஐ.சுப்பிரமணியம் தொடங்கித் தற்கால மொழியியல் பேராசிரியர்களான சு.சக்திவேல் வரையிலும் காண இயலும். இவ்வாறான மொழியியல் கருத்துப்போக்கிற்கு இடையே பாவாணர் தொல்திராவிட மொழியே தமிழ் மொழிதான் என்று வாதிடும் போக்கை அவரின் கட்டுரைகளும், நூல் தொதிகளும் முன்வைக்கின்றன.

பாவாணரின் மொழியியற் ஒப்பீடுகள் கொண்ட தொகுதிகளாக வேர்ச்சொற் கட்டுரைகள் மூன்றும், திராவிடத்தாய் என்ற நூலும் முதன்மையாக அமைகின்றன. **வண்ணை மொழியியலின் வழுவியல்** என்ற நூல் மொழியியல் குறித்த விமரிசன நூலாக விளங்குகிறது. மொழியியலில் தெ.பொ.மீ.யுடன் பாவாணர் முரண்படும் இடங்கள் பலவாக உள்ளன.

பாவாணரின் வேர்ச்சொல்லாய்வுகள்

மொழியியலின் ஒரு முதன்மை சான்ற பகுதியாக அமைவது வேர்ச்சொல்லாய்வுகள். இவை ஒரு சொல்லின் பிறப்பியலைத் தீர்மானிக்கும் சமூகப் பண்பாட்டு நிகழ்வுகளோடு தொடர்புடையவை. குறிப்பாக ஒரு மக்கள் கூட்டம் பயன்படுத்திய சொற்கள் அவற்றின் சமூக உருவாக்கம் பற்றிய கோட்பாடுகளை உட்கொண்டவை எனலாம்.

தமிழர்கள் கடல்சூழ்ந்த பகுதியோடு நெருங்கிய தொடர்பு உடையவர்களாகத் திகழ்ந்தனர். இதனால் பல்வேறு கடல்சார் பொருள்கள், கடலைக் குறிக்கத் தக்க வேறு சொற்கள் தமிழில் நிறையவே சான்றாக.

ஆழி

முந்நீர்

பரவை

கடல்

இவை தமிழரின் கடல் தொடர்பினை விளக்குவன. ஆனால் பனியைக் குறிக்கக் கூடிய சொற்களைத் தமிழ் மொழியில் தேடினால் உண்டு, அல்லது மூன்று சொற்களுக்கு மேல் காண்பது அரிது. பனிநில வாழ்வு இவர்கள் அறியாத ஒன்று எனலாம். ஆனால் **எஸ்கிமோக்கள்** என்னும் வடதுருவப் பனிமனிதர்களின் மொழியில் இருபதிற்கும் மேற்பட்ட வார்த்தைகள் பனியைக் குறிப்பதற்குப் பயன்படுகின்றன என்ற உண்மை கவனிக்கத் தக்கதாகும். வேர்ச் சொல் ஆய்வு என்பது இத்தகையதான சொல்லாய்வுகட்கு இட்டுச்செல்லத் தக்கதாகும்.

பாவாணரின் கட்டுரைத் தொகுதிகளில் முதற்றாய் மொழி, இரண்டு தொகுதிகளும், வேர்ச்சொல் கட்டுரைகள் தொகுதி மூன்றும் வேர்ச்சொல்லாய்வை முன்வைக்கும் கட்டுரைகள் எனலாம். இத்தகைய கட்டுரைகள் மூலம் நாம் அறியவருவனவற்றைக் கீழ்காணுமாறு தொகுக்கலாம்.

1. பாவாணரின் விரிந்த இலக்கிய, இலக்கண வாசிப்புப் பயிற்சி
2. பாவாணரின் பிற திராவிட மொழியியல் ஒப்பியல் அறிவு
3. பாவாணரின் சொற்பிரிப்பு முறையும் அதன் பொருட்கோடலும்

இவை வெளிப்படும் இடங்கள் நூலினுள் பலவாக அமையினும் ஓரிரண்டு இடங்களைக் காட்டலாம்

நீக்கல்

வேண்டாமென்று தள்ளப்பட்ட பொருள் நீக்கப்பட்டதாகவும், தள்ளுதற் கருத்து நீக்கற்கருத்தைத் தழுவியதாகும். உத்துதல் என்பதன் பொருள் தள்ளுதல், ஒத்திவைத்தல் என்பதாக அமைகின்றது. ஒதுங்கு – ஒதுக்கு – ஒதுக்கம்.

இத்தகு சொற்களைச் சார்ந்து அமைபவை தூர்த்தல் என்னும் சொல்லும், துத்தல் என்னும் சொல்லுமாகும், என்பார் பாவாணர் (முதற்றாய், ப.58)

அணுகல்

முன்னோக்கிச் செல்லும் உயிரிகள் தாம் அடையக் கருதிய இடத்தை முதலாவது அணுகும். கருத்திலாது நீண்டு செல்லும் ஒரு மரக்கிளையும் கூட அண்மையிலுள்ள ஒருபொருளை இயற்கையாக அணுக்கும்.

நெருங்கல் என்பது தொட்டு நெருங்கலும், தொடாது நெருங்கலும் என இருதிறத்ததாதல் வேண்டும்.

அஸ - அள்ளுதல் - நெருங்குதல்

அண் - அண்டை - அணுக்கம்

கிட்டு - கிட்டம் - அண்மை

செறிதல்

இருபொருள் ஒன்றையொன்று அணுகுதலும் நெருங்குதலும், பலபொருள் ஒன்றையொன்று செறிதலும் ஆகும். நெருங்குதலிலும் செறிவு மிக அணுக்கம்.

அள் – செறிவு

உறு – உற, உறப்பு – செறிவு

செறுத்த செய்யுள் (புறம், 53)

செறு – செறி – செறிவு

துன்னுதல் – செறிதல்

இவைபோன்று பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வுகள் எண்ணற்றனவாக விரிந்து செல்வன. ஆனால் இவற்றிற்குள் ஒரு தருக்க நெறி உள்ளதை மறுப்பதற்கில்லை.

பாவாணரின் வேர்சொற்கட்டுரைகள் தமிழ்புலத்திற்குக் கொண்டுவந்து அளித்துள்ள பயன்பாடுகள் மிகப் பலவாகும் அவற்றைத் தொகுத்து பின்வருமாறு எழுதலாம்.

1. தமிழ்ச்சொற்கள் – தமிழ்வினையடிகளை, சொல் மூலங்களை ஆக்கித் தந்தன.

2. வடமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அடையாளம் காட்டின.

சான்று:- திண்டிவனம் (புளியங்காடு)

விருத்தாசலம் (முதுபெருமலை)

3. பிறமொழி கலப்பின்றி பேசவும் எழுதவும் துணை புரிந்தன.

4. தமிழ் இலக்கணப் பணிக்குப் பின்னர் மொழியியல் சார்ந்த ஆய்வுகள் தளத்தில் வேர்ச்சொல் ஆய்வுகளைத் தொடங்கி வைத்தன.

5. மொழியியலில் 1950களின் இறுதியில் வெளியான நவீன மேற்குல கருத்தாக்கங்களைத் தம் முடை ஆய்வு நெறியில் இணைத்துக் கொண்டு செயற்பட்டமை.

6. பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வுகளைத் தொடர்ந்து இவ்வாய்வுகள் அனைத்தையும் தமிழ் வேர்ச்சொல் அகராதியாக மாற்ற முனையலாம். அந்த அளவிற்கு வேர்ச்சொல் கட்டுரைகள் மிகுதியாக உள்ளன.

தொகுப்புரை

பாவாணர் மொழியியலின் தொடக்க காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்தவர். இவருடைய காலச் சிந்தனைகளைத் தம்முடைய நூலில் தமிழ் – தமிழினம் சார்ந்து பெயர்த்து எழுதியுள்ளார். திராவிட அலை பரவிய ஐம்பதுகள், அறுபதுகளில் அறிவியல் வழிப்பட்டதான மொழிமீதுள்ள புலமையைத் திராவிடக் கருத்தியலுக்குக் கொணர்ந்து வலுசேர்த்தவராகப் பாவாணரைக் கருதலாம்.

பின் காலனிய ஆய்வாளர்களாகிய கால்டுவெல், எல்லீஸ் போன்றோரின் மொழியியல் சார்ந்த ஆய்வுகளை மதித்து அவற்றை மேற்கோள்களாகப் பயன்படுத்திய பாவாணர் அவர்களின் ஆய்வுக் குறைபாட்டையும் நேர்மையாகப் பதிவு செய்துள்ளார்.

பாவாணரின் வேர்ச்சொற் கட்டுரைகள் ஓர் அகராதி தொகுப்பிற்கான முன் வரைவு எனலாம். அந்த அளவிற்கு வேர்ச்சொற் கட்டுரைகளைப் பாவாணர் படைத்துள்ளார்.

பாவாணரின் பல்துறை ஆளுமைகளில் மொழியியல், வேர்ச்சொல்லாய்வுகள் =முதன்மை சார்ந்த இடத்தில் இருப்பவை எனலாம்.

திறனாய்வாளர் - தேவநேயப் பாவாணர்

திறனாய்வு என்பது இலக்கியம் பற்றிய நவீனச் சிந்தனைப் போக்காகும். நவீன அறிவியலின் முதன்மைக் கூறுகளாக விளங்குவனவாகத் தேர்வு செய்தல், தொகுத்தல், பகுத்தல், ஒப்பிடுதல், மதிப்பிடுதல், தரப்படுத்துதல் ஆகியவற்றைக் கூறுவர். இவற்றை உள்வாங்கிய தகைமையுடையதாகத் திறனாய்வும் அமைந்தது.

நவீன அறிவியலின் பின்புலத்தினால் எந்தப் பொருளையும் அறிவின் அதிகாரத்திற்கும் கொண்டு வர இயலும் என நிறுவினர். அனைத்துப் பொருள்களையும் புறநிலையாக (Object) வைத்து மதிப்பீடு செய்ய மேற்குலகம் அறிந்து கொண்டது. இலக்கியத் துறையிலும் இத்தகைய முயற்சியாகவே இலக்கியத் திறனாய்வு என்னும் அறிவுப்புலம் தோற்றம் பெற்றது.

தமிழ் இலக்கியத் திறனாய்வு தமிழ்நூல் பதிப்பு வரலாற்றிலிருந்தே தொடங்குகின்றது. இத்துறையில் தமிழ் உரையாசிரியர்கள் முதன்மையான காரணிகளாக விளங்குகின்றனர். **வீர சோழியம்** (1881) தொடங்கி, **தொல்காப்பியச் சொல்லதிகாரம்** (1892) வரையில் சி.வை.தா.வின் பதிப்புகளும் பதிப்புரைகளும் காணக்கிடக்கின்றன. சி.வை.தா. மூலபாடத் திறனாய்வாளனைப் பரிசோதனாசிரியர் என்றே குறிக்கின்றார்.

தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு ஆய்வாளர்களே தொடக்கப் புள்ளிகளாக அமைகின்றனர். திறனாய்வு வரலாற்றினைச் சுருக்கமாகத் தொகுத்துப் பார்க்கும் போதுதான் பாவாணரின் இடம் தெளிவாகத் தெரியவரும். எனவே இருபதாம் நூற்றாண்டு இலக்கியத் திறனாய்வு வரலாற்றைத் தொகுத்துக் கொள்வோம்.

இருபதாம் நூற்றாண்டு - திறனாய்வு வரலாறு

இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியில் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை (**தமிழிலக்கிய அரிச்சுவடி**). கே.எஸ். சீனிவாசப்பிள்ளை

(தமிழ்வரலாறு) மறைமலையடிகள் **(மாணிக்க வாசகர் வரலாறும் காலவாராய்ச்சியும்)**, பரிதிமாற்கலைஞர் **(தமிழ்ப் புலவர் சரித்திரம்)** மு.இராகவையங்கார் **(வேளிர் வரலாறு)**, இரா.இராகவையங்கார் **(தமிழ் மொழி வரலாறு)**, கா.சு. பிள்ளை **(தமிழ் இலக்கிய வரலாறு)**, கே.என் சிவராஜ பிள்ளை **(முற்காலத் தமிழ்வரலாறு)** ஆகியோர் தங்கள் ஆய்வுநூல்களை முன்வைத்தனர். இவை தமிழில் குறிப்பிடத்தக்க தமிழ்த் திறனாய்வுப் படிக்கற்களாக அமைகின்றன.

தமிழ்த் திறனாய்வு இருபதாம் நூற்றாண்டில் கால்கொண்ட போதிலும் அனைத்துத் திறனாய்வுகளும் ஒரே திசை நோக்கியவைகளாக அமையவில்லை. அவற்றுள் குறுக்கும் நெடுக்குமாகப் பல்வேறு போக்குகள் காணப்பட்டன. இவற்றுள் பாவாணர் திறனாய்வுத்துறையில் இயங்கிய காலக்கட்டம் சார்ந்து நடைபெற்ற திறனாய்வுப் போக்குகளை இருபிரிவுகளாகப் பிரித்தணுகலாம். இப்பிரிப்புமுறை இத்திறனாய்வு போக்கின் இயல்புகளை அவற்றின் காலக்கட்டம் சார்ந்து நுட்பமாகப் புரிந்துகொள்ள வேண்டியதான பகுப்பு முறை என்பதும் இங்கு மனங்கொள்ளத் தக்கது.

1. நவீனத் திறனாய்வாளர்கள்
2. மரபிலக்கியக் கல்வியாளர்கள்

1. நவீனத் திறனாய்வாளர்கள்

வ.வே.சு. ஐயரை நவீனத் திறனாய்வின் முன்னோடியாகத் தொ.மு.சி. ரகுநாதன், சி.சு. செல்லப்பா ஆகியோர் சுட்டிக் காட்டியுள்ளனர். இவருடைய (Kambaramayana - a study) என்னும் தலைப்பிலான ஆய்வுநூல் 1921 இல் வெளியானது.

கம்பராமாயணம் இரசனை என்னும் தலைப்பில் **பாலபாரதி** இதழில் நான்கு கட்டுரைகள் வ.வே.சு. ஐயர் எழுதினார். இவையே நவீனத் திறனாய்வின் முன்னோடியாக வ.வே.சு. ஐயரைக் கருதுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

வ.வே.சு. ஐயருக்கும் முன்பாக வரலாற்று முறைப்படி பார்த்தால் 1897இல் செல்வக் கேசவராய முதலியார் சித்தாந்த தீபிகை என்னும் இதழில் எழுதினார். இவர் கல்வியாளர் வரிசையைச் சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

டி.கே.சி., க.நா.சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா முதலியவர்கள் நவீனத் திறனாய்வாளர்களாக அறியப் பெறுகின்றனர். இவர்கள் நடத்திய **எழுத்து, மணிக்கொடி**, இலக்கிய வட்டம் போன்றவை குறிப்பிடக் கூடிய இலக்கியத் திறனாய்வுக் களங்களாக அமைகின்றன. இவர்களின் திறனாய்வுகள் பெரும்பான்மையும் இரசனை முறை சார்ந்து அமைவதாயின.

மரபிலக்கிய கல்வியாளர்கள் திறனாய்வுகள்

மரபார்ந்த இலக்கியக் கல்வியும் புலமையும் வாய்க்கப் பெற்ற இவர்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் என்பது குறிப்பிடக்கூடியது. அவ்வகையில் மு.இராகவையங்கார், ரா.இராகவையங்கார், நாவலர் சோமசுந்தர பாரதியார், ரா.பி.சேதுபிள்ளை, தண்டபாணி தேசிகர், வ.சுப.மாணிக்கம், அ.ச.ஞானசம்பந்தன், மு.வரதராசன், தேவநேயப் பாவாணர் ஆகியோர் அமைகின்றனர்.

தேவநேயப் பாவாணர் இத்தகையவர்களில் இரண்டாவதாகக் குறிப்பிடப் பெற்ற திறனாய்வாளர் வரிசையில் அமைகின்றார். இதிலும் குறிப்பாகத் திராவிடத் தமிழ்த்தேசியக் கருத்தியலுக்கு ஏற்ப வெளியான திறனாய்வுகளான பின்வருவனவற்றைக் கூறலாம்.

தமிழர் இன அரசியலை முன்னிறுத்தி வெளியான நூல்களுள் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை எழுதிய இராவணப் பெரியார் என்ற நூல் முதன்மை பெறுகின்றது. இதற்குத் தூண்டுகோலாக அமைந்த நூல் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் **இராமாயண உள்ளுறைப் பொருளும் சாதிவரலாறும்** என்னும் கட்டுரையைக் குறிப்பர்.

இவ்வகையில் பா.வே.மாணிக்க நாயக்கரின் **கம்பன் புளுகும் வால்மீகிவாய்மையும்**, அண்ணாதுரையின் **கம்பரசம், தீ பரவட்டும்**, ரா.பி.சேதுபிள்ளையின் **அரக்கர் தமிழரா**, கு.பால சுந்தர முதலியாரின் கம்பரச ஆராய்ச்சி ஆகியன முதன்மையாக விளங்கின.

இத்தகைய நூல்களின் அணிவகுப்புகளுக்கு இடையேதான் பாவாணரின் கருத்துகளைத் தாங்கிய நூல்கள் வெளியாயின. பாவாணர் திறனாய்வாளர் என்னும் நிலையில் வைத்துப் பார்க்கும் போது அவருக்குள் தொழிற்பட்ட திறனாய்வு முறைகள் அவற்றின் அகல நீளங்கள் ஆகியன ஈண்டு மதிப்பிடப் பெறுகின்றன.

திறனாய்வாளர் பலர் மேற்கத்திய திறனாய்வு முறையை மட்டுமே பின்பற்றி எழுதினர். தமிழ்த் திறனாய்வு முறையில் உரையாசிரியர் மரபிலிருந்து மீட்டெடுத்துப் பயன்படுத்தியோர் சிலரேயாவர். அவர்களுள் முதன்மைசான்றவராகப் பாவாணர் அமைகின்றார்.

தமிழ்த்திறனாய்வு என்பது உரையாசிரியர் மரபில் கால்கொண்டு தழைத்து எழவேண்டும். இத்தகைய மரபிற்குரிய வராகவே பாவாணர் அமைகின்றார். மு.வரதராசனாரின் திறனாய்வுகள் கல்வி நிறுவனத்தில் திறனாய்வுப் பாடத்தை நடத்தும் நோக்கம் கருதி ஆங்கிலத்திலிருந்து தமிழில் பெயர்த்து எழுதப்பட்டவை. இதற்குச் சான்றாக அமைவது அவரின் **இலக்கியத் திறனாய்வு** என்னும் நூலாகும். மு.வ. வின் **இலக்கிய மரபு** என்ற திறனாய்வு நூலும் இத்தகைய மேனாட்டுத் திறனாய்வு முறை தொனிக்க எழுதப் பட்டதாகும். பாவாணரின் நூல்களுள் முதன்மைசான்ற திறனாய்வு முறையாக அமைவது விளக்க முறைத் திறனாய்வு. வரலாற்று முறைத் திறனாய்வும், ஒப்பியல் திறனாய்வும் பாவாணரின் மற்றைய குறிப்பிடத்தக்க திறனாய்வு உத்திகள்.

திறானாய்வு என்னும் இலக்கியத்தை, ஓவியத்தை, இசையை ஆராயும் போக்கு தமிழிற்கு முற்றிலும் புதிய ஒரு வரவு. திறனாய்வு முறைகளாகப் பல்வேறு கொள்கைகள் இன்று இலக்கிய வழக்கில் காணப்படுகின்றன. பாவாணர் என்ற ஐம்பதுகளில் இலக்கிய வரலாற்றுப் புலங்களில் கோலோச்சிய தமிழ் மேதமை சான்ற பெரியோரிடத்து எத்தகைய திறனாய்வுக் கூறுகள் வெளிப்படுகின்றன என்பதைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

1. விளக்க முறைத்திறனாய்வு (Descriptive Method)
2. பகுப்பியல் திறனாய்வு (Analytical Method)
3. ஒப்பாய்வு (Comparative Method)

இம்மூன்று திறனாய்வு முறைகள் மட்டுமே பாவாணரின் திறனாய்வுப் பார்வையைத் தீர்மானித்த உத்திகள். இவற்றைத் தாண்டியும் பாவாணர் சிந்தித்து எழுதிய போதினும் அவற்றைக் கோட்பாட்டாக்கம் செய்வது அரிய செயலாகும். அவை தனித்த உதிரிகளாகவே விளங்குகின்றன. இனி மேற்குறித்த திறனாய்வு உத்திகளை நிரல் நிறையாக பாவாணரின் எழுத்துகளில் பொருத்தி ஆராயலாம்.

1. விளக்க முறைத் திறனாய்வு

ஒரு செய்தியின் ஒவ்வொரு பகுதியையும் விளக்கி உரைநடையில் எழுதப்படும் திறனாய்வை விளக்க முறைத்திறனாய்வு எனலாம். இவர்களைப் பொதுவுடைமை ஆய்வாளரான க.கைலாசபதி பாண்டித்திய திறனாய்வு அல்லது பண்டிதத் திறனாய்வு என்கிறார். இவ்வகையிலான திறனாய்வினரின் குறைபாடுகளைக் கைலாசபதி பின்வருமாறு பொதுமைப் படுத்துவார்.

> **இந்நூற்றாண்டில் எழுதப்பட்ட திறனாய்வு நூல்களுள் இப்பிரிவினர் இயற்றியவையே எண்ணிக்கையில் அதிகமானவை எனலாம். இத்தகைய நூல்களை எழுதுவதும், வெளியிடுவதும் தொழில் துறை அல்லது வாணிக முயற்சி எனக் கருதுமளவிற்கு வேகமாயும் வேறுபாடின்றியும் பல நூல்கள் உற்பத்தி செய்யப்படுவது கண்கூடு.**
>
> (இலக்கியமும் திறனாய்வும், 40)

கைலாசபதியின் பார்வையில் குறிப்பிடப்பெறும் இத்தகைய பாண்டித்திய திறனாய்வு முறையையும் தாண்டிய ஒன்றாகவே பாவாணரின் திறனாய்வு தொழிற்பட்டது.

தமிழர்களின் திருமணம் பற்றிய பாவாணரின் நூலொன்றினை இத்தகைய திறனாய்வு முறைக்குச் சான்றாகக் கூறலாம். ஏறு தழுவுதல் என்னும் முல்லைநில வழக்கம் தமிழர்களின் மண முறையில் பெரும்பங்கு வகித்தது. இதனைப் பாவாணர் பின்வருமாறு எழுதுகிறார்.

> **ஏறு தழுவல் என்னும் பண்டை வழக்கமே இன்று கள்ளர் மறவரிடைச் சல்லிக்கட்டு என்றும் மஞ்சு விரட்டு என்றும் வழங்கி வருகிறது. ஆயர் இவ்வழக்கத்தை நீண்ட காலமாக அடியோடு விட்டுவிட்டதனால் தம் முன்னோரின் மறத்தை முற்றிலும் இழந்து விட்டனர். சல்லிக்கட்டு மாட்டுத் தொழுவை இன்றும் பாடி அல்லது பாடிவாசல் என்றழைப்பது இவ்வழக்கம் பண்டைக் காலத்தில் ஆயர்பாடியில் நிகழ்ந்தது என்பதை உணர்த்தும்.** (தமிழர் திருமணம் . ப.9)

இவ்வாறு இலக்கியப் பனுவல்களில் இருந்து தொகுத்துத் தமிழர் திருமணம் தொடர்பான மீளுருவாக்கம் ஒன்றைச் செய்யும் பாவாணர் தமிழர் திருமணம் என்ற சடங்கை மானுடவியலின் பார்வையிலிருந்தும் விவரித்து எழுதத் தவறவில்லை.

திருமணம் என்பதை மனித இனம் ஏற்படுத்திக் கொண்டதின் தேவை. அதன் சமூகப் பரிமாணம், சமூக வளர்ச்சிப் போக்கில் அதன் இடம் ஆகியன பாவாணரால் தொட்டுக் காட்டப்பெற்றுள்ளன. பாவாணர் மானுடவியல் பார்வையின் பின்புலத்தில் தமிழர் திருமண நிகழ்வைக் குறிப்பிடும் போதே ஒப்பியல் திறனாய்வு உத்தியை அவர் கையாளும் திறன் வெளிப்படுகிறது. பொதுவாகவே எக்கருத்தை எடுத்தாலும் போதும் பிறவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பார்வை பாவாணருக்கும் இழையோடியது. இதனை இயல்பான அவரின் விவரிப்புப் போக்கிலேயே காண இயலும்.

> **ஆண்மகப் பேறில்லாத பெற்றோர் தம் மருமகனைத் தம் இல்லத்திலேயே இருத்திக் கொள்வர். இவ்வேற்பாட்டைத் இல்லத்தம் என்பர் கன்னடர்.** (தமிழர் திருமணம், ப.9)

தமிழரின் ஏறுதழுவலை எடுத்துரைக்கும் போது இதுபோல் உலகின் பல்வேறு தொல் குடிகளிலும் நிகழ்வதுண்டு எனக்கூறும் பாவாணர் அதற்கான கோட்பாட்டுச் சொல்லாடலாகப் பரிணாமவியல் அறிஞரான டார்வின் கூறிய கலைச்சொல்லையும் எடுத்துக் காட்டும் பாங்கு இன்றும் ஆய்வாளர்களை வியக்கவைப்பதாகும்.

> **ஒரு கொல்லேற்றை எவன் பிடித்தடக்கி நிறுத்துகிறானோ அவன் அவ்ஏற்றிற்குரிய ஆய மகளை மணப்பான், இம்மணமுறை கலித்தொகை என்னும் சங்க நூலில் முல்லைக் கலியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வட நாட்டில் ஏறு தழுவி நப்பின்னையை மணந்தது இத்தமிழ் மரபே... இவ்வாறு மறஞ்சிறந்த ஆடவரையே மணக்கும் ஏற்பாட்டைப் பாலியல் தெரிப்பு என்பார் டார்வின் பேரறிஞர்.** (தமிழர் திருமணம் ப.9)

தேவநேயப் பாவாணர் தமிழர் திருமண முறையை மானுடவியல்

சிந்தனைகளின் பின்புலத்தில் வைத்துப் புரிந்து கொள்வதன் விளைவே விரிந்த தளத்தில் தமிழ் அடையாளத்தை விளங்கிக் கொள்வதாகும்.

பகுப்பியல் திறனாய்வு

பகுப்பியல் திறனாய்வு என்பது 1950களில் பயன்பாட்டில் இருந்த ஒன்றாகும். சி.சு. செல்லப்பா எழுத்து இதழில் பகுப்பியல் திறனாய்வை அலசல் முறைத் திறனாய்வு என்னும் பெயரில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் பாவாணரின் எழுத்துகளிலும் காண முடியும். பகுப்பியல் திறனாய்வு என்பது ஒரு செய்தியைப் பகுத்து, தொகுத்து எழுதுவதாகும். பாவாணரின் தமிழர் வரலாறு என்னும் நூலின் மூன்று தொகுதிகளும் பகுப்பியல் உத்தியை முழுமையாகக் கொண்டு எழுதப் பெற்றவையாகும்.

தொல்காப்பியம் தொடர்பாகப் பாவாணர் எழுதுகையில் **பிள்ளையாட்டு, தொல்காப்பிய அரங்கேற்றம், தொல்காப்பியத் தொழில் குலங்களும், தொழில்களும்** என்னும் தலைப்புகளின் கீழ்ப் பகுத்து எழுதியுள்ளார். பொதுவாகவே பாவாணரின் எழுத்துக்கள் பகுப்பியல் முறை சார்ந்த திறனாய்வுகளாகவே தென் படுகின்றன.

விளக்கவியல் திறனாய்வு, பகுப்பியல் திறனாய்வு, ஒப்பியல் திறனாய்வு என்னும் இம்மூன்று திறனாய்வுகளையும் கைக்கொண்டு பாவாணர் இயங்கியுள்ளார். தமிழ்த்தேசியத் தமிழ் இனவுணர்வுச் சார்ந்த கோட்பாட்டினை இம்மூன்று உத்திகளை முன்வைத்தே பாவாணர் கட்டமைத்துள்ளார் எனக் கூறலாம்.

இனி, பாவாணர் ஒப்பியல் திறனாய்வு மூலம் மானுடவியல் கருத்துகளை உள்வாங்கி அவற்றின் பின்புலத்தில் தமிழர் திருமணத்தை ஒப்புநோக்கி ஆராய்ந்துள்ளார். அதனை அவர் விவாதப் பொருளாக்கும் விதம், திருமணச் சடங்குகளைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறை ஆகியன பாவாணரை மிகச் சிறந்த திறனாய்வாளராகக் காட்டுகின்றன.

திருமண வகைப்பாடு

திருமணம் என்பது தமிழர்கள் சங்க காலத்திலிருந்து வழங்கி வரும் வழக்கமாகும். **தொல்காப்பியம்** திருமண வாழ்வு குறித்துப் பல்வேறு செய்திகளைத் தெரிவிக்கின்றது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்பர்

என்னும் **தொல்காப்பிய** நூற்பா திருமணத் தோற்றம் குறித்துக் குறிப்பிடுகின்றது. பண்டைய தமிழர் திருமணம் அகமணம், புறமணம் என்று இருவகைப்படும் என்கிறார் பாவாணர்.

திருமண முறைகள் பற்றிக் குறிப்பிடும் பண்பாட்டு மானுடவியல், உலகில் உள்ள திருமண முறைகளை நான்காகக் காட்டுகிறது.

1. ஒரு துணை மணம் (Monogamy)
2. பல துணை மணம் (Pologamy)
3. தொடர் மணம் (Serial Marriage)
4. குழு மணம் (Group Marriage)

மேற்குறிப்பிட்ட திருமண முறைகள் உலகில் பல்வேறு இனங்களில் வழங்கி வந்த போதினும் 195 சமூகங்களில் பல் துணைமுறை வழக்கிலுள்ளது. 43 சமூகங்களில் ஒரு துணை மணம் வழக்கில் உள்ளது. மர்டாக் என்னும் இனவரலாற்றாளர் இனக்குழு மாதிரிகளைத் தொகுத்தார். அவற்றுள் 565 சமூகங்களில் 24 விழுக்காடு மட்டுமே ஒரு தார மணம் காணப்படுகிறது என்கிறார். (**பண்பாட்டு மானுடவியல்,** ப.395.) இவற்றை உள்வாங்கிய பாவாணர் பின்வருமாறு தம் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

> **அகமணமாவது ஒரு குலத்தார் தம் குலத்திற்குள்ளேயே மணத்தல். புறமணமாவது ஒரு குலப்பிரிவினர் தம் குலத்திற்குள் மணவாது வேறொரு பிரிவில் மணத்தல். ஒரே குலத்தில் தொடர்ந்து மணங்கள் நடைபெறுவதால் விளையும் கேட்டை விளக்குவதற்குக் குலப்பிரிவிற்குப் புறமணம் விதிக்கப் பட்டதாகத் தெரிகிறது.**
>
> (தமிழர் திருமணம் ப.14)

இதனுள் பாவாணர் புறமண முறைகள் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகின்றார். மேலும் புறமண முறை சாதியப் படிநிலைகளைத் தாண்டிய ஒன்றாகச் செயல்படும் என்னும் கருத்துத் தொனிக்க எழுதப் பட்டிருக்கிறது.

புறமணம் இந்தியவியல் சமூகத்தில் சாதிகளைத் தகர்க்கக்கூடிய ஒன்றாகும். பாவாணர் இதனை நன்கு உணர்ந்தவர்.

இனவரலாற்றுவியல் பற்றிப் பேசும் போது இந்தியச் சமூகங்களில் சாதிய முறைகளுள் அவை அடைபடும் நிலை உண்டாகும். ஆகவே பேரின அடையாளத்திற்கே முதன்மையளித்துப் பாவாணர் இதைப் பேசியுள்ளார். பாவாணர் இனவரலாற்று ஆய்வுப் பார்வைவழி திறனாய்வுகளை மேற்கொண்டவர். தமிழினம் குறித்த புரிதலை மானுடவியல் பின்புலத்தில் முதன் முதலில் வைத்துப் பேசிய பெருந்தகையாளர் பாவாணரே.

இனவரைவாளர் பாவாணர்

பாவாணர் தமிழின உணர்வாளராகவே வாழ்ந்தவர். தமிழினம் குறித்த மீள்கண்டுபிடிப்பு, தேடல், ஆவணமாக்கம் என்பதாகவே பாவாணரின் ஆய்வுகள் மையம் கொண்டன. பாவாணரின் ஆழ்ந்தகன்ற புலமை வரலாறு, மானுடவியல், மொழியியல், பண்பாட்டுத்தேடல் என உழன்ற போதினும் இவற்றிற்குள் ஊடுசரடாக நின்றவை இனவுணர்வுகளே.

இனவுணர்வு என்பதைப் புரிந்து கொள்ள இனம் என்பதன் வரையறை தேவையாகிறது. ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் கூட்டம் தொடர்ச்சியாக ஒரே நிலப்பரப்பில் வாழ்ந்த காரணத்தினால் அவை பெற்றிருக்கும் பழக்க வழக்கம், சடங்குகள், விழுமியங்கள் ஆகியவற்றின் தொகுப்பு ஓர் இனப் பண்பாட்டைத் தீர்மானிக்கிறது.

இவ்வகையில் ஒரே இனம் என்பதற்கான மனித உடலியல் கூறுகளாக நெற்றியின் அகலம், கைவிரலின் நீளம், மண்டையோட்டின் அமைவு, ஆகியனவற்றின் ஒப்புமையைக் கூறுவர். இனவரைவியல் சிந்தனைகள் உரத்துப் பேசப்பட்டு வரும் இன்றைய சூழலில் தமிழின வரலாறு ஒன்று தேவையாகிறது. அதை நோக்கிய ஆய்வுக்கான முன்னோடித்தன்மை வாய்ந்தவையாகப் பாவாணரின் ஆய்வுகள் கருதத்தக்கன. அதிலும் தமிழ்ப் பண்பாடு, மீளுருவாக்கம் ஆகியவற்றிற்கு அவரின் எழுத்துகள் பெரும் துணைபுரிகின்றன.

பண்பாடு வரையறை

பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தம் சமூக வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பொருட்கள், கருத்துகள், மத நடைமுறைகள், சமூகப் பெருமானங்கள் ஆகியவற்றின் தொகுதி ஓர் இனத்தின் பண்பாடு என்று வரும் போது

அவ்வினத்தின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைகள், உற்பத்தி உறவுகள், கல்வி, அறிவியல், இலக்கியம், கலை, நம்பிக்கை, ஆகியனவற்றைச் சார்ந்து அமைவதாகும்.

பொதுவுடைமைப் பார்வையில் இரண்டாகப் பிரித்து அணுகுவார் கா.சிவத்தம்பி.

> **பண்பாட்டின் சமூகப் பயன்பாட்டினை மறந்து விடக் கூடாது. இதன்காரணமாகப் பண்பாடென்பது இருநிலைப்பட்டதாகக் காணப்படும் ஒரு நிலைமை ஏற்படுவது வழக்கம்.**

1. **நிறுவனச் சார்பான பண்பாடு** (Establishment Culture)
2. **எதிர் நிலையான பண்பாடு** (Counter Culture)

(பண்பாட்டுருவாக்கத்தில் பத்திரிக்கைகளின் பங்கு. ப.8)

ஒவ்வொரு சமூக வளர்ச்சிப் போக்கிலும் இருவேறுபட்ட பண்பாடு இழையோடுவதைச் சமூக ஆய்வாளர் பலர் எழுதிவந்துள்ளனர். ஜெர்மானியத் தத்துவியலாளரான பரெட்ரிக் நீட்சே இது போன்ற இரு வேறுவகையான பண்பாட்டைக் குறிப்பிடுவார்.

1. உயர் பண்பாடு (Aristocratic)
2. அடிமைகளின் பண்பாடு (Slave morality)

இவையிரண்டும் ஒன்றோடொன்று முரண்கொண்டு அமையும்

பொதுவாகவே பண்பாடென்பது மக்கள் கற்றுணர்ந்த நடத்தை முறையின்தொகுப்பு என்று கூறுவர் **(பண்பாட்டு மானுடவியல் ப.228).** தமிழ்ச் சூழலில் வாழ்ந்த தமிழர்கள் தங்களுக்கெனத் தனியான பண்பாட்டைப் பேணிவந்தனர். **பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. பண்பாடென்பது சடங்குகள்,** விழுமியங்களின் விவரணை. இதனை மனங்கொண்டே பாவாணர் தமிழர் திருமணம் குறித்த பதிவுகளை இலக்கியப் பனுவல்களின் வழியே காட்சிப் படுத்தியுள்ளார்.

தமிழர் தம் பண்பாட்டு அடையாளங்களைத் தேடிக் கண்டடைந்து ஆய்வுகளாக வெளிப்படுத்தியவர்களாகத் தமிழ் ஆய்வுலகம் ஒரு சிலரை நினைவில் வைத்துள்ளது. அவ்வகையில் வேளிர் வரலாறு வரைந்த மு. இராகவையங்கார், ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய **கள்ளர் சரிதம்**

ஆகியன குறிப்பிடத்தக்க ஆய்வுகளாகும். சோழர்களைப் பற்றி ஆராய்ந்த து.அ. கோபிநாத ராவ், நீலகண்ட சாஸ்திரி ஆகியோரின் ஆய்வுகள் என்றும் நிலைப்பவை.

இவ்வகையான வரலாற்று ஆய்வுகளையும், பண்பாட்டுப் பதிவுகளையும் ஒருங்கே சேர்த்துப் பாவாணரின் ஆய்வுகள் அமைகின்றன.

இனம் மானுடவியல் விளக்கம்

ஒவ்வோர் இனமும் தனித்த அடையாளங்களைக் கொண்டுள்ளது. சமூகவியல் அறிஞர் கிராம்ஸ்கி இந்நூற்றாண்டைப் பற்றி எழுதுகையில் மூன்றாம் உலகப் போரின் காரணத்தைத் தோற்றுவிக்கும் காரணியாக இனப்போராட்டம் அமையும் என்கிறார். (எஸ்.வி.இராஜதுரை – அந்தோனி கிராம்ஸ்கி).

இனம் என்பதைத் தீர்மானிப்பதில் முதன்மையானது அவர்களிடையே வழக்கத்திலுள்ள தாய்மொழி. மானுடவியல் சிந்தனைகளின்படி பார்க்கும் போது மனித குல வரலாற்றைப் பல இனங்களாகப் பிரிப்பதற்கு மானுடவியலாளர் பல அலகுகளைக் கையாளுகின்றனர். அவற்றுள் குறிப்பிடக் கூடியனவாகச் சிலவற்றைப் பக்தவச்சல பாரதி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> **இப்பண்புகளுள் குறிப்பிடத்தக்கவை தோலின் நிறம், மூக்கமைப்பு, முகவடிவு, தலைமயிர், தலையமைப்பு, தோல் கூற்றியல், இரத்த வகைகள், சுவையுணர்வு, காது குரும்பி, முதலானவை யாகும்.** (பண்பாட்டு மானுடவியல் ப.4)

இவை தவிர மனித உடலில் உள்ளங்கை, உள்ளங்கால், விரல்கள் ஆகிய பகுதிகளைத் தவிர வேறெந்தப் பகுதிகளிலும் இரேகைகளும், வரயமைப்புகளும் இல்லை. இவ்வாறு இப்பண்புகள் இனத்திற்கு இனம் இவ்வாறு மாறுபட்டுள்ளன என்பதைத் தோற்கூற்றியலாளர் வகைப்படுத்துகின்றனர். தென்னிந்தியப் பகுதியில் வாழ்ந்த தமிழர் என்னும் இவ்வினம் குறித்துப் பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் முதல் நூலாக, பி.கனகசபைப் பிள்ளை அவர்கள் எழுதிய 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்னும் நூலைக் கூறலாம். இவை பாவாணருக்குள் இன எழுச்சியை உண்டாக்கின.

பாவாணருக்குள் இனவுணர்வு

பாவாணர் இனஉணர்வுப் பற்று மிக்கவர். தம் வாழ்நாள் முழுவதும் இனமேன்மையை முன்வைத்து அவரின் எழுத்தும், பேச்சும் அமைந்தன என்பதை அவரின் வாழ்வைக் காண்பவர்கள் நன்கறிவர். இதனைப்பாவாணரின் ஒவ்வோர் எழுத்தும் வெளிப்படுத்தும் என்றபோதினும் **தமிழன் எப்படிக் கெட்டான், தமிழர் சரித்திரச் சுருக்கம்** ஆகிய இன நூல்களும் இதற்குச் சாட்சிகளாக அமைகின்றன.

சென்னைப் பள்ளி, மன்னார்குடிப் பள்ளி, சேலம் நகராட்சிக் கல்லூரி எனப் பலவிடத்தும் பணிபுரிந்தவர் பாவாணர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திறம்படத் தமிழக்குத் தொண்டாற்றியவர்.

தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும்

மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்

என்பது பாவாணர் அடிக்கடி கூறிக்கொள்ளும் தொடராகும். மறைமலையடிகள் தொடங்கிச் செயற்பட்ட தனித்தமிழ் இயக்கம், நல்ல தமிழ்ப் பெயர் தாங்குதல், வடமொழியோ பிற மொழியோ கலவாத தமிழ் நடையில் பேசுதல், எழுதுதல் என்பனவற்றை முன்வைத்தது. இதனைப் பாவாணரும் தம் உயிர் மூச்செனக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தார். பாவாணரின் தனித்தமிழ்க் காலம் மறைமலையடிகள் வாழ்ந்த காலப்பகுதியிலும் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி கண்டது. இதனைத் தமிழ்க் குடிமகன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> **பாவாணருக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. மறைமலையடிகளார் காலத்தில் தனித்தமிழ் இயக்கம் தொடங்கப்பட்டு, பல நண்பர்கள் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டனர். தமிழ்நாடு முழுவதும் பல குடும்பங்களில் நல்ல தமிழ்ப் பெயர்கள் வைக்கப் பட்டன. திராவிட இயக்க அரசியல் தலைவர்களும் பலருக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்டினர். இது பெரு வழக்காகி ஒரு பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்த வகையில் இயக்கம் என்று பார்த்தால் மறைமலையடிகள் காலத்தைவிடப் பாவாணர் காலம் பெரிய வளர்ச்சியைக் கொணர்ந்தது என்பதை மறுக்க இயலாது.** (தமிழர் திருமணம் ப. 12)

மேற்குறித்த இக்கருத்து பாவாணரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது குறிப்பிடப் பட்டதாகும். தமிழர் சரித்திரச் சுருக்கம் பாவாணரின் 1941இல் வரையப் பெற்றது. இந்நூலின் வளர்ந்த வடிவமாகத் தமிழ் வரலாறு என்னும் நூலை 1967இல் பாவாணர் எழுதினார்.

பழந்தமிழாட்சி (1952) **தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம்** (1956) ஆகிய இம்மூன்று நூல்களும் தமிழரின் மிக ஆழமான பண்பாட்டு ஆவணமாக்கம் எனலாம். இத்தகைய நூல் படைப்புகளின் வழியே பாவாணர் மிகச் சிறந்த தமிழ்த் திறனாய்வாளராக தோற்றம் தருகிறார்.

மறுப்புரையாளர் பாவாணர்

பாவாணர் தம் கருத்துகளைத் தெளிவாக முன்வைக்கும் அதே வேளையில் மாறாக் கருத்துகளைத் தக்க-காரண காரியம் கொண்டும் மறுத்துள்ளார். இவற்றைப் பாவாணரின் எழுத்துகள் ஒவ்வொன்றிலும் தெளிவாகக் காண இயலும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மிகப் பெரிய கண்டனவாதி சிவஞானமுனிவர் என்றால் பத்தொன்பதாம் நூறாண்டின் மிகச் சிறந்த கண்டனவாதி ஆறுமுக நாவலர் என்பார் க.கைலாசபதி (நாவலர் பற்றிக் கைலாசபதி ப.8).

இவற்றைக் காணும்போது இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த மறுப்புரையாளராகப் பாவாணரைக் கூறலாம். இதற்குச் சான்றாகப் பின்வரும் பகுதியைக் காட்டலாம்.

> **தமிழ் திராவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் என்னும் உண்மையை உலகமறிய நாட்டுவேன். அதன்பின் நடுவணரசு வடமொழி அகரமுதலிக்குத் தரும் தொகைபோல ஒன்றரை மடங்கேனும் தமிழகரமுதலிக்குத் தராவிடின் தமிழ்நாடு கீழ்வங்க நாடுபோல் பிரிந்தேயாக வேண்டும்.**
>
> (தமிழர் வரலாறு தொ.2. ப.156)

ஆங்கிலேயருக்கும், பிராமணருக்கும் இடையே பதினேழு புள்ளிகளைத் தொகுத்துப் பாவாணர் காட்டுகிறார். தமிழைக் காத்து வருபவர்கள் என்று மூன்று பேரைப் பாவாணர் காட்டுவார். தவத்திரு குன்றக்குடி அடிகள்,

தாமரைத் திரு வ.சுப்பையா பிள்ளை, பாவலர் பெருஞ்சித்திரனார். இம்மூவரைப் பாவாணர் போற்றக் காரணம் யாதெனில் அவர்கள் தமிழிலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டே யாகும்.

பல்கலைக் கழகங்களில் ஆய்வுக் கழகங்களில், ஆய்வுப் பதவிகளில் யாவர் அமைய வேண்டுமென்று பாவாணர் தம் உரைகளில் குறிப்பிடுகிறார்.

> **பேரா.சினிவாச ஐயங்காரும், பேரா. இராமச்சந்திர தீட்சதரும் போல் தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்கள் என்று கொள்பவரையே பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவராக அமர்த்துதல் வேண்டும்.**
>
> (தமிழக வரலாறு ப. 158)

இவை தவிர வையாபுரிப் பிள்ளை, தெ.பொ.மீனாட்சி சுந்தரம் இவர்கள் குறித்த கடுமையான விமர்சனங்களையும் பாவாணர் தம் உரைகளில் குறித்துள்ளார். **நன்னூல் - நன்னூலார் மறுப்பறுப்பு** என்னும் தலைப்பில் தென்றல் இதழில் பாவாணர் 16.11.1957 மறுப்புரை ஒன்றை எழுதியுள்ளார். இதில் நன்னூலில் இடம் பெற்றள்ள சில கருத்துகளை மறுத்தெழுதி முடிபாகப் பின்வருமாறு எழுதுகிறார்.

> **இதனால் நன்னூல் அறவே தீ நூல் என்பதன்று, அதிலும் சில நற்கூறுகள் உள ஆயின் தமிழரின் உயிர் நாடியான தனித்தன்மைக்கும், தமிழ் மொழி நூல் உண்மைக்கும் மாறான பல கருத்துகள் உள்ளமையின் அது முற்றிலும் நன்னூல் அன்று என்பதே.** (மறுப்புரை மாண்பு ப. 29)

பாவாணர் தம் வாழ்நாள் முழுவதும் மறுத்து எழுதிய எழுத்துகள் அனைத்தையும் தொகுத்து மறுப்புரை மாண்பு என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளனர். இவை அனைத்தும் பாவாணர் தமிழ்ப் புலம் சார்ந்து இயங்கிய வரலாற்றைத் தெளிவு படுத்துவன. பாவாணர் தமிழ்த் திறனாய்வுப் புலத்தில் நிகழ்த்திய மறுப்புரைகள், கண்டனங்கள், அனைத்தும் பொருள் பொதிந்தவை. அவருக்கு அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டியவை. எனவே பாவாணர் ஆய்வு அணுகுமுறையோடு நிகழ்த்தியுள்ள மறுப்புரைகளின் வழி

அவரின் திறனாய்வு உத்தி வெளிப்படும் பாங்கு ஆய்வுலகத்தால் போற்றத் தக்கதாகும்.

மறைமலையடிகளின் கருத்தியலைப் பெரிதும் உள்வாங்கிச் செயல்பட்ட தேவநேயப் பாவாணர் தம் சமகால மொழிநூல் பேராசிரியர்களின் முடிவுகளை வன்மையாகக் கண்டித்தார். அவர்கள் மொழிநூலைச் சரிவரப் புரிந்து செயல்பட வில்லை என்பது பாவாணரின் வாதம். பாவாணர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரை மறுத்து எழுதிய இரண்டு கட்டுரைகளும் அன்றைய இதழ்களில் வெளியானவை. சுதேசமித்திரன் தீபாவளி சிறப்பிதழில் தெ.பொ.மீ.யினுடைய **தமிழில் பிற மொழிச் சொற்கள்** என்னும் கட்டுரை வெளியானது. இதனைக் கண்ட பாவாணர் **தெ.பொ.மீ. தமிழுக்கு அதிகாரியா** என்னும் தலைப்பில் தென்மொழி என்னும் இலக்கிய இதழில் 1986இல் ஒரு கட்டுரையை வரைந்துள்ளார்.

> **சுதேசமித்திரன் என்னும் நாளிதழ் விளக்கணி விழாவன்று வெளிவந்த சிறப்பு மலரை அண்மையில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அதில் தமிழில் பிறமொழிச் சொற்கள் என்னும் கட்டுரை தெ.பொ.மீயால் வரையப்பட்டுள்ளது. ஏற்கெனவே அவர்தம் ஆரியச் சார்பும் தமிழறிவுத் திறமும், தெரியுமேனும், அக்கட்டுரை கண்டவுடன் இதுதான் இக்கட்டுரை வெளிவர ஏற்ற சமயமா என்னும் வினா என் உள்ளத்தில் எழுந்து வருத்தியது.** (மறுப்புரை மாண்பு ப.46)

இவ்வாறு தாம் அக்கட்டுரையைக் கண்ட விதத்தைக் குறிப்பிடும் பாவாணர் அக்கட்டுரையிலுள்ள இடர்ப்பாடுகளையும், பிழைகளையும் தொகுத்து ஏறத்தாழ இருபது பக்கங்களிலான ஒரு கட்டுரையைப் பாவாணர் வரைந்தார். பொதுவாகவே தெ.பொ.மீ. அவர்களின் ஆய்வுகளின் மீது பாவாணருக்கு ஆழ்ந்த விமர்சனப்பார்வை உண்டு. இதனைப் பாவாணரின் பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகிறது.

> **இவர் வையாபுரிப் பிள்ளையை அடியொற்றி செல்பவர். மாந்தன் தோன்றியகத்தையும், தமிழன் பிறந்தக் கதையும் ஆரியம் தோன்றிய வகையையும் ஆராய்ந்தறியாதவர். தமிழின் குமரி நாட்டுத்**

தோற்றத்தை ஒப்புக் கொள்ளாதவர். தமிழரின் முன்னோர் நன்னிலக் கடற்கரை நாடுகளிலிருந்து வந்தார் என்று வாயினால் சொல்லாவிடினும் உள்ளத்தில் ஒப்புக் கொள்பவர். தமிழ் வேர்ச்சொற்களை அறியாதவர். அதனால் ஆரியத்தை முதன்மையாகவும், தமிழை வழிநடையாக வைத்துத் இலக்கிய வரலாறுகள் எழுதி வருபவர். (மறுப்புரை மானாண் ப.78)

இவ்வாறான பார்வையைக் கொண்ட பாவாணர் தெ.பொ.மீ.யின் திரிபு ஆராய்ச்சி என்னும் கட்டுரை ஒன்றையும் படைத்துள்ளார். இக்கட்டுரை தமிழ் இலக்கணத்தில் அயல் மொழியமைப்புகள் என்னும் தெ.பொ.மீ.யின் நூலினை விமர்சித்து எழுதப் பட்டதாகும். ஏறத்தாழ 40 பக்கங்களில் அமையும் இக்கட்டுரை 1980இல் செந்தமிழ்ச் செல்வியில் வெளியானது. இந்நூலின் முதன்மையான குற்றமாகப் பாவாணர் கருதுவது ஒன்றுண்டு. அது இந்நூல் அடிப்படைத் தரவுகளாகக் கருதும் நூல்கள் **வீரசோழியம், பிரயோக விவேகம்** என்பவனாக அமைகிறது என்பதே. இவை பெரும்பான்மையும் வடமொழி அமைவை முதன்மையானதாகக் கருதி அதன்வழி தமிழ் இலக்கண அமைப்பை விளக்கப் புகுந்தவை என்பது கருதத் தக்கது.

இந்நூல் புத்த மித்திரன் இயற்றிய வீரசோழியம், சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய பிரயோக விவேகம் , சுவாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கணக் கொத்து ஆகிய மூன்று தள்ளுபடி நூல்களையும் விழுமிய அளவை நூலாகக் கொண்டு உண்மைக்கு மாறானவும், தமிழுக்குக் கேடானவுமான முடிவுகளைக் கூறுகிறது. (மறுப்புரை மாண்பு ப.79)

இரண்டாவது பாவாணரின் முதன்மை சான்ற விமர்சனமாக அமைவது தெ.பொ.மீ. சார்ந்து நின்ற மொழியியல் தளம் தொடர்பானது. கால்டுவெல் காலம் வரையில் பின்பற்றப்பட்டு வந்த கொடி வழியில் மொழிநூல் புறக்கணிக்கப்பட்டு அமெரிக்க வழியிலான வண்ணனை மொழிநூல் உருவாக்கப் பட்டது தொடர்பானது. இதனைப் பாவாணர் பின்வருமாறு எழுதுகிறார்.

> **கால்டுவெலார் காலம் வரை கையாளப் பட்டு வந்த கொடிவழியியல் மொழிநூல் விலக்கப்பட்டு அறிவியல் அல்லாத அமெரிக்க வண்ணை மொழிநூல் புகுத்தப் பட்டது. கொடிவழியியல் மொழிநூலால் ஆரிய ஏமாற்றுக் கூற்று வெளியாகிவிடும். ஆதலால் பிராமணர் அதை விரும்புவதில்லை. அதனால் அவர் வழிசெல்லும் தெ.பொ.மீ.யும் அதைப் புறக்கணித்து விட்டார்.**
>
> (மறுப்புரை மாண்பு ப.79)

பாவாணரின் மொழிநூல் தொடர்பாக **வண்ணை நூலின் வழுக்கல்** என்னும் ஒரு தனி நூலையே படைத்துள்ளார். மொழியியலின் போக்குகளை விமரிசிக்கும் பாவாணரின் விமர்சனப் பார்வைக்கு வி.ஐ. சுப்பிரமணியமும் ஆட்பட்டுள்ளார் என்பது இங்குக் கருதத் தக்கது.

> **கேரளப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த வி.ஐ. சுப்பிரமணியமும்,கன்னடப் பல்கலைக்கழத்தைச் சார்ந்த ஆர்.சி. கிரமத்து, திருப்பதி பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கே.மகாதேவ சாஸ்திரி ஆகிய மூவர் குழு. இம்மூவருள் முதல்வர் தமிழைத் தலைகீழாகப் படித்தவர். ஏனைய இருவர் தமிழை அறியாத பெருமாளர்.**
>
> (மறுப்புரை மான்பு ப.78)

பாவாணர் மொழியியலை மட்டுமல்லாது அன்றைய கால இலக்கிய விமர்சனப் புலத்தில் இயங்கிய மயிலை சீனி. வேங்கடசாமியைக் குறித்தும் எதிர்த்துத் தமிழ்ப் பொழிலில் 1960இல் ஒரு கட்டுரை வரைந்தார். இக்கட்டுரை சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியது பாரத படைகட்கே என்னும் தலைப்பில் வெளியானது.

> **அவர்களது எதிர்மறுப்பு பொதுவகையான செய்தி பற்றியதாக இருந்தால் யான் அமைந்திருப்பேன். ஆயின், தமிழுக்குப் பேரிழுக்கம் விளைவிப்பதாகலின் இவ்விருப்பை விடுக்கத் துணிந்தேன். இதற்கு மறுப்புவரின் அதற்கும் இருக்க அந்நியமாய் இருக்கிறேன்.**
>
> (மறுப்புரை மாண்பு ப.38)

இவ்வாறு பாவாணர் தம் கருத்திற்கு ஒவ்வாத செய்திகளை எதிர்த்தும், மறுத்தும் தம் வாழ்நாள் முழுமையும் எழுதினார்.

பாவாணர் தம்முடைய எழுத்துகளின் மூலமாக விளக்கிய, எழுதிய இவையாவும் சிறந்த வரலாற்றுப் பதிவுகளாகத் திகழக் கூடியவை. இவை இன்றைய திறனாய்வுப் புலத்திற்குள் நினைவு கூரப்படவேண்டியவையாக அமைகின்றன.

தொகுப்புரை

பாவாணருக்குள் பல்வேறு வகையான ஆளுமைகள் கொண்டமைந்தபோதும் இவ்வியலுள் அவர் மிகச் சிறந்த திறனாய்வாளராக எவ்வாறு திகழ்கிறார் என்பதைக் கண்டோம்.

பாவாணர் திறனாய்வு உத்திகளாகக் கொண்டவற்றுள் விளக்கமுறு திறனாய்வு, ஒப்பியல் திறனாய்வு, பகுப்பியல் திறனாய்வு ஆகியன குறிப்பிடக் கூடிய திறனாய்வு முறைகளாக அமைகின்றன.

பாவாணர் இருபதாம் நூற்றாண்டின் முதன்மையான மறுப்புரையாளர். தம் சமகால மொழியியல் அறிஞர்களோடு முரண்படும் புள்ளி முதன்மையாகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

பாவாணர் தமிழினத்தின் இலக்கியப் பதிவுகளை மற்றைய இனங்களோடும், உலக வரலாற்றுப் போக்கோடும் வைத்து மதிப்பிடும் பகுதி பரந்த வாசிப்பாளராக அவரைக் காட்டுகிறது.

இவையனைத்துக் கூறுகளின் தொகுப்பும் அவர் மிகச் சிறந்த திறனாய்வாளராக ஐம்பதுகளில் இயங்கியுள்ளார் என்பது முற்றுண்மையாக்க வல்லன.

முடிவுரை

தேவநேயப் பாவாணர் தமிழ்ச்சூழலில் 1950இல் தொடங்கி 1980 வரையிலும் பல்வேறு தடங்களில் இயங்கியவர். தமிழ் இன அரசியல் உணர்வும், இனக் கருத்தியலையும் கொண்டவர். பாவாணர் இயங்கிய தமிழ்ப் புலத்தில் உரையாசிரியர், மொழியியல் வல்லுனர், வரலாற்றாய்வாளர், திறனாய்வாளர் என்னும் பல்வேறு கோணங்களில் தமிழ்ச் சமூகத்திற்குத் தம் சிந்தனைகளை வழங்கியவர். இவருடைய தமிழினம் தொடர்பான சிந்தனையும், செயல்பாடுகளும் இன்றைய தமிழ்ச்சூழலில் தேவையானவை இவையே பாவாணரை மீண்டும் நினைவுகூர அல்லது விவாதிக்க காரணங்களாகும்.

திருக்குறளைத் தமிழ் இனக் கருத்தியல் சார்ந்து வாசிப்பிற்குட்படுத்தி உரையெழுதிய காரணத்தினால் இவர் உரையாசிரியர் என்னும் கோணத்தில் அணுகப் படவேண்டியவர். பாவாணர் உரைத்திறன் விரிந்த நோக்கோடு இந்நூலின் முதலாம் இயலுள் ஆராயப் பெற்றுள்ளது. பாவாணரின் தமிழ்ப் புலமையும், பல்வேறு உரையாசிரியர்களைக் கற்றுத் தேர்ந்து அவர்களிலிருந்து தாம் வேறுபடும் இயல்பும் குறிப்பிடக் கூடியன. இதில் பாவாணரின் உரைகூறும் இயல்பும், இலக்கண இலக்கிய வாசிப்பும் தெளிவாக வெளிப்படக் காண்கிறோம்.

இரண்டாவதாக, தேவநேயப் பாவாணர் தமிழ் இன வரலாற்றை முன்வைத்து எழுதியும் படித்தும் வந்தவர். குறிப்பாக அன்றைய சமகால வரலாற்று ஆய்வு நூல்களை முறையாகப் படித்தவர். பாவாணரின் வரலாற்றுப் பரப்பை இந்த இரண்டாம் இயல் தொகுத்து வழங்கியுள்ளது. பாவாணரின் வரலாற்று முடிவுகள் பல இன்றும் தமிழக வரலாற்று அறிஞர்களிடையே விவாதிக்கப் படும் பொருள்களாகவே உள்ளன. அவற்றுள்ளும் குமரிக் கண்டம், மனிதனின் தோற்றம், இலக்கண இலக்கிய நூல்களின் கால வரையறை இவை பெரும் விவாதத்திற்குரியவை. இத்தகைய முடிவுகளைப் பாவாணர் வந்தடைய அவர் கடந்து வந்த வாசிப்புகள் மிக முதன்மை சான்றவை. அவற்றை ஆராய்ந்து இவ்விரண்டாம் இயல் அவருக்குள் குடிகொண்டிருந்த வரலாற்று அறிவைக் காட்சிப்படுத்தியுள்ளது.

மூன்றாவதாக, பாவாணர் பல்வேறு மொழிகளை நன்கு அறிந்திருந்த பன்மொழிப்புலவர். இப்புலமையை இவர் மொழியியல் ஒப்பீடுகளுக்குப் பயன்படுத்திய முறை தமிழக மொழியாய்வாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுத் தந்தது. திராவிட மொழிகளைக் கால்டுவெல்லின் ஆய்வு முறைமையின் படியே ஆராய்ந்த தமிழறிஞர் பாவாணர் மட்டுமேயாவார். இதனை இவ்வியல் தெளிவாக நிறுவியுள்ளது.

நான்காவதாக, பாவாணர் மிகச் சிறந்த திறனாய்வாளர். ஒப்பீட்டு விளக்கவியல் திறனாய்வு உத்திகளைப் பயன்படுத்தி ஆராய்ந்தவர். பாவாணரின் மறுப்புரைகளும் கண்டனக் கருத்துகளும் திறனாய்வுகளாகக் கருதத்தக்கன. அதனுள்ளும் பாவாணரின் திறனாய்வு முழு வீச்சோடு வெளிப்படக் காண்கிறோம். ஆக இவையனைத்தையும் ஒருங்கே தொகுத்து வைத்துப் பார்க்கையில் பாவாணரின் ஆளுமை பலவாக வெளிப்படுவதைக் காணலாம். இதனைப் பாவாணரின் பன்முக ஆளுமை என அழைத்தல் சாலப் பொருந்தும்.

துணைநூல்கள்

1. ஆனந்தன், கு.ச., **திருக்குறள் உண்மைப்பொருள்**, தங்கம் பதிப்பகம், கோபிசெட்டிப் பாளையம், 1987.
2. ஆறுமுக நாவலர், **நன்னூல் மூலமும் காண்டிகை யுரையும்**, பாரிநிலையம், 1990.
3. இராகவன், பா., **டாலர் தேசம்**, கிழக்குப் பதிப்பகம்,சென்னை, 2010.
4. கைலாசபதி, க., **இலக்கியமும் திறனாய்வும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1992.
5. மேலது, **நாவலர் பற்றிக் கைலாசபதி**, குமரன் பதிப்பகம், கொழும்பு, 2003.
6. சாரங்கபாணி, இரா., **திருக்குறள் உரை வேற்றுமை-1 பொருட்பால்**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1889.
7. மேலது, **திருக்குறள் உரை வேற்றுமை-1 அறத்துப்பால்**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1898.
8. சிவத்தம்பி, கா., **தமிழில் இலக்கிய வரலாறு**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1998.
9. மேலது, **பண்பாட்டு உருவாக்கத்தில் பத்திரிக்கைகளின் பங்கு**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1998.
10. செல்லம், வே.தி., **தமிழக வரலாறு புதிய பார்வை**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1998.
11. தண்டபாணி தேசிகர், **திருக்குறள் உரைக் களஞ்சியம்** (பா.ஆ.), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1990.
12. திருவள்ளுவர், **திருக்குறள் மரபுரை**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.
13. திருவள்ளுவர், **திருக்குறள் பரிமேலழகர் உரை**, பூம்புகார் பதிப்பகம், 1990.
14. தேவநேயப்பாவாணர், **தமிழர் வரலாறு**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.

15. மேலது, **திராவிடத்தாய்**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.

16. மேலது, **தமிழர் திருமணம்**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.

17. மேலது,**மறுப்புரை மாண்பு**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.

18. **வேர்ச்சொல் கட்டுரைகள்**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.

19. மேலது, **தமிழர் நாகரிகமும் பண்பாடும்**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000.

20. கணேசையர், ச., **தொல்காப்பியம்**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

21. பக்தவச்சல பாரதி, **பண்பாட்டு மானுடவியல்**, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003.

22. பிள்ளை, கே.கே., **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

23. நீலகண்ட சாஸ்திரி, **சோழர்கள்**, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2007.

24. ராஜதுரை, எஸ்.வி., **அந்தோனி கிராம்ஸ்கி**, அலைகள், சென்னை, 2001.

25. ரொமிளா தாப்பர், **வரலாறும் வக்கிரகங்களும்**, அலைகள், சென்னை, 2001.

26. ஜகன்நாதன், கி.வா., **திருக்குறள் ஆராய்ச்சியுரை**, (ப.ஆ) இராமகிருஷ்ணா மடம், கோவை, 2000.

27. Romilathaper, **Early India**, Penguin Publishers, 2010.

28. Edward Ablert, **History of English Literature**, Oxford University Press, 2000.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
படைப்பு நெறிமுறைகள்	150.00
Comparative Studies in Literary Cultures	100.00
Sangam Classics : New Perspectives	105.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள்	100.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம்	170.00
கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை	45.00
தமிழ் நாடக வகையும் வரலாறும்	110.00
வா.செ.கு.என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1	85.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2	75.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1	125.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல்	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல்	95.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல்	190.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல்	90.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல்	55.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல்	120.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.)	65.00
வல்லம் புராணம்	200.00
இதழியல் உலகம்	120.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	60.00
படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு	100.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும்	85.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	115.00
பெயரியல்	55.00
தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை	45.00
தலித் அறம்	45.00
பொதுவுடைமை இயக்க இதழ்கள்	115.00
தமிழில் இதழியல்	270.00

736 மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் பன்முக ஆளுமை 50.00